
# நால்வர் நெறி



கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

TAILORS OF DISTINCTION!

COME TO

# SWANK

FOR THE SWANKIEST

of

**SUITS SLACKS & SHIRTS**

Be Swankey in Clothes by Swank

# SWANK

47, HOSPITAL ROAD, COLOMBO - 1.

## சிறப்பு மலர் 4

# நால்வர் நெறி

கௌரவ ஆசிரியர் :
சைவ இளவல் சி. திருநாவுக்கரசு

ஆசிரியர்கள் :
க. பாலசுப்பிரமணியம்
வ. இ. இராமநாதன்
சு. லிங்கேஸ்வரன்

பதினாறாவது ஆண்டு நிறைவு விழா

கொழும்பு,
கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்
131, கியூ வீதி, கொழும்பு 2.



# NAALVAR NERI

*Hony. Editor :*
**Saiva Elaval S. Thirunavukarasu**

*Editors :*
**K. Balasubramaniam**
**V. R. Ramanathan**
**S. Lingeswaran**

***SIXTEENTH ANNIVERSARY CELEBRATION***

Colombo,
Kompaniththeru Saiva Munnetta Sangam
131, Kew Road, Colombo 2.

# 1969

COLLORS OF DISTINCTION

COME TO

SWANK

FOR THE SWANKIEST

SUITS, SLACKS & SHIRTS

Swankey in Clothes by Swank

SWANK

47, HOSPITAL ROAD, COLOMBO 1

எமது சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட

# சமயப் பெரியார்கள் வழங்கிய வாழ்த்துரைகள்

"முன்னேற்றம்" பெயரில் இல்லாமல் — நடைமுறையிலும் முன்னேற்றம் பெற்று விளங்க வேண்டும் என்பது நமது விருப்பம். அறுபத்து மூன்று நாயன்மார்கள் தொண்டு நெறியினை மேற்கொள்வீர்களாக.

28-9-69 — குன்றக்குடி அடிகளார்.

இலைமறை காய் போலிருந்து நீவீர் செய்யும் தொண்டை இந்த நாடு அறியும் நாள் வந்தே தீரும் — உமது சேவை இந்த நாட்டு மக்களுக்கு அரியதோர் உதாரணம்.

2-10-69 — வழக்கறிஞர். மு. திருநாவுக்கரசு.

இன்று காந்தி மகானின் விழாவைக் கொண்டாடுவதற்காக தொண்டரணியைச் சேர்ந்தோர் பலர் சிரமதானம் செய்தார்கள். இதோடு சேர்ந்து கோயிற் பணியை ஒவ்வொரு போயாவின் முன்நாள் நாங்கள் எல்லோரும் அதிக முயற்சியுடனும் மனமகிழ்ச்சியுடனும் செய்வோமாக.

2-10-69 — ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்தராஜா.

இன்று நவராத்திரி விரதாம்பத்தன்று "துர்க்கை வழிபாடு" பற்றி செல்வி இந்திராணி கண்ணலிங்கம் சொற்பொழிவாற்றினர். பராசக்தியின் விரத காலத்தில் தீண்டாமையை ஒழிப்போம் என்றதை விரதமாக பூணுவோம் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டோம். பராசக்தியின் அருளை இவ்விடத்தில் வேண்டினோம்.

12-10-69 — இந்திரா ஸ்ரீ ஸ்கந்தராஜா சிவயோகம்.

இந்த நவராத்திரி தினத்திலே வழிபாட்டில் பங்குகொண்டு மகிழும் வாய்ப்பை எனக்களித்த கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தாருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். உணர்ச்சிமிக்க, எழுச்சிமிக்க, இலட்சியவாதிகளாகிய மேற்படி சங்க அங்கத்தினர், சைவ உலகினரின் பாராட்டுதலுக்கு உரியவர்கள். அவர்களின் ஊக்கமும் ஏற்றமும் மேன்மைபெற எல்லாம் வல்ல அன்னை பராசக்தியின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

12-10-69 — செல்வி. சின்னையா.

அம்பிகை வழிபாட்டு நாளாகிய மூன்றும் நாள் சமுகமளித்திருந்தேன். சைவ முன்னேற்றச் சங்கம் செய்து வரும் தொண்டுகளைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இவர்களைப் போன்ற ஊக்கம் மிக்க சைவ வாலிபர் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தோன்றித் தொண்டாற்றிவரின் சைவம் தழைக்குமென்பதில் சந்தேகமெதுவுமில்லை. இச் சங்கம் இன்னும் வளர்ந்து நல்லாதரவு பெற்று வளர்ந்து வர அம்பிகையிடம் வேண்டுதல் பண்ணுகின்றேன்.

14-10-69 செல்வி. வ. கணபதிப்பிள்ளை.

நவராத்திரி விழாவின் 6-ம் நாளாகிய இன்று — ஐப்பசி மாதம் முதலாம் நாளும் வெள்ளிக் கிழமையன்று — முருகன் தரிசனம் பெற்று இந்த விழாவில் பங்கு கொள்ள வைத்த இறைவனுக்கு வாழ்த்தி அதற்கு உறுதுணையாக நின்ற சைவ முன்னேற்றச் சங்கத்தாருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். இப்படியாகிய சமயத் தொண்டை — சிறுர்களுக்கு சமயக் கல்வியையூட்டும் பணியைத் தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். வாழ்க இச் சங்கம். வாழ்க சைவம்.

17-10-69 — மு. பசுபதி

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.

— திருநாவுக்கரசர்

உங்கள் தேவைக்குரிய எல்லாவித

மோட்டார் உதிரிப் பாகங்களுக்கு

A.M. துரைப்பிள்ளை & சன்ஸ் (சிலோன்) லிமிடெட்
ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**A.M. Durai Pillay & Sons (Ceylon) Ltd.**

Dealers in:

Burma Teak, Motor Spares
Ship-Chandlers &
General Merchants

**27, Canal Row, Colombo - I.**

Telephone: 34318 P. Box 1242 Telegrams: DURYOG

“திருவுங்கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்”

சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் பணியாற்றும்

## சைவ முன்னேற்றச் சங்கம்

பல்லாண்டு வாழ்க! வளர்க!!

என வாழ்த்துகின்றோம்.

V

# ANANDA STORES

105, Bankshall Street,
Colombo - 11.

T'phone: **27643** Cable: **"VINAYAGAR"**

பால்வளர் வெண் ணீற்றுப் பரமன் அருள்விளக்கும்
"நால்வர் நெறி" யை நயந்துதவும் - வேல்வளரும்
தண் கொழும் பனிவீதிச் சைவமுன்னேற் றச்சங்க
வண் கருணை வாழி வளர்ந்து.

# OPATHA & CO.,

13 & 15, St. Johns Road,
COLOMBO.

"மங்களம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

*Specialist for*

**WEDDING SAREES AND
SILK VETTI SETS**

Visit to

# M. VETHANAYAGAM

49, SEA STREET,
COLOMBO 11.

T'Phone: 26241

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" — சுந்தரர்.

நால்வர் நெறி
தமிழ் இனத்தின் தலையாய நெறி !

நால்வர் நெறி
இணையற்ற இன்ப நெறி ! !

நால்வர் நெறி
நன்மை பெருகு அருள் நெறி !!!

நால்வர் நெறி
இருளகற்றும் நன்னெறி !!!!


நால்வர் நெறியினைப் பேணி வளர்க்கும்நோக்குடன்
தோன்றியுள்ள கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச்
சங்கத்துக்கு எமது பாராட்டுக்கள் !
எமது வாழ்த்துக்கள் ! !

ELEPHANT BEEDI COMPANY

154, SIR RATNAJOTHI SARAVANAMUTHU MAWATTE,
COLOMBO - 13.

T'phone : **31651**

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலனா டொறும் நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே."
— திருநாவுக்கரசர்

# Cheapest House for
# QUALITY TEXTILES
# in
# Latest Designs

# RATNA STORES

No. 128, 3rd Cross Street,
Colombo - 11.

T'phone : 26716

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"
— வள்ளுவர்

With Best Compliments from

# SIGIRI TRADERS

No. 102, 2nd Cross Street,
COLOMBO - 11.

Dealers in TEXTILES

**Hosiery & Readymade Garments**

T'phone : 22282

ஓ

# நால்வர் நெறி

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்"

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| வாழ்த்துப் பாமாலை | — | சேந்தன் - சிவன் |
| நாம் போற்றும் நால்வர் நெறி | — | காசி நாதன் |
| அன்புக் காணிக்கை | — | ஆசிரியர்கள் |
| ஆசிரியர் குரல் | | |
| ஆதரவாளர் ஆசிச் செய்தி | — | பேராசிரியர். அ. சின்னத்தம்பி |
| ஆதரவாளர் ஆசிச் செய்தி | — | மூதவை உறுப்பினர் த. நீதிராசா |
| தொண்டரணிக் காவலர் வாழ்த்து | — | கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீஸ்கந்த ராஜா |
| நிர்வாக சபை உறுப்பினர் | — | 1968—1969 |
| பாமாலை | — | க. கந்தசுவாமி |
| கந்தபுராணப் பெருமை | — | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை |
| அந்தரங்க பக்தி | — | திருமுருக கிருபானந்த வாரியார் |
| செந்தில் முருகன் வருகை | — | கி. வா. ஜெகந்நாதன் |
| அன்பே சிவம் | — | தமிழ்ப் பண்டிதை M. S. தனம் |
| சுந்தரர் கொண்ட தோழமை | — | பண்டிதர் சு. கதிரவேலு B.A.(Lond) M.A.O.(Cey.) |
| வாசகர் காட்டும் முத்திநெறி | — | செந்தமிழ் மாமணி மு. வயிரவப்பிள்ளை |
| தமிழ் விரகர் ஞானசம்பந்தர் — | | |
| காதலர்களுக்கு நல்ல வழிகாட்டி | — | செ. தனபாலசிங்கம் B.A. (Lond) |
| சுழற்காற்றிலே சமயம் | — | பண்டிதர் சி. சேதுகாவலர் M.A., B.O. L., B. T. Dip. in ED.Psych Dip. in Politics |
| இவ்வாறு இறைவனை இறைஞ்சுவோம் | — | ம. சி. சிதம்பரப்பிள்ளை |
| சேக்கிழார் நாயனர் | — | ரமணி ராஜகோபால் |
| அலைகடல் பிரித்தாலும்-அன்பு மறவோம் ! | — | சை. மு. ச. |
| சைவ சமய வாழ்க்கையின் குறிக்கோள் | — | தி. நவநீதன் |

# மாணவர் பகுதி


| | | |
|---|---|---|
| நால்வர் காட்டிய அன்புவழி | — | செல்வன். ஆ. சிவராம் |
| சம்பந்தன் அளித்த சிவநெறி | — | செல்வி. தயாளரஞ்சனி தம்பித்துரை |
| வள்ளுவன் வகுத்த வழி | — | செல்வன். ந. சிவராசா |
| ஆளுடைபிள்ளை | — | செல்வன். இ. இராஜேந்திரன் |
| மார்க்கண்டேயர் | — | செல்வன். ந. சிவபாலன் |
| கண்ணப்ப நாயனுர் | — | செல்வன். க. இலங்கேஸ்வரன் |


★ ★ ★


| | | |
|---|---|---|
| மாணவர் இல்லங்கள் | — | |
| நால்வர் சமயபாடசாலை | — | கௌரவ பாடசாலைச் செயலாளர் |
| நால்வர் நூலகம் | — | கௌரவ நூலகப் பொறுப்பாளர் |
| நால்வர் சமயபாடசாலை பெறுபேறுகள் | — | *1969* |
| கொழும்பு விவேகானந்த சபை பெறுபேறுகள் | — | *1968* |
| நாவலர் தினப் பேச்சுப் போட்டி முடிவுகள் | — | *1969* |
| நாவலர் தினப் பேச்சுப் போட்டி பரிசுகள் அன்பளித்த அன்பர்கள் | — | *1969* |
| மாணவர் மன்ற அறிக்கை | — | மன்றச் செயலாளர் |
| தொண்டரணி அறிக்கை | — | கௌரவ தொண்டரணிச் செயலாளர் |
| சமயப் பிரச்சார சபை | — | கௌரவ சமயப் பிரச்சார சபைத் தலைவர் |
| 16-வது ஆண்டு அறிக்கை | — | *1968 - 1969* கௌரவ பொதுச் செயலாளர் |


எமது சங்கத்தின் பதினுறுவது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலராகிய "நால்வர் நெறி", 31-12-69ல் வெளியிட இருந்தபோதும், சில தவிர்க்க முடியாத காரணங்களால், அக்கால எல்லைக்குள் வெளியிட முடியாமற் போனதையிட்டு மனம் வருந்துகின்றோம்.

சை. மு. ச.

ஓம்

# வாழ்த்துப் பாமாலை

**சேந்தன் — சிவன்**

★

**சிவாய நம**

சிவன் அடி தொழுதெ ழூஉம் சிறுவர் பலர் கெழீஇ
பவந் தொலை பணியிற் பற்றி நின்று ஆங்கு,
கொம்பனித் தெருவெனக் கூடுமங்காடியில்
சைவ முன்னேற்றச் சங்கம் சமைத்து
தெய்வ வேள் முன்னிற் தெளிவுறக் கூடிப்
பல்லாண்டு சைவப் பணியினில் முற்றியும்,
நல்லாண்டு நான் கினில், நால்வர்நெறியெனும்
சொல் லாண்ட செஞ் சொற் பனுவலை மலர்த்தியும்
பண்புற, அன்புறப் பகருநல்ல றமுறச்,
செந்தமிழ் சிவணிய சைவநூல் ஓதியும்,
பைந் தமிழ்ச் சிறுஅரைப் பயிற்றியும் ஊக்கியும்,
பரிசு வழங்கியும் தரிசு கெட நெஞ்சில்
குரிசிற் குரவர் நால்வர் கொள் கையால்,
உரனுறு சைவத் தோடோங்கு தமிழ்வளர்த்து.
வரனாய மைந்த இம்மலரினைச் சிரஞ்சேர்த்து
வணங்கியெம் அன்பர்க்கு வழங்கும்!
இணங்கி ‘‘ நால்வர் நெறி’’ யென நின்றென்.

# நாம் போற்றும் நால்வர் நெறி

**காசி நாதன்**

நால்வர் சொன்ன வார்த்தையது
நமச்சிவாய மந்திரமாம்
நால்வர் சென்ற மார்க்கமதே
நாமுஞ் செல்லும் மார்க்கமம்மா!

சைவம் வளர ஒரு சங்கம்
செய்ய வேண்டி நாம் ஒன்ருய்
கூடிவகுத்தோம் ஒரு பள்ளி
கூவி ஒலித்தோம் குக நாமம்!

சேரி வாழும் சிறுவர்களும்
சாரி சாரியாக வந்தார்
சேர்ந்து பயின்ருர் சிவ நாமம்
செம்மை வாழ்விற்கொரு நாமம்!

அன்பர் அடியார் கூடி வந்தார்
அவையைக் கண்டு அதிசயித்தார்
அரும்பும் சைவ இளசுகளின்
அறிவைக் கண்டு மலேத்திட்டார்!

வளரும் இளேஞர் வகுத்திட்ட
வழகு இயக்கம் நிதம் வாழ
தந்தோம் துணேக்கை தாம் என்றே
தாமும் சேர்ந்தார் பல தலேவர்!

வளர்ச்சி கண்டு பூமகளும்
மலர்ச்சி கண்டு மாமகளும்
ஒருங்கே வந்த கலேமகளும்
ஒன்ருய் வாழ்த்த நாம் வாழ்ந்தோம்!

மதிதான் ஒன்றை நிேனத்திட்டால்
விதியும் அதனே புரட்டிடுமே
புவியின் இயற்கை நியதியிது
பவிய எம்மைச் சூழ்ந்ததுவே!

சூழும் துயரும் சூழ்ச்சிகளும்
சூட்சுமப் பொருளின் முன்னுலே
சூனியமாக மாறி விட்ட
சூத்திரம் நாமும் கண்டுகொண்டோம்!

சூரன் தலேயை சுண்டி விட்ட
சூரனே திரு முருகன்
பாதம் பணியும் பாலர் எமை
பாராதிருத்தல் முறையாமோ!

நால்வர் நெறியில் நாம் வாழ
நால்வர் பள்ளி தான் வளர
நானிலம் எங்கும் களிகூர
நாதா நயந்து காத்திடுவாய்!

# நால்வர் நெறி

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

சௌமிய ஆண்டு மார்கழித்திங்கள் பதினூரும் நாள் மலர் 4

எமது சைவ உலகம் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகப் பக்தர்கள், அடியார்கள், தொண்டர்கள், ஞானிகள் தம்மால் இயன்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

அன்பை வளர்க்கும் அறச்சாலைகளிலும், அந்தணர் பூசிக்கும் ஆலயங்களிலும், அமைதி நிலவ வேண்டிய ஆச்சிரமங்களிலும், அடியார்கள் கூட்டும் சங்கங்களிலும், தொண்டர்கள் பணிபுரியும் சேவா நிலையங்களிலும், பிராமணர் தீவளர்க்கும் யாக கூடங்களிலும் பலதரப்பட்ட முரணை கருத்துக்களால் உந்தப்பட்ட உள்ளங்கள் இறைவன் திரு நாமத்தை உச்சரித்துக்கொண்டே ஒருவரோடு ஒருவர் மோதுவதை நாம் கவனிக்கின்றோம்.

சாதி, மொழி, தொழில், வழிபாட்டுமுறை, உணவு, ஆசாரம், கலாச்சாரம், அறிவு முதலிய துறைகளில் அதிகமாகக் கருத்து வேற்றுமையும் முரண்பாடும் காணப்படுகின்றன. இத்தகைய முரண்பாடுகளை எங்ஙனம் ஒழுங்கு நிலைக்குக் கொண்டுவருவது என ஒவ்வொரு நல்ல உள்ளமும் துடிக்கின்றது. ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற முயற்சிகளில் ஈடுபட்டுச் சைவ சமுதாயத்தைச் சீர்திருத்த முன்னின்று உழைப்பது பாராட்டத்தக்க செயலாகும்.

சேக்கிழார் தந்த பெரிய புராணம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்ப்பு வழங்குகின்றது. இறைவன் அருளைப் பெறுதற்கு ஒருவர் செய்யும் தொழில், பயிலும் மொழி, செலுத்தும் வழிபாட்டு முறை, குலப்பிறப்பு, கற்கும் கல்வி, உணரும் ஞானம் தடையாக இருப்பதில்லை. நாயன்மார்கள் அறுபத்துமூவரும் ஒரே குலத்தவரும் அல்லர்; ஒரே தொழிலைச் செய்தவருமல்லர்; எல்லா மொழிகளையும் கற்றுக் கலங்கினவர்களும் அல்லர். ஆனல் அனைவரிடமும் சிவபெருமானை அடையவேண்டும் என்ற பேரவா இருந்தது. தணியாத அந்த ஆசை அவர்களை முத்தி இன்பத்திற் சேர்த்தது. வேதங்களாலும், ஆகமங்களாலும், அளவைகளாலும் அறிய முடியாத சிவபெருமான் அவர்கள் இருக்கும் இடந்தேடி, அடியார்க்கு எளியராய் உருவத் திருமேனி தாங்கி அருள்புரிந்தார். எனவே நாயன்மார்கள், அரசன் முதல் ஆண்டிவரை அந்தணர் முதற் புலையன் வரை எல்லோராலும் துதிக்கப்படுகின்றார்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஞான குருவைத் தேடிச் சென்ற மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் திருப்பெருந்துறையிலே, குருந்தமர நிழலிலே, குருவடிவாக எழுந்தருளி, ஞான தீட்சை அளித்து ஆட்கொண்டார் அன்று கல்லால மரநிழலில் நால்வர்க்கு ஞானோபதேசஞ் செய்த ஞானமூர்த்தி. கோவில் குளக்கரையில் ஆதிப் பரம் பொருளை வேண்டி அழுத குழந்தைக்கு

ஞானப்பால் அளித்துத் திருஞானசம்பந்தனுகச் செய்தார். பரமனேயே காணவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இருந்த மருணீக்கியாரை மறைந்து நின்று திருநாவுக்கரசராக்கினுர். உலக ஆசைகளில் மனதைத் திரிய விட்ட சுந்தரரைத் தடுத்து ஆட்கொண்டார். நாயன்மார்கள் தத்தம் வழியே செல்ல இறைவன் தானுகவே வந்து அவர்களை ஆட்கொண்டு அருள் செய்தார்.

சிவ சிந்தனேயில் மூழ்கியிருந்த நாயன்மார்களிடத்தில் சிவகாருண்ணியம் மேலோங்கி வளர்ந்ததால் சிறு உயிர்களும் அவர்களுக்குச் சிவபெருமானை நினைவு படுத்தும் சிறப்புச் சின்னங்களாக விளங்கின. பார்க்கும் இடமெங்கும் அந்த மங்கள சொரூபியாகிய சிவபெருமானின் அருள் நீக்கமற நிறைவாகி, இருப்பதை உணர்ந்தனர். அவர்களுக்குத் தாழ்ந்த வர் யார்? உயர்ந்தவர் யார்? என்ற வேறுபாடு தெரியவில்லை. எந்த மொழியாலும் சிவனே முழுமையாக விளக்க முடியாமைகண்டு தம் சொந்த மொழியாகிய தேமதுரத் தமிழ் மொழியாலே பாமாலை தொடுத்துத் தேவார திருவாசகங்களைத் தந்தனர். சிவஞானச் செல்வர்களின் திரு முயற்சி யால் தமிழ் தனித்தியங்கும் தெய்வ மொழியாகியது. எம்மொழிக்கும் இறைவன் சம்மதம். அவர் எல்லோர்க்கும் தந்தை. தாயனைய சிவ நெறியிற் தவறுகளுக்கு இடமில்லை. ஒன்றே குலம்-ஒருவனே தேவன்; யாமார்க்கும் குடியல்லேம்; நாம் செய்யும் தொழில் எமது இருவினையை நீக்குவதற்காக இறைவனுற் தரப்பட்டதன்றி எம்மை பேதப்படுத்துவதற்காக அன்று. எத் தொழி லாக இருப்பினும் அதனைத் தன் ஆத்ம திருப்திக்காக, இறைவனுக்குச் செய்யும் பூசையாக, தொண் டாக நாம் கணிக்க வேண்டும். இறைவனுல் எமக்குத் தரப்பட்ட தனு, கரண, புவன, போகங்கள் எமது மும்மலம் கழுவுவதற்காகவே என நினைந்து சகல பந்தங்களிலும் இருந்து நாம் விடுபட வேண்டும். நாம் வாழும் வீடு, தொழில் செய்யும் இடம், கூடும் திருச் சபைகள், சங்கங்கள் பணி புரியும் சேவா நிலையங்கள், பூசிக்கும் ஆலயங்கள் சிவம் வாழும் கோவில்களாகும். அங்கு எந்த வேற்றுமைகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

ஆலயங்கள் சிவ நினைவை உண்டாக்கும் சிறப்புச் சின் னங்களாக அமைந்திருக்க சிவஞானம் பரவுதற்குச் சங்கங்கள் இயங்க வேண்டும். ஆலயங்கள் வழிபாட்டு முறையில் அமைந்திருக்கச் சங்கங்கள் புராண இதிகாசங்களையும், தோத்திர - சாத்திர நூல்களையும், பன்னிரு திருமுறைகளையும் பரப்பி எல்லா உள்ளங்களிலும் சிவஞான மெய்யுணர்வை மலிந்திருக்கச் செய்ய வேண்டும்.

இந்தத் திருத் தொண்டை நாயன்மார்கள் திருத் தலங்கள் தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடித் தொடக்கி வைத்திருக்கிறுர்கள். அவர்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாமும் நமது சைவ சமுதாயத்தைச் சீர்திருத்தி வாழ்வோமாக.

வாழ்க சைவ நீதி!

வளர்க நால்வர் நெறி!

உ

கொழும்பு - கொம்பனித்தெரு
சைவ முன்னேற்றச் சங்கத்தாரால்

கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்
21-7-1967 ல் பிரதிட்டை செய்யப்பட்ட

# "நால்வர் விக்கிரகங்கள்"



**இந் நால்வர் விக்கிரகங்கள்**

கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்

மேற்படி சங்கத்தின் ஆதரவில்

அமைக்கப்பட்டு வரும் நால்வர் கோவிலில் விரைவில்
பிரதிட்டை செய்து வைக்கப்படும்.

# அன்புக் காணிக்கை

உங்கள் அன்புக் கரங்களில் வந்துலவும் நறுந்தேன் பிளிற்றும் ''நால்வர் நெறி'' என்ற இம் மலர், இதயதாமரையை மிகவும் மலரச் செய்யும் என்ற நம்பிக்கை எமக்குப் பிறந்தால், அது ஒன்றே எங்கள் முயற்சிக்கு முடி சூட்டியது போலாகும்.

பதினொருவது பராயத்தைத் தாண்டி பூரண உருவம் எடுக்கும் இச் சுபநாளில் எமது சங்கம் ஆற்றிய நற்பணிகளை நாம் எடுத்துரைப்பதிலும் பார்க்க, கொழும்பு வாழ் சைவ மக்கள் சாலவும் சாட்சி பகர்வர்! நறுமலர்கள் மலர்ந்து மக்களையும் மலரச் செய்வதில் ''நால்வர் நெறி'' நாலாவது மலராக வெளிவருவது எமது சங்கத்தின் வெற்றி நடைக்கு ஓர் கொடி கட்டியதற்கு ஒப்பாகும்.

இம்மலரைச் சிறப்பும் வனப்பும் ஒருங்கே அமைய கைதந்துதவிய சைவப் பெருமக்கள் யாவரும், வழிவழி வந்த சைவப் பெருமக்களாவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயாவின் வழிவந்த, எமது அன்புக்குரிய பண்டிதமணி சி. க. அவர்கள், தித்திக்கும் திவ்விய கந்தபுராணத்தின் பெருமையை, தமக்குரிய தனி நடையில் விளக்குகின்றார்கள். மாறி மாறி மோதும் அலைகடல் போல் தீந்தமிழ் மணிகளைக் கட்டி, திருமுருக கிருபானந்தவாரியார், அபூர்வமான கட்டுரை ஒன்றைத் தந்துள்ளார்கள். எல்லாம் முருகன் என அன்புமுகத்துடன் எம்மிடை வந்து எம்மையெல்லாம் அன்பினாலாளும் ''கலைமகள்'' ஆசிரியர், தமது சொத்தான ஆறுபடை வீடுடைய வேலனை ''செந்தில் முருகன் வருகை'' என்ற வாசல் மூலமாக அழைக்கின்றார்கள். ''அன்பு'' ஒருவருடைய தனிச் சொத்தன்று என்றதனை எளிதில் விளக்க பண்டிதை, திருமதி எம். எஸ். தனம் அவர்கள் ''அன்பே சிவம்'' என்ற மந்திரத்தை விளக்குகின்றார்கள்.

இவர்களுக்கெல்லாம் அன்பு வணக்கம் சொல்லுகின்றோம்.

மலர் இன்னும் பல மென் இதழ்களைப் பரப்பி — சுந்தரரையும், வாசகரையும், தமிழ் விரகரையும் காட்டிய சைவப் பெருமக்கள் எம் மத்தியில் எங்களுடன் நற்பணிகள் பல செய்யும் சைவ சீலர்கள்! இவர்களனைவரினதும் அரிய படைப்புக்களுடன் வெளிவரும் ''நால்வர் நெறிக்கு'' நல்லாசி வழங்கும் எமது சங்ககாப்பாளர்களான பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி அவர்கட்கும், மூதவை உறுப்பினரும் — கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான திரு. த. நீதிராசா அவர்கட்கும் எமக்கெல்லாம் நல்வழி காட்ட வந்த குழந்தையுள்ளம் படைத்த தொண்டரணிக் காவலர் கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்த ராஜா அவர்கட்கும், அன்பு வணக்கம் சொல்லுகின்றோம்!

''அமிற்றி அச்சக'' நிறுவனத்தாரின் அதிசய ஆற்றலை எமது உள்ளம் அறியுமேயன்றி எமது பேனா அறிந்து உரைக்கும் ஆற்றல் அற்றது. எமது சங்கத்தின் புனித நோக்கத்தையே மனத்தில் பதியவைத்து, இந்தப் பெரிய கைங்கரியத்தை இவ்வளவு அழகாக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அச்சேற்றித் தந்த அமிற்றி அச்சக நிறுவனத்தாருக்கும் பணியாள அன்பர்களுக்கும் எம் அன்பு வணக்கம்.

ஈற்றில், இம் மலருக்கு மறைமுகமாக பேருதவி தந்த (விளம்பரம் மூலம்) வணிகப் பெருமக்களுக்கு எமது சங்கம் என்றும் நன்றிக் கடமைப்பாடுடையது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும்
முத்துக்குமரனும் - கொம்பனித் தெரு
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின்
பொன்னார் பூங்கழல்களுக்கு

எம் அன்புக் காணிக்கையாக இம் மலரை அர்ப்பணிக்கின்றோம்.

வணக்கம்

31-12-69

ஆசிரியர்கள்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நம் சமய ஆசாரியர்கள் நால்வர்



காஞ்சீபுரம், தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம்

## சீல ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்களது அருளுரை

சைவம் எல்லாச் சமயங்களைப் போல ஒன்றன்று. அது சமயாதீதம். அச்சமயாதீதப் பழம்பொருள் சிவம். அச்சிவமே காண்டற்கு அரிய கடவுள். நம்மாலும் பிறராலும் அக் கடவுளைக் காண்டல் இயலாது. அரியர் எனக் கருதி அடைய முயலாமல் இருப்பதும் தக்கது அன்று. நாம் முயன்றாலும் அதன் அருள் இன்றி அதனைக் காண்டல் இயலாது. அதனால், தன்னை நமக்குக் காட்ட இரக்கம் உற்று, அதுவே தன் அருளையுருவாய்க் கொண்டு நமக்குத் தன்னைக் காட்டுகின்றது. அக் காட்சியைப் பெற நாம் ஒன்றே ஒன்று செய்தல் வேண்டும். அதுதான் அதைப் பெற வேண்டுமென்று அழுத்தமாகக் கருதுவது. அப்படிக் கருதுவோர்க்கே அஃது ஆற்றவும் எளிது ஆகும். ஆதலாற்றான், திருநாவுக்கரசு நாயனார்,

> ''காண்டற்கு அரிய கடவுள் கண்டாய்
> கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்''

என்று அருளினார்.

அக் காண்டற்கரிய கடவுள், தன்னை நாம் காண-நமக்குக் காட்டத் தானே குருவாயும், இலிங்கமாயும், ஐங்கமமாயும் உருக் கொண்டு வந்து காட்டி நம்மை ஆட்கொள்கின்றது. அது ''குரு லிங்க ஐங்கமம்'' என்றதால் விளங்கும்.

குருவாய் வருதல் முதலாவது. அவர் இலிங்கத்திலும், ஐங்கமத்திலும் சிவ வழிபாடு செய்து உய்யும் வழியைக் கற்பிப்பவர். குரு நமக்குக் கற்பித்தருளியவாறு தாமும் சிவலிங்கத்

தையும், சிவனடியாரையும் வழிபட்டுக் காட்டுவார். அது பற்றியே சிவலிங்கத்தையும் சிவனடியார் வேடத்தையும் வழிபட்டார்கள் நம் சைவ சமயாசாரியர்கள். முதலாய குருவும் அகக்குரு, புறக்குரு என்று இருதிறத்தராவர், அறியாமை உள்நின்று அளித்த குரு அகக்குரு. அக் குருவே புறத்தில் நாம் காணும் குறியாகி நீங்காத கோவாய் வந்தருள்வார்.

''அறியாமை உள்நின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ''

எனத் திருவருட்பயன் உணர்த்துவது உணர்க.

அகக்குரு பராசக்தி முதலிய சக்தி பேதங்களுடன் உயிர்க்கு உயிர் ஆகிவிளங்கி உபதேசிக்கின்ருர். புறத்திலே வடிவங்கொண்டு வந்த குரு, நம் கண் முன் எழுந்தருளியிருந்து நம்மை ஆட்கொண்டு மும்மல நீக்கமும் - செம்மலர் நோன்ருட் சேரும் ஆக்கமும் அருள்வார். புறக் குரு நம் கண்முன் தோன்றினும், அவரது அகத்தேயுள்ள குரு நம் கண்முன் தோன்ருர். திருஞான சம்பந்தர் முதலிய நால்வரும் நாம் முன்பெற்ற புண்ணியப் பயனுக முன்னிற்பவர்கள். அவர்க்கு உள்ளே இருந்து அவரை ஆண்டருளிய குருவின் திருமேனி (அகக் குரு வடிவு) நமக்குத் தெரியாது. அவர் உள்ளம் கவர் கள்வன் அவர்க்கு வெளிப்பட்டான். நமக்கு வெளிப்படவில்லை. நம் உள்ளம் கவர் கள்வனைக் குருவே காட்ட வல்லவர். அகக் குருவை வழிபட்டு அருள் பெற்று அதனை மறவாது பாடிய திருப்பதிகங்கள் அளவில்லாதன. அவற்றுள் ''தோடு'' ''கூற்று'' ''பித்தா'' எனத் தொடரும் திருப்பதிகம் மூன்றும், (மூவரும்) குருவருள் பெற்றுப் பாடியவை. அதனுல் அகத்தியர் தேவாரத் திரட்டின் வரலாறு கூறும் திருவகவல் ''தோடு, கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருள் ஆகும்'' என்று உணர்த்துகின்றது.

இரண்டாவது சிவலிங்கம். அது விளங்கும் இடம் திருக்கோவில். அக் கோவிலுக்குச் செல்லத் தூய்மை வேண்டும். அதனுல் திருக்குளம் (தீர்த்தம்) அக் கோவிலைச் சார்ந்து உள்ளும் புறமும் இருக்கும். அது தலத்தை அடைந்தபின் கிடைக்கும். முன்னர்த்தலத்தை வழிபட்டு, பின்னர்த் தீர்த்தமாடி முடிவில் சிவலிங்கத்தை வழிபட்டு, உய்ய வேண்டும். இதைத் தாயுமானவர் ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்ருர். இதனுல் உயிர்க்குக் குருவே துணை என்பது விளங்கும். குருவருள் இன்றேல் திருவருள் இல்லை.


மூன்ருவது ஐங்கமம். இது திருவேடம் சிவவேடம் எனப்போற்றப் பெறும். இவ் வேடத்தையும் முன்னைச் சிவலிங்கத்தையும் (ஆலயத்தையும்) சிவமாகவே தொழல் வேண்டும்.

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' (நேயம்-ஞேயம்) என்றது தமிழ் ஆகமம். நால்வர் பெருமை ஓரளவு இதனுல் விளங்கும். சைவர்கள் தங்கள் சமயாதீதமாகிய நெறியில் வழுவாது நின்று நால்வராகிய நம் சமயத்தின் ஆசாரியர்களை வணங்கிச் சிவனடி நிழலின்பம் பெற்றுப் பேரின்ப வாழ்வு பெறுவார்களாக!

**உள்ளத் திருந்தும் ஒளித்தான் பரன் குரவன்**
**கள்ளந் தவிர்த்து அவனைக் காட்டினுன் வள்ளல்**
**அருவான கோலமோ அன்றி அவ னுன**
**குருவான கோலமோ கூறு.**

என்ற உண்மையை உணர்ந்து, குருவேசிவம் ஆதலைத் தெளிந்து நம் சைவ சமயாசாரிய நால்வரையும் சிவமே என்று வழிபட்டு இன்ப வாழ்வு நடத்துவோரே சைவர் ஆவர். இதை உலகர் உணர்ந்து கொள்ளப்பணியால் முயலும் கொழும்பு கொம்பனித்தெரு, சைவ முன்னேற்றச் சங்கத்தின் சிவத்தொண்டு என்றும் நின்று நிலவுக. வளர்க வாழ்க!

# ஆதரவாளர் ஆசிச்செய்தி



செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் நாட்டுக்கு நற்பணியாற்றும் கொழும்பு, கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம், ஆண்டுகள் பதினறு நிறைவு பெற்று திகழ்வதை எண்ணும்போது, இச் சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவன் என்ற முறையில் பெருமிதமடைகின்றேன்.

நால்வர் காட்டிய நெறியிலே தியாக உணர்ச்சியை வளர்த்து தன்னலமற்ற தொண்டில் எம்மை தொழிற்படுத்தும் போது இன்ப அன்பின் பயன் கிடைக்கும்.

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்

என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அப்பர் அருள் வாக்குக்கமைய தொண்டாற்றி வரும் சைவ முன்னேற்றச் சங்கத் தொண்டர்க்கு, பணி பலவற்றை இன்னுந் திறம்படச் செய்வதற்கு ஓர் பணிமனை அவசியம்.

இப் பணிமனையை இத் தொண்டர்க்கு ஆக்கித் தரும் பெரும் பொறுப்பு சைவ மக்கள் ஒவ்வொருவர்க்கும், குறிப்பாக கொம்பனித்தெரு வாழ் சைவப் பெரும் மக்களுக்குச் சாரும்.


பல இனமத மக்கள் மத்தியில் நம் சிறுர்கள் வாழ்ந்த பொழுதும், எமது சமயத்தின் அருமையையும் பெருமையையும் பேணி வாழ்வதற்கு வித்திட்ட கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், தனக்கென ஒரு நிறுவனம் பெற்று பல்கிப் பெருகி பணிகள் பல புரிந்து தன்னிறைவு பெற்றுத் திகழ எல்லாம் வல்ல இறைவனடி இறைஞ்சுகின்றேன்.

வணக்கம்.

பேராசிரியர். அ. சின்னத்தம்பி

**Senator T. Neethi Rajah,**
J. P., M. M. C.

Phone: 32988, 26440
No. 89, New Chetty Street,
Colombo-13.



# ஆதரவாளர் ஆசிச் செய்தி

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் 16-வது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலராகிய இந் ''நால்வர்நெறி'' க்கு ஆசிச் செய்தி அளிப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

தலைநகரில் சிவநெறிக்கும் — செந்தமிழுக்கும் பணியாற்றும் தலைசிறந்த சங்கங்களுள் கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கமும் ஒன்றாகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நாயன்மார்கள் நால்வரும் காட்டும் நெறிகளையே ''நால்வர்நெறி'' என அழைக்கின்றோம்.

''சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் முற்கோலி
வந்திரலேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்து எங்கே''

நால்வர் காட்டிய நல்வழியிலே நாமும் எமது குழந்தைகளும் சென்று வாழ வேண்டும். நால்வர் காட்டிய நெறியில் அன்பே உருவான சிவபெருமான் மீது பக்தி செலுத்த எம்மை நாமே உணர்த்திக் கொள்வோமாக இத்தூய நோக்கை கொண்டு பணியாற்றும் கொழும்பு, கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் மென்மேலும் சிறந்தோங்க என் நல்லாசிகள் !

த. நீதிராசா



# தொண்டரணிக் காவலரின் வாழ்த்துச் செய்தி

“நீதி பேணுவீர், ஆதியன்னியூர்ச் சோதி நாமமே, ஓதி உய்ம்மினே'' என்ற ஞானசம்பந்தர் வாக்குக்கமைய எம்பெருமான் நாமத்தைச் செபித்து, நீதி நெறி வழுவாது, தருமமே கைப்பிடித்து, அவன் புகழையே பாடி அதன் பலனுக தெய்வீக வாழ்வை அடையும் பேற்றைப் பெறுவதை ஒவ்வொரு சைவனும் குறிக்கோளாகக் கொள்ளவேண்டியது அத்தியாவசியம். பெரும் காப்பியங்களான வேதசாஸ்திரங்களின் சாராம்சம் அரிய தீந்தமிழில் எமது அறிவாற்றலுக்கு எட்டக் கூடியவகையில் நாமும் உணர்ச்சி வசப்பட்டு எம்பெருமானுடைய தத்துவங்களை உணரச் செய்து நம் வாழ்க்கையின் பெரும் பேற்றைப் பெறுமாறு வழி வகுத்தவர்கள் நால்வரே. தற்போதைய சூழ்நிலையில் சமுதாயம் திக்குத் தெரியாது கலாச்சாரம், சமயப்பற்றுக் குன்றி, தத்தளிக்கும் நிலையில் நால்வர் நெறி புத்துணர்ச்சியையூட்டி உற்ற துணையாக வழிகாட்டும். மனிதன் குழந்தைப் பராயத்திலும், வாலிபத்திலும், நடுப்பராயத்திலும், முதுமையிலும் இறைவனை அன்பால் கட்டலாம் என்னும் உண்மையை நால்வரில் ஒவ்வொருவரும் காட்டிச் சென்றனர். ஒப்பற்ற இப்பெரு நெறியை வளர்க்கும் நோக்கத்தை மேற்கொண்ட கொம்பனித்தெரு, சைவ முன்னேற்றச் சங்கம் வாழ்க பல்லாண்டு!

**கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்த ராஜா**
*பொறியியல் நிபுணர்*

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நிர்வாகசபை உறுப்பினர்

## பதினேருவது ஆண்டு (1968-1969)

| | |
|---|---|
| காப்பாளர்கள் : | பேராசிரியர் அ. சின்னத்தம்பி<br>திரு. த. சிவலிங்கம் J. P.<br>திரு. ச. ஆறுமுகம் M. I. C. E.<br>திரு. பொ. அழகேசன்<br>திரு. மு. வயிரவப்பிள்ளை<br>திரு. த. நீதிராசா J. P., M. M. C.<br>திரு. அ. நவரத்தினம் |
| தலைவர் : | திரு. வ. சி. செல்லையா |
| உப தலைவர்கள் : | திரு. வை. நா. சோமசுந்தரம்<br>திரு. வே. சண்முகம் |
| கௌரவ பொதுச் செயலாளர் : | திரு. க. பாலசுப்பிரமணியம் |
| கௌரவ துணைச் செயலாளர் : | திரு. சு. லிங்கேஸ்வரன் |
| கௌரவ பொதுப் பொருளாளர் : | திரு. வ. இ. இராமநாதன் |
| கௌரவ துணைப் பொருளாளர் : | திரு. சி. விமலநாதன் |
| கௌரவ சமயச் செயலாளர் : | திரு. வே. பெரியசாமி |
| கௌரவ பாடசாலைச் செயலாளர் : | திரு. வ. செல்வரத்தினம் |
| நிர்வாக சபை : | திரு. தி. பாலசுந்தரம்<br>திரு. ந. பெ. சதாசிவம்<br>திரு. இ. இராயேந்திரராஜ்<br>திரு. ச. சாம்பசிவம்<br>திரு. அ. கந்தையா<br>திரு. வே. பரமலிங்கம்<br>திரு. சு. கந்தையா<br>திரு. வே. சுப்பிரமணியம்<br>திரு. மா. குமாரசாமி |
| கௌரவ கணக்கு பரிசோதகர் : | திரு. ஈ. இராசரத்தினம்<br>திரு. க. தியாகராசா |

# கொம்பனிவீதிக் கந்தவேள் பாமாலை



அம்பிகை புதல்வா அரிதிரு மருகா முருகா
தும்பி மாமுகன் தம்பியே தொழும்பர் பணிந்திட
இம்பரின் நடுவண் எழிலா ரிலங்கைக் கோநகர்க்
கொம்பனி வீதியிற் கோயில் கொண்ட குமரனே !

எந்நாட் டவரும் போற்றும் இணையிலாத் தலைவன்
இந்நாட் டறிஞன் இராம நாத வள்ளல்
அந்நாட் பரவ அருளினை அரனருட் செல்வா
நந்நாட் டருள்சேர் கொம்பனி வீதிக் குருபரனே !

சங்கத் தமர்ந்து தண்டமிழ் வளர்த்த சண்முகா
அங்கப் பிரணவம் அரனார்க் கருளிய அண்ணலே
எங்கும் பொருள்நிறை நிறுவனம் பொலிந்தே எழில்செய்
கொங்கு லாவுநற் கொம்பனி வீதிக் குகனே !

இந்து மாக்கடல் இருநிலத் திருந்தே இன்னல்
தந்த அசுரரை அடர்த்து வடபால் இலங்கை
வந்தே அகிலம் வாழ அருளது வழங்கும்
கந்தா கடல்சேர் கொம்பனி வீதிப் பெருமானே !

கொழும்புக் கொம்பனி வீதிக் கோலக் கோவிலில்
முழுநிறை யுளத்தராய் உத்தமர் பரவ உவந்தே
விழுமிய மஞ்சை தன்னில் விரியொளி வேலினோடு
தொழுதிடும் உருவு கொண்டாய் தொன்முது கடவுளே !

அறுமுக உருவங் கொண்டே அகிலமுங் காப்பவனே
செறுபகை அடர்க்கும் செவ்வேற் சேயே செய்ய
நறுமலர் தூவிப் பன்மதத் தவரும் பரவக்
குறுநகை கொண்டாய் கொம்பனி வீதிக் கோவிலிலே !

காரேறு மாடமுங் காவுங் கவின்தரக் கலஞ்சேர்
பேராறு சூழுங் கொம்பனி வீதிக் கோமானே
ஓராறு முகமும் பன்னிரு கரமும் உடையானே
போரேறு வேலும் மயிலும் கொண்ட புராணனே !

நற்பணி ஈதா மெனவே நாட்டினர் போற்றப்
பற்பல பணிகள் சைவமுன் னேற்றச் சங்கம்
பொற்புடன் புரியக் கொம்பனி வீதிக் கோயிலிற்
சிற்பர உருவங் கொண்டாய் செவ்வேற் பெருமானே !

வள்ளி மணாள வருக வண்ணத் தோகைப்
புள்ளி மஞ்சைப் புனிதா வருக போரினிற்
துள்ளி வருஞ்சுடர் வேலா வருக அருளை
அள்ளித் தருங்கொம் பனிவீதி அப்பனே வருகவே !

கந்தா போற்றி கடம்பா போற்றி அரனார்
மைந்தா போற்றி வள்ளி மணாளா போற்றி
எந்தாய் போற்றி எங்கள் இறையே போற்றி
செந்தண் கொம்பனி வீதிச் செல்வா போற்றி !

கொம்பனி வீதிக் குகனே போற்றி போற்றி
எம்மதமும் நின்மத மானாய் போற்றி போற்றி
நம்தமைக் காக்கும் நம்பா போற்றி போற்றி
செம்மை வாழ்வுறச் செய்வாய் போற்றி போற்றி !

அடியார் துயர்தீர் அப்பனே வாழ்க வாழ்கவே
கடிசேர் கொம்பனிக் கந்தனே வாழ்க வாழ்கவே
படிமிசை அறம்வளர் பரனே வாழ்க வாழ்கவே
வடிவேல் ஏந்திய வள்ளலே வாழ்க வாழ்கவே !

க. கந்தசுவாமி
பாடவழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு.

# கந்தபுராணப் பெருமை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

திருக்கைலாசத்திலே கல்லாலவிருட்ச நீழலிலே ஒரு மௌனோபதேசம் நடக்கின்றது.

ஜனகர் முதலிய நான்கு முனிவர்கள் 'வேதக்காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த போதக் காட்சிக்கும்' எட்டாத உண்மையை உணர்தற்கு முயன்று கொண்டிருக்கின்றார்கள்.

வேதக் காட்சி பாசஞானம். வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் உலக பந்தங்களின் இயல்பை அறிதற்கு உபகாரமான ஞானம் பாசஞானம். போதக் காட்சி பசுஞானம். உடலில் வேறாக உயிரைக் காணுதற்கு உபகாரமான ஞானம் பசுஞானம். இவ்விரு வகை ஞானங்களுக்கும் அப்பாற்பட்ட ஞானம் பதிஞானம். அவனருளாலே தான் அவன் தாளாகிய உண்மையை உணரலாம். சூரிய கிரணத்தின் உதவியினாலேதான் சூரியனைக் காணமுடியும்; அதுபோல.

அசுர தேவ குரவர்களின் உபதேசங்களுக்கும் கல்லால விருட்ச உபதேசத்துக்கும் இடையில் எத்தனையோ உபதேசங்கள் கந்தபுராணத்தில் வருகின்றன. பிரமா தக்கனுக்கு உபதேசிக்கின்றார். தக்கன் பிரம்ம விசாரஞ் செய்கின்றான். "படைத்தல் காத்தல் அழித்தல்களாகிய முத்தொழில்களில் படைத்தற்றொழில்தானே தலைசிறந்தது. அடுத்தபடியில் காத்தற்றொழிலைச் சொல்லலாம். அழித்தற்றொழிலில் என்ன மகத்துவம் இருக்கின்றது? வேதங்கள் அழித்தலைச்செய்கின்ற உருத்திரனைப் புகழ்ந்து துதிப்பதன் கருத்து என்ன?" என்று விசாரிக்கின்றான் தக்கன்.

"கயிற்றைக் கண்டவழிப் பொய்த்தோற்றமாகிய பாம்பு எவ்வாறு இல்லை ஆகின்றதோ அவ்வாறே காணப்பட்ட இந்த உலகம் எந்த உருத்திரனைக் கண்ட வழிச் சூனியம் ஆகின்றதோ அந்த உருத்திரனே தலைமையோன்; அவன் வழி நின்று நான் படைக்கின்றேன்; அவ்வாறே விஷ்ணு காக்கின்றார். நம்மைக் கண்டவழியும் ஒரு சில தத்துவங்கள் ஒடுங்கலாம். நட்சத்திரங்கள் சிறிது இருளை நீக்கவில்லையா? முழு இருளையும் நீக்குகின்ற சூரியனைப் போலத் தத்துவங்கள் முழுவதையும் ஒடுக்குகின்றவன் எவனோ அவனே உருத்திரன். அதனாலேதான் வேதங்கள் அவன் தலைமையை உயர்த்திப் பேசுகின்றன. நம்மைக் கண்டவழியும் நமக்குமேல் தத்துவங்கள் ஒடுங்காமல் கிடக்கின்றன. அங்ஙனமாக நமக்குத் தலைமை பேசுவதெங்ஙனம்? சந்திரனும் நட்சத்திரங்களும் சூரியனின் ஒளியைப் பெற்றே பிரகாசிக்கின்றன. அவ்வாறே நாமும் உருத்திரன் அருளைப் பெற்றே பிரகாசிக்கின்றோம். நமக்கு வேதங்கள் ஏதும் புகழ் பேசியது உண்டானால் அதுவும் அவ்வுருத்திரனுக்குரியதே." இங்ஙனம் பிரமா பிரமத்தை விசாரித்த தக்கனுக்கு உபதேசிக்கின்றார்.

இவ்வாறு சத்திய லோகத்திலே பிரம்ம உபதேசஞ் செய்த பிரமா மேலேயுள்ள வைகுந்த லோகத்தைக் கடந்து அப்பாலுள்ள திருக்கைலாசத்துக்கு வருகின்றார். அங்கே ஒரு பக்கத்தில் வீற்றிருந்த ஆறுமுக சுவாமி மந்திரங்களின் முதற்கண்ணதாகிய ஓங்காரத்தின் பொருளைப் பிரமாவிடம் வினவி, பிரமா அதன் பொருள் அறியாது மயங்குவது கண்டு இரங்கி, பன்னிரண்டு திருக்கைகளாலும் நான்கு தலைகளிலும் குட்டி இரண்டு திருவடிகளாலும் நல்ல உதையுங் கொடுக்கின்றார். அப்பால், கல்லாலுக்கும் மேலே ஒரு உபதேசம் நடக்கின்றது. அங்கே கேத்திர கணிதம் வினவுது போலச்

சிவத்தைத் தேவி ஒன்று வினவுகின்றார். ''தேவரீர் இருந்தபடி இருக்கத் திருவருள் விசேஷத்தினாலே இந்த உலகம் தோன்றி நின்று அழிகின்றது என்று வேதம் செப்புகின்றது. உலகத்தை இங்ஙனம் செய்கின்ற திருவருட் சக்தியாகிய நானே உலகத்தைப் படைக்கின்றேன்; காக்கின்றேன்; அழிக்கின்றேன். அப்படியானால் தேவரீருக்கும் உலகத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லையே'' என்று சிவசக்தி அகங்கரிக்கின்றது. அப்பொழுது சிவபெருமான் சிவசக்தியை நோக்கி, ''சூரியன் இருந்தபடி சும்மா இருக்கக் கிரணந் தானே உலகத்தை நடத்துகின்றது. சும்மா இருக்கும் சூரியனால் உலகத்துக்கு என்ன பிரயோசனம்? கிரணம் சூரியனை விலகி நின்று காரியத்தை நடத்தலாமே'' என்றார். சக்தி தலை பணிகின்றது. அது சிவத்தை இன்றி அமையாது.

இவ்வாற்றால் எண்ணிறந்த உபதேசங்கள் கந்த புராணத்தில் வருகின்றன. கந்த புராணத்தில் ஒரு காண்டத்துக்கு உபதேச காண்டம் என்று பெயர். புராணம் முழுவதற்குமே அப் பெயரை வழங்கினாலும் பொருத்தமாயிருக்கும்.

தர்மத்துக்குப் புறம்பானவர்கள் தொடக்கம் 'தர்மம் என்ன? அர்த்தம் என்ன? காமம் என்ன? மோக்ஷம் என்ன?' என்று விசாரிப்பவர்கள் இறுதியான யாவருக்கும், இன்னும் அப்பாற்பட்டவர்களுக்கு அவரவர்க்கு ஏற்ற முறையில் அவரவர் வாழ்க்கையை நல்வழிப்படுத்தவல்லது கந்தபுராணம்.

''புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி'' என்ற பாட்டில் சுப்பிரமணிய சுவாமியின் பெருமை துதிக்கப்படுகின்றது. இப் பாட்டு கந்தபுராணத்தின் பெருமை பேசிய தென்றுங் கொள்ளத்தக்கது கந்தபுராணம் படிப்பவர்களையும் கேட்பவர்களையும் புன்னெறி யதனிற் செல்லும் போக்கினின்றும் விலக்குவது; அம்மட்டில் அமையாமல் மேலாம் நன்னெறி ஒழுகச் செய்வது. ஆகவே, விலக்கும் விதியுமாகிய அறம் கைவரச் செய்வது. அறத்துக்குப் பயன் மனத்துக்கண் மாசிலனுதல். மனந் தூயவர்களுக்கு அதன் மேல் அது நவையறு காட்சி நல்கும் நவையறு காட்சிதான் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் — எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காணும் அறிவு'. அந்த அறிவுதான் ஒருவனுக்கு அறத்தின் விளைவான பொருளை சித்திக்கச் செய்கின்றது. மெய்ப் பொருள் சித்தித்தவன் இருவினையினீங்கி அவனருளாலே அவன்தாள் வணங்குகின்றான் அதுவே இன்பம் அதன் மேல் உயிர் தாடலைப்படுகின்றது பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்களைத் தலைக்கூடுகின்றது; அதுதான் வீடு பேறு. இவ்வாற்றால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயப்பது கந்தபுராணம். இந்திரராகிப் பார்மேலின்ப முற்று இனிதுமேவி — சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வதற்கு உறுதுணையானது கந்தபுராணம்.

## நாரதர்:

கந்தபுராணத்தில் வருகின்ற எண்ணிறந்த பாத்திரங்களுள் நாரதர் என்ற ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம். அப் பாத்திரத்துக்குப் பிறகே சிறிது தூரம் சென்றாலே தர்மார்த்த காம மோக்ஷங் களினியல்புகளையும் சித்தாந்த நுண் பொருள்களையும் உணர்தற்கு அது போதுமானதாயிருக்கும்.

தக்கனுடைய புதல்வர் ஆயிரவர் தக்கன் விரும்பியவாறு பிரமாக்களாகும் பொருட்டுத் தவஞ் செய்கின்றார்கள். அங்கே நாரதர் மனந்தூயராய் நவையறு காட்சி கைவந்தவர்; அதனாலே பொருள் இதுவே என்று துணிந்தவர். அவர் தக்கனுடைய பிள்ளைகளின் தவநோக்கத்தைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கின்றார்; அவர்களை அவ்வழியினின்றுந் திருப்பி முத்திபெற்றுய்தற்கு வழி காட்டுகின்றார்.

இதே நாரதர் பிரமவிஷ்ணுக்கள் அடிமுடி தேடுகின்ற இடத்திலும் தோன்றுகின்றார். அவர்களை நோக்கி உங்கள் உத்தியோகங்களை உங்களுக்குத் தந்தவர் ஆர் என்று கேட்கின்றார்.

சூரன் திக்குவிஜயஞ் செய்து அரசு வீற்றிருக்கின்றான். நாரதர் எட்டிப் பார்க்கின்றார். சூரன் நீ ஆர் என்று கேட்கின்றான். ''நான் உன் பெரியப்பா; உன் க்ஷேமங் கருதித் திருக்கைலாசத்தில் தவம்புரிகின்றேன். உன் பராக்கிரம கோலத்தைக் கண்டு கண் குளிர இங்கு வந்தேன்'' என்கின்றார்.

சூரனை எட்டிப் பார்த்த நாரதர் அக்கண்களால் தினைக் கொல்லை யொன்றில் பரண் மீதிலே ஒரு பச்சைப்பசிய குறப்பெண் ஒருத்தியையும் பார்க்கின்றார். அப்பெண்ணின் பக்குவ நிலை அவருக்குத் தோன்றுகின்றது. நேரே சுப்பிரமணிய சுவாமியிடம் போய் அப்பெண்ணின் பக்குவ நிலையை எடுத்துச் சொல்லுகின்றார்.

நாரதர் போன்ற ஒரு சிறந்த பாத்திரம் ததீசி முனிவர். அவர் தக்கனுக்கு எடுத்துரைத்தவை பெரிய வேத உண்மைகள், பாத்திரங்கள் போன்று கந்தபுராணத்தில் வரும் சிவகதைகளும் எண்ணிறந்தவை.

''புவியினர் ஏனையர் புராணந் தோறும்
சிவகதை யுணர்கிலர் என்னில் திருமோ
அவர்மயல்''

வள்ளிநாயகி தெய்வநாயகியாரின் கதைகள் தமிழ் நுதலிய அன்பின் பகுதிகளான களவுக்கும் கற்புக்கும் தலைசிறந்த உதாரணங்கள்.

இப்படிப்பட்ட சிறப்புகள் வாய்ந்த கந்த புராணம் இந்த யாழ்ப்பாணத்திலே பழைய காலத்திலே ஒவ்வொரு சைவாலயத்திலும் மடாலயங்களிலும் வருடந்தோறும் விதிப்படி படித்துப் பொருள் சொல்லப்பட்டு வந்தது. வருடத்தில் மூன்று மாசகாலம் கந்தபுராண காலமாயிருக்கும். ஆண்களும் பெண்களும் மூன்றுமாச காலம் காப்புக் கட்டி விரத மிருந்து கேட்பார்கள். ஒரு கிராமத்தில் பல கோயில்கள் இருக்கும். ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு மாசங்களில் புராணம் ஆரம்பித்து நடக்கும். படித்துப் பொருள் சொல்லுகிறவர்கள் தத்தம் கிராமத்திலும் அயற் கிராமங்களிலும் சென்று சென்று படித்துப் பொருள் சொல்லி வருவார்கள். படித்துப் பொருள் சொல்லும் முறை யாழ்ப்பாணத்துக்கே உரிய ஒரு தனிப்பட்ட முறை. கோயிற் சந்நிதானத்தில் தெற்கே வடக்குமுகமாக இருந்து ஒருவர் பாட்டை வாசித்துப் பொருளுக் கேற்பப் பிரிப்பார், மற்றொருவர் கிழக்கு முகமாக இருந்து பொருள் சொல்லுவார். முதல் பதப்பொருள், பின் பொழிப்புரை, அதன் மேல் விசேட உரை சொல்லப்படும். வாசிக்கிறவர் எச்சுதியில் எந்த இராகத்தில் வாசிக்கிறாரோ பொருள் சொல்லுகிறவரும் அச் சுதியில் அந்த இராகத்திற் பொருள் சொல்லுவார். விசேஷ படிப்புக்களுக்குப் பிரசித்த வித்துவான்கள் அழைக்கப்படுவார்கள். இந்த வழக்கம் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்தொட்டே நடந்துவருகின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களுள் யாரோ ஒரு புண்ணியவான் இந்த வழக்கத்தை இங்கு ஏற்படுத்தியிருக்கலாம். இதனாலே செந்தமிழ் வழங்கும் சைவ சித்தாந்த உணர்ச்சியும் வளர்ந்துவரலாயது.

அறுசமயத் தலைவராய் நின்றவருக்கு அன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வழுவினுல் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்டுவந்து கல்லெறிந்து
மறுவில் சரண் பெற்றதிறம் அறிந்தபடி வழுத்துவாம்.

— பெரியபுராணம்

# அந்தரங்க பக்தி

திருமுருக கிருபானந்த வாரியார்

மதுரை தமிழகத்திற்கு நடுநாயகமானது. இதயம் போன்றது. துவாத சாந்தத்தலம். அத்தலத்தில் சுகுமார பாண்டியன் என்பான் அரசுபுரிந்துவந்தான். அவன் ஆட்சியிலும் மாட்சியிலும் சிறந்தவன். குடிகளைத் தாய் போல் கருணையுடன் பாதுகாத்துவந்தான். அவனுடைய பரிஜனங்கள் எல்லோருமே நற்குண சீலர்களாய் இருந்தார்கள்.

அவனுடைய மனைவி சிறந்த முருகபக்தியுடையவள்; நெற்றி நிறையத் திருநீறு பூசி மஞ்சள் குங்குமந் தரித்து உமையம்மையாரைப் போலே விளங்குவாள். ஒவ்வொரு நாளும் பல்லக்கில் திருப்பரங்குன்றம் போய் முருகவேளைப் பக்தி பரவசத்துடன் வழிபடுவாள். எல்லையில்லாத அன்பு பூண்டு இடையறாது "முருகா!" "முருகா!" என்று உள்ளம் உருகி ஓதுவாள். ஏழைகட்கு தான தருமஞ் செய்வாள். கார்த்திகை, சஷ்டி, மாதாந்த வெள்ளி முதலிய நாள்களில் உபவாசமிருந்து ஜபதபங்கள் செய்வாள்.

அம் மாதரசியின் கணவனாகிய பாண்டியன் இதற்கு நேர்மாறாக இருந்தான். கோயிலுக்குப் போகமாட்டான். முருகா என்று மறந்தும் கூறமாட்டான். அரசியலை நன்றாக நடாத்துவானேயன்றி அருளியலைக் கடைப் பிடித்தானில்லை.

மனைவி கணவனை நோக்கி, "அரசே! நமது உயிர்க்குயிராக விளங்கும் முருகனைத் தாங்கள் மறந்திருக்கலாமா? இன்று திருக்கார்த்திகை. திருப்பரங்குன்றத்திற்கு வாருங்கள். கலியுகவரதனைக் கண்குளிரக் கண்டு மகிழலாம்" என்றாள்.

மன்னன், "பெண்மணியே! நீ போய் தெரிசனை செய்துவிட்டு வருவாயாக. உனக்கு நான் தடைகூறவில்லை. ஆனால் என்னைஅழைக்காதே!" என்றுகூறி மறுத்துவிட்டான்.

இவ்வாறு பன்முறை மனைவி வேண்டியும் அரசன் ஆலயம் போய் ஆறுமுகக் கடவுளைச் சேவிக்க இணங்கினானில்லை.

அரசமாதேவிக்கு அதனால் அளவற்ற கவலை. கணவனுக்கு கடவுள் பக்தியுண்டாக வேண்டும் என்று கருதினாள். "முருகா! மூவர் முதல்வா! என் கணவனாரை நீர் தான் தடுத்தாட் கொள்ளவேண்டும். அவர் வாக்கிலிருந்து முருகா என்ற சொல் வந்தால் உமக்கு ஆயிரம் பால் குடம் அபிஷேகஞ் செய்வேன். இலட்சதீபம் இட்டு விழாக் கொண்டாடுவேன்" என்றெல்லாம் வேண்டுதல் செய்து கொண்டாள்.

ஒரு நாள் இரவு. மன்னனும் மன்னன் மனைவியும் பள்ளியறையில் பஞ்சணையில் படுத்திருந்தார்கள். மன்னன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். பாண்டிமாதேவி விழித்த வண்ணம் ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தாள். மன்னன் பயங்கரமான கனவு கண்டு, அலறி 'முருகா! முருகா!' என்று வாய் பிதற்றிவிட்டான். இதனைக் கேட்ட அரசிக்கு அளவற்ற மகிழ்ச்சி. "தூக்கத்திலாவது நம் கணவன் முருகா! என்றாரே இதுபோதும். நம் தவம் பலித்துவிட்டது" என்று எண்ணி ஆறுதல் அடைந்தாள்.

விடியற்காலை எழுந்தாள். முதல் அமைச்சனை விளித்து, "மந்திரி! நான் ஒரு பொருளை நாடினேன். அது சித்தியாயிற்று; நமது மதுரையில் உள்ள சகல தேவாலயங்களிலும் அபிஷேக ஆராதனை நிகழட்டும். மீனாட்சி கோயிலிலும், திருப்பரங்குன்றம் ஆலயத்திலும் லட்சதீபம் இட்டு வழிபாடு

சிறப்பாகச் செய்யுமாறு ஏற்பாடு செய். நகரத்தை அலங்கரிக்கச்செய்'' என்று கட்டளையிட்டாள். அமைச்சன் அவ்வாறே ஏற்பாடு செய்தான்.

மன்னன் விடிந்த பின் எழுந்து நீராடி சபாமண்டபத்திற்கு வந்தான். ஊரெங்கும் வாழை கமுகுகள் நாட்டி, பூமாலைகள் தொங்கவிட்டு மாயிலைத் தோரணம் கட்டி அலங்கரித்திருப்பதைக் கண்டான். நகரெங்கும், மேளம், தாளம், பஜனை, முதலியன முழங்குவதைக் கேட்டான்.

''மந்திரி! இன்றைக்கு என்ன விசேடம்? எங்கு பார்த்தாலும் அலங்காரம்; பெருங் கொண்டாட்டம். காரணம் யாது?'' என்று வினவினன்.

மந்திரி, ''மன்னர் பெருமானே! இன்றைக்கு விசேடம் ஒன்றுமில்லை. அரசமா தேவியாருடைய கட்டளைப்படி இவைகள் நிகழுகின்றன'' என்றான்.

அரசன் அருகில் இருக்கும் தேவியை நோக்கி, ''பெண்ணே! இன்று என்ன விசேடம்? இந்தக் கொண்டாட்டம் எதன்பொருட்டு நிகழ்கின்றது?''

''அரசே! எனது நீண்ட காலத்து எண்ணம் நிறைவேறியது. அதனால் இது நிகழ்கின்றது?''

''உனது எண்ணம் யாது? அது எப்போது எவ்வாறு நிறைவேறியது?''

''பெருமானே! தங்கள் திருவாக்கிலிருந்து ''முருகா'' என்ற சொல் வராதா? என்று எதிர்பார்த்தேன். அதற்காக ஆண்டவனிடம் வேண்டுதல் செய்தேன். அது பலித்து விட்டது''.

''பெண்ணே! என் வாயிலிருந்து அந்த நாமம் வெளிப்பட்டதா?''

''ஆம். இரவு உறங்கும்போது தாங்கள் ஏதோ பயங்கரமான கனுக்கண்டு, ''முருகா முருகா'' என்று வாய் பிதற்றினீர்கள். அது தான் என் தவம். என் தவம் நிறைவேறியது. அதற்காகவே எங்கும் அலங்கரித்து, ஆராதனையும் அன்னதானமும் நிகழ்த்துகின்றேன்.

மன்னன் கேட்டு அப்படியே திகைத்து நின்றான். ''ஆ முருகா! நான் உன்னை உள்ளத்தில் ஒரு கணமும் மறவாது தியானித்து வந்தேன். என்னுடைய முருக பக்தி உலகம் அறியக்கூடாது என்று கருதி அந்தரங்க பக்தி செய்தேன். இப்போது என் பக்தி வெளிப்பட்டுவிட்டதே. ஞானபண்டிதா! கருணைக் கடலே பக்தி வெளிப்பட்டு என்னைப் பக்தன் என்று உலகம் அறிந்ததே. ஆ!'' என்று கீழே வீழ்ந்தார். அவர் கரங்கள் குவிந்தன. கண்ணீர் சிந்தியது. அவர் சிரத்தில் இருந்து ஒரு ஜோதி புறப்பட்டு விண் வழி சென்று மறைந்தது. ஆவி பிரிந்தது.

இத்தகைய அந்தரங்க பக்திசெய்யும் உத்தமர்களை நாம் காண்பது அரிது. **''உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்''** என்கின்றார். அருணகிரிநாதர். அந்தரங்க பக்தர்கள் நீறுபூத்த நெருப்பு போல் இருப்பார்கள்.

காலாந்தரத்தில் பாண்டிமாதேவியும் பரமனடி சார்ந்தாள்.

## அறமொழிகள்

''மண்ணை சல்லித்து பொன்னை எடுப்பவன்போல் நூல்களை வாசிக்கையில் அதன் நுண்ணியக் கருத்துக்களை தேடிக்கொள்ள வேண்டும்.''

''பெரியோர்கள் குறைகள் விஷயத்தில் நீபெருங் குருடனாயிரு. அவர்கள் உயர்ந்த லட்சியங்களைப் பற்றுவதில் காந்தத்தைப் போலிரு. ரோஜா மலரின் கீழுள்ள சிறிய முள்ளுக்காக ரோஜா மலரைப் புறக்கணிக்க முடியுமா ?''

— வாரியார்

# செந்தில் முருகன் வருகை

கி. வா. ஜகந்நாதன்

ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கரமும் படைத்த முருகன் எழுந்தருளுகின்ருன். வானவீதி வழியே வருகின்ருன். அந்தர துந்துமிகள் முழங்குகின்றன. நல்ல வயிரத்தையுடைய கொம்புகள் ஒலிக்கின்றன. வெள்ளிய சங்குகள் நரலுகின்றன. பலமான இடியைப் போல வெற்றிமுரசு முழங்குகின்றது. வெற்றிக் கொடியிலே பல கண்களோடு விளங்கும் தோகையைப் பெற்ற மயிலும் அவன் ஆணையாலே அகவுகின்றது.

அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால் வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல் பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ.

(காழ்-வயிரம். வயிர்-ஊதுகொம்பு. வளை-சங்கு)

வானமே வழியாக முருகன் வேகமாக எழுந்தருள்கின்ருன். அடியார்களுக்கு அருள் செய்வதில் அவனுக்கு வேகம் அதிகம். உலகமெல்லாம் போற்றும் சிறப்பையுடைய திருச்சீரலைவாயை நோக்கி வருகிருன். அத் திருத்தலத்திற்கு வந்து தங்குகிருன்.

விசும்பா றுக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே;

அதா அன்று.

(முன்னி-எண்ணி, சேறல்-செல்லுதல்)

திருச்செந்தூருக்கு அலைவாய் என்பது பழைய பெயர். அது நாமனூரலைவாய் என்றும் வழங்கும். திருச்சீரலைவாயென்று அடைகளுடன் சேர்த்தும் வழங்குவர். முருகன் திருக்கோயில் கடல் அலைகள் மோதும் இடத்திலே அமைந்திருத்தலின் இதற்கு இப்பெயர் வந்தது. மிகப் பழங்கால முதலே இத்தலம் தமிழ்ப்புலவர்களால் போற்றப் பெற்று வருகின்றது.

''திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎய்''

என்று அகநானூற்றிலும்,

''வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலை இய காமர் வியன்றுறை''

என்று புறநானூற்றிலும் இதன் சிறப்பைப் புலவர் பாடியுள்ளனர்.

''வரைவயிறு கிழித்த நிழல் திகழ் நெடுவேல்
திகழ் பூண் முருகன் தீம் புனல் அலைவாய்''

என்பது ஒரு பழம் பாட்டு.

முருகன் சூரசங்காரம் செய்த பிறகு வெற்றிக்கோலத்தோடு எழுந்தருளிய இடமாதலின் இதற்கு ஜயந்தி என்ற திருநாமம் வந்ததென்றும் அதுவே செந்தி, செந்தில், செந்தூர் என்று மாறி வழங்குமென்றும் கூறுவர். இத்தலத்தில் சண்முகன் திருக்கோலம் மிகச் சிறப்பாக இருக்கும். இத்தலத்தைப் பற்றிக் கூறுகையில் நக்கீரர் ஆறுமுகத் திருக்கோலத்தை வருணித்தற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

''திருப்பரங்குன்றத்தில் முருகன் எழுந்தருளியிருக்கிருன். திருச்சீரலைவாயில் ஆறுமுகனுகச் சென்று தங்குகிருன்'' என்பார் நக்கீரர்.

# அன்பே சிவம்

M. S. தனம், தமிழ்ப்பண்டிதை, மதுரை

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார். அன்பே சிவமாவ தாரு மறிகிலார்" என்று ஆன்றோர் அகமுருகுகின்றார்கள். அன்பு வடிவாய ஆண்டவன் எங்கும் என்றும் எல்லாமாய் நிறைந்துள்ளான். மலருள் மணம் போலும், மணியுள் ஒளிபோலும், நெருப்பினுள் சூடுபோலும், நீருள் தண்மை போலும் மறைந்து, வஞ்சக் கள்வனாய் ஒளிந்துகொண்டிருக்கும் இறைவன் ஒருசிலர்க்குத்தான் உருவைக் காட்டித் திருவிளையாடல் புரிகின்றான். அவன் காட்டும் வஞ்சனையும் அடியார் நெஞ்சினுள் நிறைந்த இடம் பெற்றுள்ளது.

எல்லாமாய் நிற்கும் இறைவனை எங்ஙனம் வணங்குவது? தத்தமக்குத் தோன்றும் ஏதேனும் ஓர் உருவத்தை நிலைநாட்டி, மலர் தூவி, இருகை குவித்து வணங்குவதா? ஆம். ஆண்டவனை அவ்வாறு வணங்கி வணங்கித் தன் னெஞ்சினுள்ளே நிறுத்தித் தானும் இறைவனோடு இரண்டறக் கலக்கவேண்டும்.

"பண்ணேன் உனக்கான பூசை யொருவடிவிலே
பாவித்திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி அப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான்
குவிக்கவெனின்
நாணும் என்னுளம் நிற்றி நீ
நான் கும்பிடும் போதரைக்கும் பிடாதலால்
நான்பூசை செய்யல் முறையோ"

என்று தாயுமான சுவாமிகள் முறையிடுகின்றார். இறைவன் எல்லாவற்றினுள்ளும் நிறைந்துள்ளானாதலின் இன்ன உருவத்தில் வணங்குவது என்றறியாத சுவாமிகள் ஏதோ ஒரு உருவத்தை நிலைநாட்டி வணங்க நினைக்கிறார். மட்டவிழ் மலர் கொய்து அர்ச்சிக்கச் செல்கிறார். தான் பறிக்கும் மலரில் இறைவன் உருவைக் காண்கின்றார். பின் அம்மலரைக் கொய்ய மனம் வருமா? அவ்வாறின்றி இருகைகளையும் குவித்து வணங்கலாமா என்று சிந்திக்கின்றார். உள்ளத்தில் இறைவனைக் காண்கின்றார். எனவே அவ்வாறு வணங்கவும் உள்ளம் நாணுகின்றது. இறைவன் ஆண்டான் என்பதும் உயிர்கள் அடிமையென்பதும் தத்துவம். ஆண்டவன் இயக்க உயிர்கள் இயங்குகின்றன. எனவே இறைவன் செயல் பாதியும் தன் செயல் பாதியும் ஆக முடிவதால் தாயுமானவர் "நான் கும்பிடும்போது அரைக் கும்பிடு ஆதலால் நான் பூசை செய்யல் முறையோ" என்று முறையிடுவதின் அதிநுட்பப் பொருள் அடியார் உள்ளத்தை உருக்குந் தன்மையுடைத்தன்றோ! "வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் உள்ளந்தோறும் சென்றுளே அமுதமூற்றும்" திருவருட் பெருங்கடல்தான் சிவம். சிவமும் கருணையும் ஒன்று. கருணையே தானாக விளங்கும் சிவபெருமான் அடியார்க்கெளியன், அன்பர்க்கருளாளன், உள்ளுவார் உள்ளத்துள் உவகையமுதை யூட்டும் உலப்பிலாப் பெருங்கடல். தன் அடியார்களை ஆட்கொள்ளும்பொருட்டு உலகம் உய்யும் பொருட்டு அவன் திருவிளையாடல் பல செய்கின்றான். ஆயின் அவன் செய்வனயாவும் தீங்கற்றவை. அருள் நிறைந்தவை. அத்தகைய "அவனருளே கண்ணாகக் கொண்டு" அவனைக் கண்டு களி கூர்ந்த அருள் வள்ளலார் நம் தமிழ்நாட்டில் திகழ்ந்தனர்.

சமண் சமயம் தழைத்தோங்கி சிவநெறி அல்லலுறுங் காலத்து (கி. பி. 7-ம் நூற்றாண்டில்) திருமுனைப்பாடி நாட்டில் சைவ வேளாளர் மரபில் அவதரித்தார் அப்பர் பெருமான். இவரது இயற்பெயர் மருணீக்கியார். உலக ஆசைகளிலே மயங்கித் தவிப்

பாரை அதில் நின்றும் கரையேற்றி சிவஞான மாகிய ஒளியைப் பரப்பிய அப்பெருமானுக்கு வாய்த்த இயற்பெயர் எத்துணைப் பொருத்த முடைத்து!

சமண் சமயத்தைச் சார்ந்து தருமசேனர் என்னும் பட்டங் கொண்டு சிறப்புற்று விளங் கலானார். புறச் சமயத்தைப் பற்றிய தம்பி யைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று தமக்கை திலகவதியார் வீரட்டானத் திறை வனை வேண்ட, அவ்விறைவன் ''நாம் அவனைச் சூலை நோயால் தடுத்தாட்கொள்ளு வோம்'' என்று கனவில் தோன்றி அறைந்து மறைந்தருளினார். அங்ஙனமே அப்பர் சுவா மிகளைச் சூலை நோயானது ''குடரோடு துடக்கி முடக்கிடவே'' அவர் ஆற்றேன் அடி யேன் என்று அறைகூவியழுதார். அன்புமய மான ஆண்டவன் அடியவன் முன்தோன்றி நோய் நீங்கச் செய்து, ''எம்மை இனிய செந் தமிழ்ப் பாக்களால் பாடிய நீ திருநாவுக்கரசர் என்ற பெயரால் திகழ்வாய்'' என்று திருவாய் மலர்ந்தருளி கரந்தார். அன்று முதல் திருநா வுக்கரசர் பலதிவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று சிவபெருமான்மீது திருப்பதிகம் பல பாடினார். சமணர் தீங்கிழைத்தனர். நீற்றறையிலிட் டனர். நஞ்சு கலந்த பாலூட்டினர். நஞ்சும் அமுதாயிற்று. ''நஞ்சு அமுதாக்குவித்தார் நனிபள்ளியடிகளாரே'' என்று அவர் பாடு மாற்றாலறியலாம். யானைக்காலால் இடறச் செய்தனர். யானையும் வலம் வந்து பணிந் தது. கல்லிற் கட்டிக் கடலிற் பாய்ச்சினர். ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று கரை சேர்ந்தார். எத்துணை அல்லல்கள்! ஒன்றிலும் தீங்குறாது சிவஞானம் பொலி வதைக் கண்ட மகேந்திர பல்லவன் தாழ்ந்து பணிந்து திருநீறணிந்து சைவனானான்.

பின் நாவுக்கரசர் பலபதிகள் சென்று பர மனைப் பாடினார். காளத்தி சென்று அம்மலைக் கொழுந்தை இறைஞ்சினார். கயிலை நாதனைக் காணக் காதல் கொண்டார். கங்கைக் கரை யையடைந்தார். மனிதர் புகமுடியாதவாறு அடர்ந்திருந்த காட்டு வழியே சென்றார். பாம்பு முதலிய கொடிய மிருகங்கள் அப்புனி தரைத் துன்புறுத்தாது வழிபட்டுச் செல்வது போன்று ஒதுங்கி ஊர்ந்தன. நடந்து நடந்து சென்றார்; கால்கள் தேய்ந்தன; கால்கள் பரட்டளவும் தேயச் சென்றார். பின்னும் நடக்க இயலாராய் மார்பினால் ஊர்ந்து சென்றார் — அங்கமெலாம் தேயச் சென்றார். இறுதியில் சிந்தையைச் சிவன்பால் செலுத்தி செயலற்றுக் கிடந்தார். பெருமானின் திண் ணிய உறுதியைக் கருணைக் கடல் இன்னும் சோதிக்க மனமற்றவராய்ப் பக்கலிலே ஓர் குளம் தோற்றுவித்து அதன் மருங்கே ஓர் முனிவர் வேடந்தாங்கி வந்தார். இன்னும் சிலகாலம் தீந்தமிழ்ப்பாடி வழுத்த எண்ணங் கொண்ட இறைவன் நாவுக்கரசரை யணுகி ''உறுப்பெல்லாம் நைந்து வருந்திட இங்கு எய்தியதென்னை'' என்று வினவ, அடியார் ''வண்டுலாங் குழல் மலைமகளுடன் வடகயிலை யண்டர் நாயகரிருக்கும் அப்பரிசைக் கண்டு கும்பிட விருப்பொடுங் காதலின் அடைந் தேன் அடியேன்'' என்றார். முனிவரோ ''கயிலைப் பெருமான் காசினியோர் காண்ப தற்கு அரியன்''. என விளம்ப, தமிழரசர், ''ஆளுநாயகன் கயிலையிலிருக்கை கண்டல் லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என மறுத்தார். உடனே அருள் அளாவிய அண்ணல் விசும்பிடைக் கரந்து 'ஓங்கு நாவி னுக்கரசே எழுந்திரு'' எனவும் அப்பெருமான் அழகுடல் பெற்றார். ''அண்ணலே எனை யாண்டு கொண்டருளிய அமுதே விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே, கண்ணினால் திருக்கயிலையிலிருந்த நின் கோலம், நண்ணி நான் தொழ நயந்தருள் புரி'' என்று இறைஞ் சிய தொண்டரை நோக்கி ஆண்டவன் ''நீ இப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எம் கயிலைக் காட்சியைக் காண்பாய்'' எனத் திருவாய் மலர்ந்தருளி விண்ணிலே மறைந் தார். அவ்வாறே வாகீசர் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டு களிகூர்ந்தார். ''யாதுஞ்சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது காதல் மடப்பிடியோடுங் களிறு வரு வனகண்டேன் கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்'' என்று ஆனந்தக் கூத்தாடினார். திருப்பூம்புகலூரிலே இறைவ னோடு இரண்டறக் கலந்தார்.

அன்பு சிவத்தோடு ஒன்றியது. அன்புச் சுடர் எங்கும் பரவியது. அன்பால் ஆண்ட வனை யடையலாம் ''அன்பு ஒன்றே ஆண்ட வனைக் காட்டும் வழி'' சூரியனும் ஒளியும் வேறாகாதவாறு போல அன்பும் இறைவனும் வேறாகார். சிவம் என்ற பதத்தின் பொருள் 'அன்பு' என்பது. சிவநெறி அன்பு நெறியா கும். சைவமதம் அன்பு வழியையே வலியுறுத் துகின்றது. ''தன்னைப்போல் பிறரை நேசி,'' ''எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிரு'' என்ற அறிவுரைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அன்பின் அடிப்படையிலேயே உலகம் இயங்குகின்றது.

''அன்பின் வழியது யிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த வுடம்பு'' —திருக்குறள்

**'ஒளிவிடுக உன்னத அன்பு'**

# சுந்தரர் கொண்ட தோழமை

பண்டிதர் சு. சி. கதிரவேலு

பீ. ஏ. (லண்டன்); எம். ஏ. கியூ. (இலங்கை); பரீட்சை உதவி அத்தியட்சர், பரீட்சைத் திணைக்களம்.

சிவபிரானால் தடுத்தாட்கொள்ளப்பட்ட நம்பியாரூரர் ஒரு நாள் கனகசபையிலே இறைவன் திருநடனஞ் செய்யும் திருக்கோலத்தினைக் காணவிரும்பித் தில்லையைச் சென்றடைந்தார். அங்கு ஆனந்த தாண்டவம் செய்யும் அமலனைக் கண்டு ஆனந்த பாஷ்பம் சொரிந்து, அக்கினியிற்பட்ட மெழுகெனக் கசிந்துருகி, அஞ்சலி செய்து திருப்பதிகம் பாடித் துதித்தார். அப்பொழுது "நீ திருவாரூரிலே நம்மிடத்துக்கு வா" என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. நம்பியாரூரர் அக் கட்டளையைச் சிரமேற் கொண்டு திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் வன்மீகநாதரின் திருவருளினாலே நம்பியாரூரர் அங்கு வருவதை முன்னரேயறிந்து கொண்ட அவ்வூர் மக்கள் வீதிகளை நன்கு அலங்கரித்து மங்கள வாத்தியங்கள் ஒலிக்க நம்பியாரூரரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார்கள்.

சிரமேற்குவித்த கையராய்த் திருக்கோவிலை அடைந்த நம்பியாரூரர் வன்மீகநாதரை வணங்கி ஆனந்தப் பெருங்கடலின் மூழ்கி நின்று திருப்பதிகம் பாடினார். அப்பொழுது எம்பிரானது திருவருளினாலே "நாம் உனக்குத் தோழரானோம். முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட விவாககாலத்திலே நீ கொண்ட மணக்கோலத்தை எப்பொழுதும் கொண்டு பூமியின்மேல் விளையாடுவாய்" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. இறைவனின் பெருங்கருணையை நினைந்து நினைந்து மனம் பூரிப்படைந்த நம்பியாரூரர் வன்மீகநாதரைப் பலமுறை வணங்கித் துதித்து உள்ளக் களிப்பினோடும் திருக்கோவிலை வலஞ் செய்து கொண்டு வெளியேறினார். அன்று முதல் அடியார்கள் அவரைத் தம்பிரான்றோழர் என்று அழைக்கலாயினர். வன்மீகநாதரின் கட்டளைப்படியே நம்பியாரூரர் எப்பொழுதும் அழகிய திருமணக்கோலத்துடன் காட்சியளித்தமையினால் அவர் சுந்தரமூர்த்தி நாயனார் எனவும் அழைக்கப்பட்டார்.

சுந்தரர் இறைவனைத் தன்னோடொத்த, தனக்குச் சரிநிகர் சமானமான ஒரு தோழனாகவே கருதித் துதிப்பதையும், இறைவனை இகழ்வது போலப் புகழ்ந்து போற்றுவதையும், தனக்குக் குற்றேவல் செய்யுமாறு வேண்டி நிற்பதையும், குறை கூறிப் புலம்பித் துதிப்பதையும் நாம் காணலாம். சுந்தரர் இறைவனைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடிய பாடல்கள் மிகவும் நகைச்சுவை பொருந்தியனவாக மிளிர்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவோணகாந்தன்றளி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கித் துதிக்கின்றார். "அப்பனே! உனக்கு ஆட்படுவதால் என்போன்ற அடியார்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது? எங்களுக்குத் தருவதற்கு உன்னிடம் என்ன இருக்கிறது?" என்று இறைவனைப் பரிகசிப்பது போலப் போற்றித் திருப்பதிகம் பாடுகின்றார்.

"வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர்
பெறுவதென்னே?
ஆரம் பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரே
லும்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில் வைத்த
அடிகேளுந்தம்
ஊருங்காடு உடையுந்தோலே யோணகாந்தன்
றளியுளீரே."

திருவெண்காடு என்ற சிவஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானைத் துதிக்கையில், "இறைவனே! நினக்குத் தொண்டு செய்வதற்கு எத்தனையோ அடியார்கள் இருக்கின்றார்கள். குடத்தில் நீரும், பூவும் கொணர்ந்து

அவர்கள் நித்தமும் உனக்குத் தொண்டு செய்கிறுர்கள். நீயோஆனந்த மேலீட்டினுல் அனுதினமும் ஆனந்த நடனமாடிப் பாடிக் கூத்தாடுகிருய். கட்டியணேத்து மகிழ்வதற்காகக் கச்சணிந்த கொங்கையாளாகிய உமாதேவி யாரும் நினது பாகத்திலிருக்கிருள். இங்ஙனம் அனுபவித்து இன்பமாக நீ காலங்கழிப்பதற்கு எல்லாம் வாய்த்திருந்தும் அப்பனே ! நீ ஏன் நஞ்சை அருந்திஞய் ?'' என்று சுந்தரர் எம்பிரானே ஏளனஞ் செய்வதை நாம் காணலாம்.

'' குடமெடுத்து நீரும் பூவுங் கொண்டு தொண்ட
ரேவல் செய்ய
நடமெடுத்தொன் ருடிப்பாடி நல்குவீர்நீர்
புல்கும் வண்ணம்
வடமெடுத்த கொங்கை மாதோர் பாகமாக
வார்கடல் வாய்
விடமிடற்றில் வைத்ததென்னே வேலேசூழ்
வெண் காடனீரே ''

நீர் தான் சடைகள் தாழக் கரணமிட்டுத் தன்மைபேசியில் பலிக்கு விடைய தேறித் திரிவதையே தொழிலாகக் கொண்டுள்ளீர். உம்மைச்சேர்ந்தவர்களிருக்கிருர்களே, சடையில் கங்கையாள் இருக்கிருள்; தேவியார் இடதுபாகத்தில் வீற்றிருக்கிருர்; கணபதி என்ற உமது மூத்த மகன் இருக்கிருன்; வேலேயேந்திய குமரன் இருக்கிருன். இவர்களே நம்பியாவது நாங்கள் உமக்கு ஆட்படலாமென்ருலோ எப்படி நம்பி ஆட்படுவது ?

'' திங்கள் தங்கு சடைக்கண்மேலோர் திரைகள்
வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல்
வயிறு தாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளே தேவியார்
கோற் றட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன்
றளியுளீரே ''

என்று தம்பிரான்ருேழர் இறைவனேப் பழிப்பதுபோல் நகைச்சுவை தோன்றப் புகழ்ந்து போற்றித் துதிப்பதனே நாம் காணலாம்.

தனக்குத் துன்பமேற்பட்டபோதெல்லாம் சுந்தரர் இறைவனிடஞ்சென்று தனக்கு உதவி செய்யுமாறும், தனது காதலியாகிய பரவை யாரிடம் தூது செல்லுமாறும், தனக்குக் குற்றேவல் செய்யுமாறும் இறைவனே வேண்டித் துதிப்பதை நாம் காண்கிருேம்.

குண்டையூரிலுள்ள நெற்குவியலேத் திருவாரூரிலுள்ள பரவையாரின்வீட்டுக்குக்கொண்டு போய்ச் சேர்ப்பிக்குமாறு சுந்தரர் திருக்கோளிலி என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபிரானே வேண்டிக்கொள்ளுகிருர். '' எம்பிரானே ! பரவை பசியிஞலே வாடுகின்ருள். நீயோ நினது உடலில் ஒரு பாதியில் ஒருத்தியும், சடைமுடியின்மீது மற்றெருருத்தியுமாக இரு பெண்களே வைத்திருக்கின்ருய். அப்படிப்பட்ட நினக்குப் பரவையின் பசி வருத்தமும் எனது மனத்துயரும் நன்ருகத் தெரியத்தானே வேண்டும்; ஆதலால் குண்டையூரிலுள்ள நெற்குவையைக் கொணர்ந்து தருமாறு நீயே பணித்தல் வேண்டும், '' என்று வேண்டுகிருர் சுந்தரர்.

''பாதியோர் பெண்ணே வைத்தாய் படருஞ்
சடைக் கங்கை வைத்தாய்
மாதர்நல் லார்வருத்த மதுநீயு மறிதி யன்றே
கோதில் பொழிற் புடைசூழ் குண்டையூர்ச்சில
நெல்லுப் பெற்றேன்
ஆதியே யற்புதனே யவை யட்டித்தரப் பணியே.''

'' குரவ மருங்குழ லாளுமை நங்கையொர்
பங்குடையாய்
பரவை பசிவருத் தமதுநீயு மறிதியன்றே
குரவழரும் பொழில்சூழ் குண்டையூர்ச்சில
நெல்லுப் பெற்றேன்
அரவ மசைத்தவனே யவையட்டித் தரப்
பணியே ''

சிவபிரான் தனக்குப் பொன் தராமல் விட்டதற்காக மனம் புழுங்குகின்ருர் சுந்தரர் பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனே வணங்கித் துதிக்கும் பொழுது இக்கவலே விஞ்சிவிடுகின்றது. ''இறைவனே! உன்னேயே நம்பி உனக்கு அடிமையானேன். எனது குறைகளேச் சொல்லி யான் புலம்பவும் நீ பித்தன்போல் என்மீது எவ்வித பரிவுங்

காட்டாது வாளா விருக்கின்றாய். நீ இல்லா விட்டால் வேறு கடவுளர் எங்களுக்குக் கிடையாதா? என்று குறை கூறி இறைவனை ஏசுவதுபோன்று அன்புருக வணங்கிப் பாடு கிறார் சுந்தரர்,

''வைத்தனன் றனக்கே தலையு மென்னுடைய
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் றனக்கே திருவடிக் கடிமை
யுரைத்தக்கா லுவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத்தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தொர் நச்சிலராகில்
இவரலா தில்லையோ பிரானார்''

''ஏசினவல்ல விகழ்ந்தனவல்ல
எம்பெருமா னென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை யடிதொழப் பன்னாள்
வாயினாற்கூறி மனத்தினால் நினைவான்
வளவயல் நாவலூ ரூரன்
பேசின பேச்சைப் பொறுக்கில ராகில்
இவரலா தில்லையோ பிரானார்''

என்ற பாடல்களில் சுந்தரரின் மனப்புழுக்க கமும், பக்திப் பெருக்கமும், பரந்த தோழமையும் கலந்து மிளிர்வதனை நாம் காணலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார் சபதம் தவறியமை யினால் அவருடைய கண்கள் இரண்டும் குரு டாயின. அதனால் மிகவும் வருந்திய சுந்தரர் தமது தவறையுணர்ந்து வருந்தி வேண்ட இறைவன் மனமிரங்கி இடக்கண்ணை மட்டும் கொடுத்தருளினார். ஒரு கண் பெற்றபோதி லும் இரு கண்களாலும் இறைவனின் திரு வுருவத்தைத் தரிசித்து மகிழும் பாக்கியம் கிடைக்கவில்லையே என்ற கவலை நாயனார் வாட்டியது. அடியார்கள் சூழத் திருவாரூரை யடைந்து சுவாமியின் சந்நிதானத்தை யடைந்த பொழுது தனது ஆருயிர்த் தோழ னான வன்மீகநாதரை இரு கண்களாலும் தரிசனஞ் செய்ய முடியவில்லையே என்று மிகவும் வருந்தினார் சுந்தரர். அவருடைய உள்ளத்தில் கவலையும், கோபமும், பக்திப் பிரவாகமும் அலைமோதத் தொடங்கிவிட் டன.

''மீளாவடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை
வேண்டாதே
மூளாத்தீப்போ லுள்ளே கனன்று முகத்தான்
மிகவாடி
ஆளாயிருக்கு மடியார்தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவா ரூரில் வாழ்ந்து
போதிரே''

என்று இறைவனை ஆத்திரத்தோடு ஏசத் தொடங்கிவிட்டார் சுந்தரர்.

''விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி
யாட்பட்டேன்
குற்றமொன்றுஞ் செய்ததில்லை கொத்தை
யாக்கினீர்
எற்றுக்கடிகேன் என்கண் கொண்டீர் நீரே
பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் றாரா தொழிந்தால்
வாழ்ந்து போதிரே''

''நானே ஒரு குற்றமும் செய்யவில்லை. என்னை நீ குருடனாக்கி விட்டாய். அதனால் உனக்குத் தான் பழியுண்டாயிற்று. நீ ஏன் எனது கண் ணைப் பறித்துக்கொண்டாய்? மற்றக் கண்ணை யும் நீ தராமல்விடின் நீ வாழ்ந்துபோ'' என்று சுந்தரர் இறைவன் மீது அபாண்டமாகப் பழி சுமத்துவதை நாம் இங்கு காண்கிறோம். அதே சமயத்தில் எம்பெருமானிடத்தில் அவர் கொண்டிருந்த தோழமை எந்த அளவுக்குப் பரந்து கிடந்தது என்பதையும் மேற் கூறிய பாடல்கள் எமக்குத் தெளிவாகக்காட்டி நிற்கி ன்றன.

அரிபிரமேந்திராதி தேவர்களாலும் காண முடியாத அருட்பெருஞ் சோதியினைத் தமது தோழமையின் வலிமையினால் சுந்தரர் தனது அன்புக் காதலியாகிய பரவையாரிடம் இரு முறை தூதாக அனுப்பினாரெனின் அவரு டைய தோழமையின் வலிமையினை யாம் எவ்வாறு அளவிட்டுக் கூற முடியும்? இவற் றையெல்லாம் நோக்குமிடத்துத் தம்பிரான் றோழர் தன்னிகரற்ற தனித் தோழர் என்பது நன்கு புலனாகின்றது.

# வாசகர் காட்டும் முத்தி நெறி

**மு. வயிரவப்பிள்ளை**
*செந்தமிழ் மாமணி, சித்தாந்த வித்தகர்.*

பெறுதற்கரிய மானிட சரீரம் நமக்குக்கிடைத்துள்ளது. ''அரிது அரிது, மானிடராதலரிது'' என்பது ஔவை வாக்கு. ஓரறிவுள்ள புல் தொடக்கம் ஆறறிவுள்ள மனிதர் வரை வளர்ச்சி பெறும் உயிர் வர்க்கங்களில் பகுத்தறிவும், ஞானமும், கல்வியும், நயக்கப் பெறும் நிலை மனிதர்க்கேயாகும். ''புல்லாகிப் பூடாய், புழுவாய், மரமாகிப், பல் விருகமாகிப், பறவையாய், பாம்பாகிக், கல்லாய், மனிதராய், பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய்த் தேவராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என மாணிக்க வாசக சுவாமிகள் அருளியிருக்கின்றார்கள்.

**''அண்ட சஞ்சு வேதசங்கள் உற்பிச்சம்**
**சராயுசத்தோ-டெண்,**
**நாலெண்பத்து நான்கு நூறுயிரத்தா-யுண்டு**
**பல்யோனியெல்லா**
**மொழிந்து மானிடத்துதித்தல்-கண்டிடிற்**
**கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்''**
என்கிறது சிவஞான சித்தியார்

இத்தகைய அரிய மானிட சரீரத்தை நாம் பெற்றுள்ளோம். ஏன் இந்த மானிட சரீரம் வகுக்கப்பட்டதென்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்று. ''மானிட சன்மந் தானும் வகுத்தது மனம் வாக்குக் காயத் தானிடத்தைந்து மாகும் அரன் பணிக்காக'' என்கிறார் சிவஞான சித்தியார் அருளிய அருணந்தி சிவசாரியார். பரம் பொருளாகிய சிவபெருமானை வழிபட்டுத் துன்பத்தினின்றும் நீங்கி இறவாத இன்பம் அடைவதற்காகக் கொடுக்கப்பட்டது மானிட சரீரம். அந்த மானிட சரீரத்தைப் பெற்றாலும் கூன், குருடு. செவிடு, நீங்கிப் பிறத்தலரிது. ஞானமும் கல்வியும் பெருமலிருப்பதற்கு ஆணவம் கன்மம், மாயையாகிய மலங்கள் பந்தித்திருப்பதே காரணம்.

அப்பந்தங்களின்றும் நீங்குவதெப்படி? ''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுகபற்று விடற்கு'' இறைவன் எழுந்தருளியிருக்கும் இடந்தொறும் இறைஞ்சி நன்றி சேர் சிவபுண்ணியம் புரிதல் வேண்டும்; அதாவது பரமசிவனுடைய திருவடிகளை மெய்யன்புடன் வழிபடல் வேண்டும். இவ்வழிபாட்டுக்கு அங்கம் பாசங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலுமாம். அப்படிச் செய்யின் நல்வினை தீவினையாகிய இருவினைப்பயனும் துலை புகும் பொருளென நிறை நிகர்க்கும்; அதாவதுஇரு வினையொப்பு உண்டாகும். ஆகவே பந்தங்கள் நசிந்து மலபரிபாகம் ஏற்படும். அதனல் திருவருள் பிரகாசிக்கும் சத்திநிபாதம் கிட்டும், ஆன்ம சுத்தியுண்டாகி சிவானந்தம் அடையப்பெறலாம்.


மாணிக்க வாசக சுவாமிகள் கடவுளை வழிபடும் முறையை அழகாக வருமாறு கூறுகிறார்.

**''சிந்தனை நின் தனக்காக்கி, நாயினேன் தன்**
**கண்ணினை, நின் திருப்பாதப் போதுக்காக்கி,**
**வந்தனையும் மலர்க்கே யாக்கி, வாக்குன்**
**மணி வார்த்தைக் காக்கி ஐம்புலன்களார**
**வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த**
**விச்சை மாலமுதப்**
**பெருங்கடலே மலையே யுன்னைத் தந்தனை......**

பின் அவரே ''தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர் அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தென்பால்'' என வினவி மகிழ்கிறார். அவர் இறைவனை வழிபட்டு சாயுச்சிய பதவியடைந்தவர்.

எந்த நேரத்தில் இந்த அரிய சரீரம் எம்மை விட்டு நீங்குமென்பது விளங்காமையால் எப்போதுமே இறைவனை வழிபடல் வேண்டும். ஆதலால் நின்றும் இருந்தும், கிடந்தும் நடந்தும் சிவப்பரம் பொருளை நினை என்பதே மணிவாசகர் காட்டும் முத்திநெறி!

# முதலாவது சிரார்த்ததின நினைவு



**திரு. பொன். ஸ்ரீ ஸ்கந்த ராஜா**

தோற்றம் : 8 - 2 - 1905

மறைவு : 24 - 12 - 1968

★

**திருமதி. கண்மணி ஸ்ரீ ஸ்கந்த ராஜா**

தோற்றம் : 22 - 9 - 1909

மறைவு : 2 - 1 - 1969

சிவநெறிக்கும், செந்தமிழுக்கும் காலமெல்லாந் தொண்டாற்றி இறைவனடி சேர்ந்து இன்பத்துயில் நிகழ்த்தும், இறவாப்புகழ் பெற்ற, எமது சங்க முன்னாள் காப்பாளரும் - சைவப் பெரியாருமான **சைவசிகாமணி பொன். ஸ்ரீ ஸ்கந்த ராஜா** அவர்களையும், அன்னாரின் அன்பு வாழ்க்கைத் துணைவி - மங்கையர் திலகம் **திருமதி. கண்மணி ஸ்ரீ ஸ்கந்த ராஜா** அவர்களையும் என்றும் மறவா நன்றியுடைய கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றது.

# தமிழ் விரகர் ஞானசம்பந்தர் காதலர்களுக்கு நல்ல வழிகாட்டி !

செ. தனபாலசிங்கன் B. A. Lond.

இந்த உலகத்திலே ஒரு சிலரைத் தவிர, காதல் உணர்ச்சிக்கு எல்லோருமே கட்டுப் பட்டிருக்கிறார்கள். காதல் என்ற இன்ப அணைப்பும், தெய்வீகப் பிணைப்பும் தானே இன்று உலகத்தை ஆளுகின்றன. காதல் இருப்பதனால் காப்பியங்கள் பிறக்கின்றன; கலைகள் உருவாகின்றன; தமிழ் இலக்கியத் திலேகூட களவு, கற்பு என இருவகை மணம் இடம் பிடித்திருக்கின்றன. களவொழுக்கம் தமிழ் நூல்களிலே சிறப்பாகப் பேசப்படுகின் றது. 'ஆலவாயில் அதிர் கடைக் கடவுள் களவியல்' என ஓர் இலக்கண நூலை நமக்கு அளித்தமையே களவொழுக்கம் காட்டும் காதலின் பெருமையினாற் றானே!

ஓர் அற்புதமான கதை! ஒரு காதலனுக் கும் காதலிக்கும் நெடுநாட்களாகவே பழக் கம் இருந்து வருகின்றது. எங்கே இவர்கள் முதன்முதல் சந்தித்தார்கள், இந்தக் காதற் பயிர் எவ்வாறு முளைகொண்டு பயிராகியது என்பது எல்லாம் யாருக்குமே தெரியாது. காதலியின் உயிர்த்தோழிக்கு மட்டுமே தெரி யும். ஆனால் காதலியினுடைய பெற்றார் சுற்றத்தார்கள் இந்தத் திருமணத்தை நடத்த விடமாட்டார்கள் என்பதைத் தோழி அறி வாள். மற்றொருவனுக்கு இப்பெண்ணை மணம் முடித்து வைக்க ஏற்பாடுகளும் செய் கிறார்கள். காதலி வேறு ஓர் ஆடவனை திரு மணம் செய்யவே மாட்டாள்; அத்தகைய நிலை ஏற்பட்டால் தன் உயிருக்கே உலை வைத்து விடுவாள் என்பதை உணர்கின்றாள் உயிர்த்தோழி. இரு வழிகள் அவளுக்குத் தெரிகின்றன. ஒன்று தலைவிதிப்படியே இருக் கட்டும் என்று கண்மூடி மௌனியாக இருத் தல். மற்றொன்று, சுற்றத்தவர்கள் காதலி யின் நிலையைப் புரிந்து கொள்ள மறுக்கின்ற நிலையிலே அவள் விரும்பியவனையே மணந்து கொள்ள உதவுதல். காதலனுடன் காதலி ஓடிவிடவேண்டும் என்று முடிவுக்கு வருகிறாள் தோழி; ஏற்பாடுகளும் செய்து விடுகிறாள்.

அடுத்த நாள் இரவோடிரவாக ஊரையும் மறந்து, உற்றாரையும் மறந்து, பெற்றோரை யும் மறந்து உயிர்க் காதலனுடன் ஓடிவிடு கிறாள் காதலி.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதான்
என் செய்யும்?

இந்தக் கலித்தொகையை அவள் அறிவாள்!

காதலன் செட்டிப்பிள்ளை. அதனால் வாழ்க்கை வரண்ட பாலைவனமாகி விடாது என்பதைக் காதலி அறியாமலா இருப்பாள்?

இருவரும் விரைந்து செல்கின்றார்கள். திருமருகல் என்ற திவ்விய ஷேத்திரத்துக்கே வந்து விடுகிறார்கள். கோயிலுக்குப் புறத்தே இருந்த மடத்திலே அடுத்த நாள் இரவு தங்கு கிறார்கள். இருவரும் நெடுவழியே வந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிவிடுகிறார்கள். செட்டிப்பிள்ளையைச் செந்நாகம் தீண்டுகிறது உயிரே போய்விடுகின்றது. கதறி அழுகிறாள் காதலி. திருக்கோயிலை திரும்பிப்பார்த்து எம்பிரானுக்கே முறையிடத்தொடங்குகின் றாள். "தேவர்கள் உய்யும் பொருட்டு நஞ்சை அமுதாக்கிய கடவுளே' வெந்து பொடியாகிய மன்மதனுடைய உயிரை அவன் மனைவி இரதி வேண்ட அருளிச் செய்த கருணாநிதியே, மார்க்கண்டேயருக்காக இயமனை உதைத்த இறைவனே, திருமருகலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானே, தேவரீர் இந்தக் கொடியவிஷம் நீங்கும் பொருட்டும் அடியேன் துக்க சாகரத்தினின் றும் கரையேறும் பொருட்டும் அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்கிறாள்.

திருக்கோவிலுக்கு வந்திருந்த ஞானசம் பந்தக் குழந்தையின் காதிலே அவளுடைய பிரார்த்தனை கேட்கிறது. அடியார் புடைசூழ அங்கே வருகிறார். "அம்மா, பயப்படாதே. நிகழ்ந்தது என்ன? சொல் பார்க்கலாம்" என்று அருளிச் செய்கிறார். கன்னிகை கண்ணீர் சொரிகிறாள். ஞானசம்பந்தக் குழந்தையின் திருவடியிலே விழுந்து நமஸ்கரித்துப் பேசத் தொடங்குகின்றாள். "என் ஊர் வைப்பூர்; என் பிதா தாமன். அவருக்கு புத்திரிகள் எழுவர். அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரையும் இவனுக்கு மணஞ் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி ஏமாற்றி விட்டார் என் பிதா. அதனால் இவனுக்கு நான் வாழ்க்கைப் பட வேண்டும் என்று கருதி என் பிதா மாதாக்களையும் விட்டு இவனையே கதி என்று வந்தேன். இவனும் இன்று பாம்பினால் தீண்டப்பட்டு இக்கதிக்குள்ளானான். கடல் நடுவே கலம் கவிழப் பெற்றார் போல் நிற்கின்றேன். காத்தருள வேண்டும்" என்று கதறுகிறாள். புழுப்போலத் துடிக்கிறாள்.

பார்க்கிறார் ஞானசம்பந்தக் குழந்தை. பெண்ணின் பெருந்துயரை அறிகிறார். திருமருகல் உறையும் பெருமான் மேல் பாட்டுக்கள் வருகின்றன. தொடங்குகின்றார் முதலாவது பாடலை!

**சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்**
**விடையாய் எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே**

பாடலிலே பெண்ணின் துயர் தெரிகிறது தானே! ஆண்டவனுக்கு ஒரு கேள்வியும் பிறக்கிறது. இந்தப் பெண் இப்படியெல்லாம் பதறி அழுகிறாளே, இது உனக்கு அடுக்குமா என்பதுதான் அந்தக் கேள்வி.

திருமருகல் உறையும் பெருமான் திடுக்கிட்டுப் போகிறான். வரவழைத்தால் வாரா திருக்க வழக்குண்டோ? திருவருள் பெருகுகிறது. செட்டிமகன் உயிர் பெற்றே எழுந்து விடுகின்றான். காதலர்களின் கனிந்த வாழ்வும் ஆரம்பமாகிறது.

ஞானசம்பந்தக் குழந்தைக்குக்காதல் வாழ்வின் அருமை தெரியும் என்றால் அது வியப்பாகவே இருக்கும். தமிழுக்கே உரிய காதற் துறையைக் குறிப்பாக வைத்து முதல் திருமுறையில் முதல் பதிகத்தில் முதலாம் பாட்டிலே தோடுடைய செவியனைப் பாடி இருக்கிறார். இறைவனிடத்தே இருக்கின்ற காதல் முற்றிவரும்போது அது பக்தியாக உருவெடுக்கிறது. தலைவன் பிரிகின்றான். பிரிவால் வேறுபட்ட தலைவியை நோக்கி, உன்னுடைய உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் யார் என்று தோழி கேட்கிறாள். அந்தக் கேள்விக்கு விடையாக அமைத்துப்பாடுகிறார் ஞான சம்பந்தர். உள்ளங்கவர் கள்வன் பிரமாபுர மேவிய பெம்மான்என்றே சொல்லிவிடுகிறார். அவருக்கு ஆண்டவன் மேல் இருந்த காதல் கரை புரண்டோடுகிறபோது தன்விரக நிலையைத் தம் தலைவனாகிய தோணிபுரப் பெம்மானுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று வண்டொன்றையே தூது விட்டிருக்கிறார். பாடல் இதுதான்!

**வண் தரங்கப் புனற் கமலமது மாந்திப்**
**பெடையி னொடும்**
**தண்தரங்க இசைபாடும் அளிஅரசே ஒளிமதியத்**
**துண்டர் அங்கப் பூண்மார்பர் திருத்தோணி**
**புரத்துறையும்**
**பண்டரங்கர்க்கென் நிலைமைபரிந்**
**தொருகாற்பகராயே**

இளம் பிள்ளையாகிய ஞானசம்பந்தப் பெருமான் இயற்கையின் எழிலைக்கவிதையிலே ஓவியமாகக் காட்டி இருக்கிறார். மனித உள்ளத்திலே பொங்கித் ததும்பி வழியும் மிக மிக நுட்பமான உணர்ச்சியாகிய காதலை ஆன்ம நாயகனிடத்திலேயே ஏற்றி எடுத்த எடுப்பிலேயே பாடத்தொடங்கி இருக்கிறார். இறைவனின் குரை அழகும் கோல அழகும் அவருடைய திருப்பாடல்களிலே கூத்தாடுகின்றன. இறைவன் காதலன்; ஆன்மா காதலி, என்ற குறிப்பை விளக்கவேண்டிய தமிழுக்கே உரிய காதல் துறையில் முதற் பதிகத்தை பாடி அருளிய சம்பந்தப் பெருமானுக்குக் காதல் வாழ்வின் அருமையும் பெருமையும் தெரியாமலா இருக்கும்?

தூய்மையான காதலை இறைவன்பால் திருப்பமுடியும் என்பதைச் சொல்லித்தரும் தமிழ் விரகர் சம்பந்தர் இளங் காதலர்களுக்கு நல்லவழி காட்டி!

# சூழற்காற்றிலே சமயம்

பண்டிதர் சி. சேதுகாவலர்
M.A.; B.O.L., B.T., Dip. in Ed. Psych., Dip. in Politics

எமக்குச் சமயம், வேண்டுமா? வேண்டாமா? மக்களுக்குச் சமயம், நன்மையளிக்கிறதா? அன்றேல் தீமை தருகிறதா? சமயமில்லாத சமூகம், அமைதியாக, நன்ருக வாழ முடிகிறதா? முடியுமா? முடியாதா? இவை தாம், நாம் இன்று சிந்திக்கும் விஷயங்கள்.

அன்று தொட்டு சரித்திரம் எட்டிப்பார்த்த நாள் தொட்டு இன்றுவரை சமயத்தின் பெயரால் நடந்த சதிகள் பல, பூசல்கள் பல, போர்கள் பல, அழிவுகள் பல. இவை கண்கூடு எனவே இத்தகைய சமய நம்பிக்கையினுல் நாம் கண்டபலன்? தொடர்ந்துவரும் தீமைகளன்றி நன்மைகள் எவற்றையும் காண முடிகிறதில்லை. இது வெளிப்படைக் காட்சி.

பல கோணங்களிலிருந்தும் இவ்வினுக்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். சமயம் ஒரு கூரிய கத்தியைப்போன்றது. நல்லவழியில் இக்கத்தியைப் பயன்படுத்தவும், தீயவழியில், அழிவு வேலையிற் பயன்படுத்தவும் முடியும். ஆக்க வேலையில் கத்தியால் நாம் அளவற்ற பயனடைகின்ருேம். நாம் செல்லும் பாதையில் உள்ள முட்களையும், செடிகளையும், வெட்டிவீழ்த்தி வழிசெய்து கொள்ள, கத்தி உதவுகிறது. மரக்கொப்புகளை, வெட்டியெடுத்து புதுமரங்களை நட்டு உண்டாக்குவதற்கான ஆக்கவேலையிலும் கத்தி பயன்படுகிறது. ஆனுல் இதே கத்தி தன்னுேடொத்த இன்னெருவனுடைய கழுத்தை வெட்டி, அவனை மாய்க்கவும் உதவுகிறது. அழிவையும் கேட்டையும் செய்வதனுல் நாம் கத்தியை அறவே நீக்கிவிடவும் முடிகிறதில்லை. கத்தியால் பெறக்கூடிய நன்மைகளும், தீமைகளும் கத்தியை வைத்திருக்கும் ஒருவனைப்பொறுத்திருக்கிறது.

காட்டிலே தனி வழியே செல்லும் ஒருவனுக்கு கத்தி இன்றியமையாத அவசிய தற்காப்புக் கருவியாக அமைகிறது. அவனுக்குக் கத்தி, நம்பிக்கை ஊட்டுகிறது; துணையாக நிற்கிறது; பலத்தை அளிக்கிறது; ஆனுல், மக்கள் நடமாடும் சாலைவழியே, மக்கள் கூட்டத்திலே செல்லும் ஒருவன் கத்தி ஏந்திச் செல்லுதல் பொருத்தமாகாது; அது வீண் சந்தேகத்தையும், அச்சத்தையும், வெறுப்பையும் பிறர் மனதிலே எழுப்பிவிடும். இக் கத்தியினுல் யாருக்குத் தீங்கு செய்ய வந்திருக்கிருனே என்று ஒவ்வொருவரையும் அச் செயல் எண்ண வைக்கும். தமது பாதுகாப்பையும் எண்ணி அஞ்ச நேரிடலாம். இச் செயல் நிச்சயம் பரபரப்பை மற்றவர்களிடம் ஏற்படுத்திவிடக் கூடியது.

கத்தியைபற்றிக் கூறிய அத்தனையும் சமயத்துக்கும் பொருந்தும்; ஒரு மனிதனுடைய தனியான சொந்த வாழ்க்கையில் சமயம், அளப்பில்லாத் துணைசெய்ய வல்லது; அவன் உள்ளத்தில் ஓர் தெம்பைக் கொடுத்து வாழ்விலேற்படும் பலவகை இன்னல்களையும், குழப்பங்களையும் லேசாகச் சமாளிக்க உதவுகிறது. இந்த வகையில் சமயம் வேண்டியது தான்; தனிப்பட்ட ஒருவனுடைய வாழ்விலோ, அல்லது அன்னுருடைய குடும்ப வாழ்விலோ, ஓர் செம்மையான நியதி வேண்டும். இதனைத் தந்துதவுவதுதான் சமயம். ஆதலால், ஒருவனுக்கு அவன் சொந்த வாழ்க்கை நயம்படவும், வளம்படவும், பண்புறவும் சமயம் என்ற நியதி வேண்டும்.

சிந்தனையை நெறிப்படுத்தி வாழ்விற்குதவும்படி, வளங்கொடுப்பது சமயம். வரம்பில்லாத சிந்தனைகளை, நெறியெனும் வரம்பிட்டு அன்பெனும் ஈரத்தில் பயிராக்கி வளர்க்கின்

றோம். பயிரெல்லாம் ஒரே வகைப் பயிராகத் தான் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை யல்லவா? எனவாயின் மக்களின் சிந்தனை களும் ஒரே வகைப்பட்டதாய், இருக்க முடி யாதல்லவா?

கருத்திலே சுதந்தரம்வேண்டியதுதான். சிந் தனையிலே, சுதந்தரம் வேண்டும்; கொள்கை யிலே, சுதந்தரம் வேண்டும். சுதந்தரத்தை விரும்பும், ஒருவர், பிறருடைய, சுதந்தரத் தைமதிக்கவும், பேணிநடக்கவும், கடமை யுடையராவர். இறைவனை அடைவதற்குப் பல வழிகளுண்டு; இறைவன் அருளைப் பெறு வதற்கும் பல வழிகளுண்டு; இறைவனே இல்லை என்பார்க்கும் சுதந்திரமுண்டு; அவர் களுக்கும் ஓர் மார்க்கமுண்டு.

**இல்லானை, இல்லென்பான், எய்தும் முறை யுண்டு;**
**வல்லானை வென்ற வழி**

குணங்குறியில்லாதவன், இறைவன்; நிர்க் குணங்களையுடைய பொருளை, உலகில், கேட் டறிந்ததில்லை; பொருள் என்றால், குணம், குறியிருக்கவேண்டும். இவ்வாறிருக்கும், இறைவனை இல்லாத பொருள் என்பதில், என்ன குற்றம்? கடவுள் இல்லையென்பான், கடவுள் உண்டு என்று சொல்லளவிற் சொல்லும், ஒரு கருமியிலும், பார்க்க பன் மடங்கு மனச் செம்மையும், பண்பும், உடையவனாதலால், அவன் முடிவில், இறை வனுடைய தன்மையை அடைய, இட முண்டு; உலகத்துயிர்களையெல்லாம், கொண்டுசெல்லும் மகா வலிமை பொருந் திய யமராசனை மார்க்கண்டேயராகிய அந் தணச் சிறுவன், வென்றவழியே இதனையும் அறிய வைக்கின்றது; மனவிசுவாசம் ஒன்று தான் மிக முக்கியமானது; அதனையே நாம் பக்தி என்கிறோம். தன் கருத்தில் உள்ள நம் பிக்கை ஒருவனை மேன்மையடையச் செய்யும். தன் கருத்தில் தான் கொண்டுள்ள நம்பிக்கை போல், பிறரும், தத்தம் கருத்துக்களில், நம்பிக்கை கொண்டிருப்பதைக் காணும் போது, நாம் அவர்களுடைய கருத்தையும், நம்பிக்கையையும், மதிக்கவும், போற்றவும், பழகிக்கொள்ளவேண்டும்; இவ்வறத்தைப் புகட்டாத சமயம் வேண்டுமா? வேண்டாமா? என்பது தான் எடுத்துக்கொண்ட பிரச்சினை.

தீவிரமான மூர்க்க மதப்பற்றை, (religious. fanatism) நாம், பலமாகக் கண்டிக்கின் றோம். இத்தகைய மதப்பற்றுத் தான், பூசல், சதி, போர், கிளர்ச்சி, இவற்றுக்கெல்லாம் காரணமாய் நின்றது; தனிமனிதன், தன் வாழ்க்கையைப் பொறுத்த மட்டில், பிற ரோடு தொடர்பில்லாதவிடங்களில், எத் தகைய மதப்பற்றைக் கடைப்பிடித்தாலும், நாம் சிந்திப்பதற்கில்லை; பிறருடைய சுதந் தரத்தையும், உரிமைகளையும், பாதிக்கும், அளவிற்கு இப்பற்றுத் தொழிற்படுவதா யின், இது மிக மிக, கண்டனத்திற்குரிய தாகும். கத்தியைச் சுழற்றிக் கொண்டு, மக் கள் கூட்டத்திலே, நடுச்சாலை வழியே, செல் லும், ஆயுதபாணியை, நாம், அநாயாசமாக விட்டுவிடுவதானால், அது, நிச்சயம் ஆபத் தையும், அழிவையுமே கொண்டுவரும்.

பலமதத்தினர், சுதந்திரமாக சகசம உரி மையுடன், வாழுகின்ற ஜனநாயக அர சுடைய ஒரு நாட்டிலே, ஒரு மதத்தினருக்கு தனி உரிமைகள் யாதேனும், வழங்கப்படு மானால், அது மிக்க அநீதியாகும். அது தர்மமாகாது. அரசியல் முறையிலுஞ் சரி, அது பொருத்தமற்றதாகும்.

இங்கிலாந்திலே, நீண்டகாலமாக, கத் தோலிக்க கிறித்தவ மதத்தினருக்கும், (புறெற்ஸ்டென்ட்) மாறுபட்ட கிறித்த வருக்குமிடையே, உரிமைப் போராட்டமும், பூசல்களும், சதிகளும் இருந்து வந்தன. மதக் குருமார்களே, இவற்றுக்கு முக்கியமான காரணர்களாக, விளங்கினர். தங்கள், தங் கள் வாழ்க்கையைப் புனிதப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படவேண்டிய கருவி, பிறரை, அழிக்கவும், சிதைக்கவும், முனைந்தன; மதம் நாசவேலைகளைச் செய்யும்படி மக்களைத் தூண்டின! இத்தகைய சமயம் வேண்டுமென் கிறீர்களா?

கிறீஸ்து மகான் போதித்த தர்மம் வேறு. கிறீஸ்து மதக் குருக்கள்மார் போதித்து வரும், போதனை வேறு; அத்துமீறிய செயல் களை கிறீத்து கண்டித்தார். அன்பால் பிற ரைக் கவர்ந்தார். ஆதிக்க வெறியை, வெறுத்தார். ஆனால், கிறீத்த மதக் குரு மார், ஆதிக்கத்துக்காக, இத்தனைபாடும்

பட்டார், என்பதை மறக்கலாகாது! இத ஞற்ருன் நாட்டில் சமயப்போரும் கலகமும், வந்தன. இது முன்ஞள், நடந்த கதை.

இன்று இஸ்லாமிய நாடுகள் எல்லாம் கூடி ஒரு மகாநாடு நடத்தின. ஏன்? இஸ்லாமிய மத அடிப்படையில் ஓர் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்த முடியுமா என்பது தான் இப்பிரச்சனை. இதன் விளைவென்னவாகும் என்பதை, இவ்விஸ்லாமிய நாடுகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இனி, நாம் இந்தியாவை எடுத்துக் கொள்வோம். இந்தியாவிலே, சென்ற ஆண்டுக்கு முன்னராக ஜாகிர் ஹுசேன், எனும் இஸ்லாமியர் ஒருவரை இந்திய ஜனதிபதியாக்கி அவரைக் கௌரவித்தது மாத்திரமன்றி இஸ்லாமிய மக்களும் இந்தியாவில் சரிவர, இந்துமக்களுக்குள்ள உரிமைகள் அனைத்தையும் அடையமுடியும் என்ற முடிவைக் கொள்கையாலும், சாதனையாலும் செய்துகாட்டினர்.

ஒரு நாட்டிலே பல மதத்தினர், வாழ்கின்றனர். பல சாதிமக்கள், வாழ்கின்றனர்; அனைவரும், அந்நாட்டு மக்கள் என்ற முறையில், அவர் உரிமைகளும் சமமாக இருக்க வேண்டும். நாட்டின் அரசில் மதத்திற்கு இடமிருக்கலாகாது; நாட்டின் அரசுக்கு எல்லா மதமும் வேறுபாடின்றி, இருத்தல் வேண்டும்; இதுதான் ஜனநாயக ராஜ தர்மம்.

ஆதிக்க வெறியும், அரசில் பற்றும், ஆதரவும், கொண்ட எந்த மதமாஞலும், அம் மதம் ஆத்மீக சேவை செவ்வனே செய்ய முடியாது.

''Any religious organisation, covets power and authority, which in turn abuses the spiritual purpose, for which a religious Society is founded''.

இக்காரணம் பற்றியே, எமது சைவ நெறிகளெல்லாம் கருத்துச் சுதந்திரம், வழங்கி நின்றது. நெருப்பிலே, கையை இட்டவனுக்கு நெருப்புச் சுடுவதால் அனுபவமுண்டாகிறது. சைவசமய நெறிகளை, மீறி நடப்பதன் பலனை, அவரவர் அனுபவிப்பதன்றி, பிறிதோர், சபைவிதிப்பதாஞல், அது ஆதிக்கமாகும் இதனையே எமது சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன.

★

# அருளுரைகள்

யார் துணிவுகொண்டு செயலாற்றுகிருர்களோ அவர்களுக்குச் சித்தி அடிக்கடி விளைகிறது. அது கோழைகளுக்கு அரிதாகவே சம்பவிக்கிறது.

ஓம் என்பதே வாழ்வின் மிகச் சிறந்த கூட்டாளி; ஏனெனில் அது உனக்குத் தெய்வத்தன்மையையும் நித்தியானந்தத்தையும் அளிக்கிறது.

சோம்பல் ஏமாற்றத்தினதும் தோல்வியினதும் பிதா.

ஆசை துயரத்தையும் கவலையும் உண்டாகச் செய்கிறது. எல்லா ஆசைகளையும் கைவிடுக. அமைதியாயும் மகிழ்ச்சியாயும் இருக்குக.

அழகின் இரகசியம் ஆடையும் ஆபரணமும் அல்ல; ஆஞல் நற்சீலமுந் தெய்வீக அறமுடைமையுமே.

# இவ்வாறு இறைவனை இறைஞ்சுவோம்

**ம. சி. சிதம்பரப்பிள்ளை**

"நால்வர் நெறியில்," சென்ற இரு ஆண்டுகளிலும் "இவ்வாறு இறைவனை இறைஞ்சுவாம்" என, தேவாரதிருமுறைகளை அருளிய நம் நாயன்மார்களுள், ஞானப்பாலுண்ட பரசமய கோளரியின் பனுவலும் "கற்றுணைபூட்டியோர் கடலுள் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாவே" என அருளி, இறைவனின் பேரருளை அகில உலகமும் அறியச் செய்த நாவுக்கரசரின் தேனமுதமும் எடுத்தாள இறைவனின் அநுக்கிரம் எமக்குக்கிட்டியது.

இன்று, இறைவனைத் தமது தோழனுகவே பாவித்துப், பரவை நாச்சியாரிடம் தூது விட்டும், பல அற்புதங்கள் செய்தும் "பத்தராய் பணிவார்கள் எல்லார்க்குமடியேன்" எனவும் ஓதி ஆனந்தக் கடலில் திழைக்கவிட்ட ஆலாலசுந்தரரின் அருமறையில் ஒரு பகுதியை அநுபவிப்பாம்.

"பித்தா பிறை சூடி!
மஞ்சுண்டமாலே
மதிசூடு சென்னி!
மாணுவுருவாகியோர்
மண்ணளந்தான்
மலர் மேலயன்றேடியுங்
காண்பரிபாய்!

சிந்தித் தெழுவார்க்கு
நெல்லிக்கனியே!

எனவும்,

பண்ணுளீரராய்ப் பாட்டுமானீர்!
பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்!
மாடங் காட்டுங் கச்சியுள்ளீர்!
அருமலரோன் சிரமொன்றறுத்தீர்!
மழைக் கண் மடவாளையோர்
பாகம்வைத்தீர்!

எனவும்,

மின்னனையாள் திருமேனி
விளங்கவோர்
தன்னமர் யாக மதாகிய சங்கரன்!
வீழக்காலனைக் கால் கொடு
பாய்ந்த விலங்கலான்
ஐவாயரவினை மதியுடன்
வைத்தவழகா!
மாலயனுங் காண்பரிய மாலெரி
யாய் நிமிர்ந்தோன்!
தண்புனலும் வெண்மதியுந்
தாங்கிய செஞ்சடையன்!

எனவும்,

மிடுக்குண்டென் றேடியோர்
வெற்பெடுத்தான் வலியை நெரித்தார்!
இந்திரனுக்கு மிராவணனுக்கு
மருள்புரிந்தார்!
காலமுநாயிறுமாகி நின்றார்!
வண்ட மருங் குழலாளுமை
நங்கை யோர் பங்குடையாய்!
பாதியோர் பெண்ணை வைத்தாய்!
படருஞ் சடைக் கங்கை வைத்தாய்!

எனவும்,

முல்உலமுறுவலுமை யொருபங்குடை
முக்கணனே!
பொய்யாநாவதனுற் புகழ்வார்கள்
மனத்தினுள்ளே-மெய்யே நின்
றெரியும் விளக்கே யொத்ததேவர் பிரான்!
பொன்னர் மேனியனே!
மண்ணர் பூம்பொழில் சூழ்
மழபாடியுள் மாணிக்கமே!
கொடியேறிடையாள் தலைவா!

எனவும்,

புரமூன் றெரித்த - செய்யார் மேனியனே!
ஏத்தாதிருந்தறியேனிமையோர்
தனிநாயகனே!

மறிசேர் கையினனே மதமாவுரி
போர்த்தவனே!
நீறுர் மேனியனே!
சிலேயால் முப்புரங்கள்
பொடியாகச் சிதைத்தவனே!

பாரோர் விண்ணவரும் பரவிப் பணிந்
தேத்தநின்ற - சீரார் மேனியனே!
திகழ் நீல மிடற்றினனே!
பொடியார் மேனியனே!
பிறையாருஞ் சடையாய்!
மையாய் கண்டத்திறுய்!

எனவும்

பாடுவார் பசிதீர்ப்பாய்!
பரவுவார் பிணிகளேவாய்!
பண்ணிடைத் தமிழொப்பாய்!
பழத்தினிற் சுவையொப்பாய்!

எனவும்,

பாட்டூர் பலரும் பரவப்படுவாய்
பனங்காட்டூரானே!
புலியூர்ச்சிற்றம் பலத்தாய்ச்
செற்றபுரிபுன் சடையானே!
ஏழிசையாயிசைப் பயனுயின்னமுதா
யென்னுடைய-தோழனுமாய்!
பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன்!
கங்கை தங்கியசடையுடைக் கரும்பே!

எனவும்,

கற்றகல்வியிலும் மினியானேக் காணப்
பேணுமவர்க்கெளியானே!
அல்லலுள்ளன தீர்த்திடுவானே
யடைந்தவர்க்க முதாயிடுவானே!
திருவிஞய கஞகிய மாலுக்கருள்கள்
செய்திடும் தேவர் பிரானே

எந்தையை யெந்தை தந்தை பிரானே!
மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம்
பொய்யானே!

எனவும்,

பொன்னு மெய்ப் பொருளுந்தருவானே!
ஆலந்தானுகந்தமுது செய்தானே!
திங்கள் தங்கிய சடையுடையானே
நாளுமின்னிசையாற்றமிழ் பரப்பு
ஞானசம்பந்தனுக்குல கவர்முன்றுள
மீந்தவன்!

நல்லிசை ஞான சம்பந்தனு
நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலே
சொல்லியவே சொல்லியேத்துகப்பானே!

குறைவிலா நிறைவே குணக்குன்றே!
கரியகறைக் கண்டனல்ல கண்
மேலொருகண்ணுன்
மூவரென விருவரெனமுக்கண்
ணுடைமூர்த்தி

எனவும்,

கருவரை போலரக்கன் கயிலேயம்
மலேகீழ்க் கதற - ஒரு விரலாலடர்த்
தின்னருள்செய்த உமாபதி!
என ஏற்றிப் போற்றுவாம்
இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ
நால்வர் காட்டிய நன்னெறியில் நின்று!
உழைக்கும் சைவமுன்னேற்றச்
சங்கச் சிறுர்களுக்கு!
எல்லாம் வல்ல இறைவன்
முன்னின்று காப்பாற்று வாராக!

திருமுறைகள் வாழ்க!

திருச்சிற்றம்பலம்

# சேக்கிழார் நாயனர் - வரலாற்றுச் சுருக்கம்

ரமணி ராஜகோபால்

"தொண்டை நாட்டிலே, குன்றத்தூரிலே வேளாள வர்ணத்திலே, சேக்கிழார் மரபிலே, பரமசிவனது திருவருளிலே, தமிழ்நாட்டிலுள்ளவர்கள் உய்யும்படி அருள்மொழித் தேவர், பாலருவாயர் என்னும் சற்புத்திரர் இருவர் சகோதரராய்த் திருஅவதாரம் செய்தார்கள். அவர்களுள்ளே மூத்தவராகிய அருள்மொழித்தேவர் தாம் உதிக்கப்பெற்ற சேக்கிழார் மரபை விளக்கினமையால், அவருக்குச் சேக்கிழார் என்னும் பெயர் உண்டாயிற்று. அவருடைய கல்வியறிவு ஒழுக்கங்களை அநபாய சோழ மகாராஜாவானவர் அறிந்து, அவரைத் தமக்கு முதன் மந்திரியாக்கி, அவருக்கு உத்தம சோழப்பல்லவர் என்னும் பெயரைக் கொடுத்தார்.

அவர் சோழநாட்டிலுள்ள திருநாகேச்வரமென்னும் சிவஸ்தலத்தினிடத்தே தமக்கு அன்புமிகுதலால், தம் குன்றத்தூரிலே ஒரு திருக்கோயில் கட்டுவித்துப் பிரதிட்டை செய்து, அதற்குத் திருநாகேச்வரமெனப் பெயரிட்டு, அதிலே நித்திய நைமித்திகங்களை வழுவாது நடத்துவித்துக்கொண்டு அநபாயசோழ மகாராஜாவுடைய அரசுரிமைச் செங்கோலைச் செம்மையாகச் செலுத்தி வந்தார்.

இப்படி ஒழுகு நாளிலே, சைவசமயிகளிற் சிலர் பாற்கடலுட் பிறந்த மீன்கள் அப்பாலை உண்ணுமல் வேறு பலவற்றை உண்டல் போல, மெய்நூல்களாகிய தங்கள் சைவத்திருமுறைகளைக் கற்றுணராது பரசமய சமணநூலாகிய சீவகசிந்தாமணியை மெய்யெனக் கருதிக்கற்று தங்கள் வாழ்நாளை வீணுளாகக் கழிப்பராயினர். அநபாய சோழ மகாராஜாவும் அந்நூலை மெய்யெனக்கருதிப்பாராட்டிக்கற்பராயினர். அது கண்ட அருள்மொழித் தேவர் இராஜாவை நோக்கி, "மகாராஜாவே, நீ சைவசமயியாருந்தும் இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றும் பயக்கும் சிவசரித்திரத்தைக் கேளாமல் நம் மெய்க் கடவுளாகிய சிவனை நிந்திக்கும் இந்தச் சீவகசிந்தாமணியை மெய்யெனக் கருதிக் கேட்டு உமது வாழ்நாளை வீணுளாகக் கழிப்பது தகுதியன்று" என்று கண்டிக்க; இராஜாவானவர் மனமகிழ்ந்து "இக்கதை பயனற்றதாயின் சிவசரித்திரவரலாறு யாது? ஐயம் திரிபறச் சொல்லும்" என்று வினவினர்.

அதற்கு அருண்மொழித் தேவர் "திருவாரூரிலே வன்மீகநாதர் தம் திருத்தொண்டர்களது அடிமைத் திறத்தை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள் செய்து 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க சமய குரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனர் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினர். அதற்கு திருநாரையூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப் பிள்ளையார் பொருள் சொல்ல அவரிடத்திலே ஓதியுணர்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பியானவர் திருவந்தாதியைச் செய்தருளினர். இது சிவாலயமுனிவர்கள் பலரால் போற்றிப் புகழப்பட்டது" என்றார். அதற்கு இராஜா "அதன் பொருள் சொல்லுக" என்று வினவ அருள்மொழித் தேவரும் அதனை ஓதி விரித்துரைத்தார். இதனைக் கேட்டு மனமுருகிய இராஜா "இதனை யாவரும் உணரும் பொருட்டு இலக்கணவிதிப்படி பெருங்காப்பியமாக வரைந்தருளுக" எனவேண்டினர். அருள்மொழித்தேவர் அவ்வரசரிடத்தில் எண்ணிறந்ததிரவியங்களையும்விடையையும் பெற்றுக்கொண்டு சிதம்பரகனகசபை முன் சென்று ஆனந்தக் கண்ணீர் வார, மயிர்சிலிர்க்க இரு கை சிர மேற்குவித்து "எம்பெருமானே உனது மெய்யடியார்கள் திறத்தை பெருங்காப்பியமாக விரித்துப் பாட அடியேனுக்கு அடியெடுத்துத் தந்த

ருளவேண்டும் என்று பிரார்த்திக்க தில்லை அம்பலத்தான் திருவருளால் ''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்'' என்ற அசரீரி வாக்கெழுந்தது. அதனைத் தில்லைவாழ் அந் தணர்களும் கேட்டு, மனமுருகி வணங்கி, சபாநாயகருக்கு சாத்தப்பட்ட திருமாலை திருநீறு, பரிவட்டம் என்பவற்றை அருண் மொழித் தேவருக்குச் சாத்தி மகிழ்ந்தார்கள்.


அருள் மொழித் தேவரும் சமயகுரவர்களை வணங்கி விபூதி, உத்திராக்கங்களை விதிப் படித் தரித்து **ஆயிரம்கால் மண்டபத்திற்** சென்று சபாநாயகரது திருவருளை நினைந்து இருந்து அவர் எடுத்துத் தந்த அடியை முதலாகக்கொண்டு புராணம் பாட ஆரம் பித்து, சில காலத்தில் பாடிமுடித்து அதற்குத் **திருத்தொண்டர் புராண** மெனப் பெயர்தந்து மைக்காப்புச்சாத்தி கவளிகை யில் வைத்தருளினர்.

அருள்மொழித்தேவர் புராணம் பாடுதற் குச் சிதம்பரத்தை அடைந்தபின் மகா ராஜா அளவுகடந்த ஆசையுடன் அடிக்கடி தூதுவர் மூலம் அறிந்து அவர்களுக்கு கனக மாரி பொழிந்து நால்வகைச் சேனை புடை சூழ சிதம்பரத்தையடைந்து சபாநாயகர் அருள்பெற்ற அருள்மொழித் தேவரை வணங்கி மனம் கசிய, உரைதடுமாற இறை வனை வணங்க, அப்பொழுது ''சோழனே நாம் அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழான் நம் தொண்டர் அடிமைத்திறத்தை விரித் துப் புராணம்பாடி முடித்தான் நீ அதைக் கேள்'' என்ற அசரீரி வாக்குடன் திருச் சிலம்பொலியும் கனகசபையிலே யாவரும் கேட்க எழுந்தன.

உடன் சக்கரவர்த்தி திருத்தொண்ட புராணம் கேட்க எங்குமுள்ள சிவனடியார்க் கும், அரசர்க்கும், பண்டிதர்க்கும் ஓலை அனுப்ப அனைவரும் சிதம்பரத்தையடைந் தனர். சித்திரை மாதத் திருவாதிரை நட்சத் திர நாளிலே அறுகாற்பீடமிட்டு பசும்பட்டு விரித்து புஷ்பங்கள் தூவி தூபங்காட்டி அர்ச்சித்து புராணத்தை அதன்மேல் வைத் துத் துதித்தனர். பின் அனைவர் வேண்டு கோளுக்கிணங்க சேக்கிழார், புராணப் பொருளை விளங்க பிரித்தருளினர்.

சோழ மகாராஜா நாடோறும் சபாநாய கருக்கு மகாபூசையும், தர்மமும் நடத்தி வந்தார். சேக்கிழாரும் புராண விளக்க உரையை மற்ற வருஷ சித்திரை மாதத் திருவாதிரை நட்சத்திர நாளில் முடித்தருளி னர். பின் சேக்கிழாரையும் புராணத்தை யும் யானை மீதிருத்தி தில்லைவாழ் அந்தணர் புடைசூழ மகாராஜா சாமரம் வீச பூரண கும்பம் வைத்து விளக்கேற்றிய வீதிவழியே வலம் செய்து கனகசபை சென்று திரு முறையைத் திருமுன் வைத்து சோழராஜா **''தொண்டர் சீர்பரவுவார்''** என்னும் திருநாமம் சூடி அவரை மண்டபத்திலிருத்தி அவர்திருவ டியை வணங்கினர். பின்சோழமகாராசாவின் வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பி யால் வகுக்கப்பட்ட பதினொரு திருமுறை களுடன் திருத்தொண்ட புராணம் கூடி **பன்னிரெண்டாம் திருமுறையாக** வகுக்கப் பட்டு சந்நிதியில் வைக்கப்பட்டது. பின் அருள்மொழித்தேவரின் தம்பி பாலறு வாயரை வரவழைத்து மன்னன் அவர்க்கு **தொண்டைமான்** என்னும் பெயர் கொடுத்து தன் மந்திரியாக்கினான். அருள் மொழித் தேவர் சிதம்பரத்தில் சிலகாலம் எழுந்தருளி யிருந்த பின் பேரானந்த சொரூபியாகிய தில்லை அம்பலத்தானின் திருவடி நிழலை அடைந்தார். எம் எம்பிரான் அருள் பெற்ற திருவருட் செல்வர்களான அறு பத்து மூவரின் பொன்னேடுகளில் பொதிக் கத்தக்க வரலாறுகளை எமக்களித்த சேக்கி ழார் நாயனுர்க்கு அவர் முத்திபெற்ற தல மாகிய தில்லையில் திருக்கோயில் கட்டு வித்து பிரதிட்டை செய்து நித்திய பூசை நடத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

# அலைகடல் பிரித்தாலும் - அன்பு மறவோம்!!



திரு. சு. லிங்கேஸ்வரன்

**1952-1965**
மாணவன்

**1965-1970**
ஆசிரியன்

**1966-1968**
பாடசாலைச் செயலாளர்

**1968-1970**
உதவிப் பொதுச் செயலாளர்

**1969**
"நால்வர் நெறி" ஆசிரியர்

**1969-1970**
தொண்டரணி தானைத் தலைவர்

இறைபணியால் ஊக்கமுள்ள இளைஞர் பலரை உலகிற்கு உருவாக்கிய, எமது கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்களையும், அறிவு-ஆற்றல்-உழைப்பு-ஊக்கம்-எழிமை திறமை நிறைந்த நல்லானாக வளர்வதற்கு-வாழ்வதற்கு வித்திட்ட பெருமையையும் தேடிக்கொண்டது.

ஆரம்பத்தில் எமது சங்க சமய பாடசாலையில் சமயக் கல்வி பயிலும் மாணவனாக சேர்ந்த திரு. சு. லிங்கேஸ் ஈற்றில்தனது அனுபவம் - ஆற்றல் - சேவையினால் உயர்ந்து, எமது சங்கத்தின் அச்சாணிகளில் ஒன்றாய் பணிபுரியும் பெருமையைத் தேடிக்கொண்டார்.

இளம்வயசும்-இனிய சுபாவமும்-எவருடனும் இலகுவில் பழகக்கூடிய எழிமையும் - திறமையும் கொண்ட திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்கள் தனது கல்லூரி வாழ்க்கையினின்று விலகியதும் கொழும்பு பொது வைத்திய சாலையில், X-கதிர் பொறியியலாளராக பணியாற்றி வந்தார்.

லண்டன் X-கதிர் பொறிஞர் சங்கத்தினால் ( Member of the Society of Radiographers Diognostic ) 1969-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் நடுப் பகுதியில் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையில் பங்கு கொண்டு, தென்கிழக்கு ஆசியாவிலேயே முதல்தர மாணவனாக விசேட சித்தி பெற்று, எமது சங்கத்திற்கும்-எமது இனத்திற்கும்-எமது நாட்டிற்கும்அழியாப் புகழையும்-பெருமையையும் தேடித் தந்துள்ளார். இத்தனைக்கும் வயது 22 !

இவரது 'இலைமறைகாய்' போன்ற அரிய சாதனையை மெச்சி, இலங்கை X-கதிர் நுட்ப இயல் கல்லூரியின் சார்பில், பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்களும் - சுகாதார அதிபர் ( D. H. S. ) Dr. B. குணசேகார அவர்களும் உதவி சுகாதார அதிபர் Dr. A. இராசையா அவர்களும் பல பரிசுகளையும்-நற்சான்றிதழ்களையும் வழங்கியுள்ளார்கள்.

இளம் வயதிலேயே இப்பேர்ப்பட்ட ஆற்றலைப் பெற்றுள்ள திரு.சு. லிங்கேஸ்வரன் அவர்கள் மேலும் தனது அறிவு வளர்ச்சியை பொறியியல் துறையில் அபிவிருத்தி செய்யுமுகமாக - உயர் கல்விக்காக எதிர்வரும் 3-2-70 மாலை 3-40 மணிக்கு எம்மைவிட்டு — இலங்கையை விட்டு லண்டன் மாநகரம் செல்கிறார்.

பிரிவால் துயரும் — உயர்வால் பெருமையும் அடையும் எமது சங்கத்தினர் ; "செல்லும் நெறியெல்லாம் நால்வர் நெறியாகி
வெல்லும் வழி கொண்டு வாரீர் !!"

என, எல்லாம் வல்ல முருகப் பெருமானின் பாதர விந்தங்களை பணிந்து-வாழ்த்தி வழியனுப்புகின்றோம்.

அலைகடல் பிரித்தாலும் — அன்பு மறவோம் !!

வணக்கம்

**கொழும்பு-கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்**

# சைவ சமய வாழ்க்கையின் குறிக்கோள்

தி. நவநீதன்

"அரிது, அரிது மானிடராய்ப் பிறத்த லரிது" எனும் தமிழ் மூதாட்டி ஔவையின் கூற்றுக்கமைய சகலராய்ப் பிறந்துள்ள நாமெல்லோரும், பவப்பிணி ஒழித்து பேரின்பமடைய உரிமையுடையோராவோம். எமக்கு முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் குருவாக எழுந்தருளிப் பதிஞானம் ஊட்டி பிரபஞ்சத்தை மறப்பித்துச் சிவ சொருபப் பிரகாசம் உண்டாக்கி அருளுவார் என்பது சைவ சித்தாந்தம்.

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனுகும் கொள்கை"

எனப் பெருந்துறைப்பிள்ளை மணிவாசகர் இறைவன் ஆன்மாவை ஆட்கொள்ளும் முறைமையை விளக்குகின்றுர்.

உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் குறிக்கோள் உண்டு. அதே போன்று சைவ சமய வாழ்க்கையிலும் சிறந்ததொரு குறிக்கோள் காணப்படுகிறது. மக்களின் இதயத்தில் தளரா அன்புவிதை பதிக்கப்பெற்று, வளர்ந்து, இறை அனுபவமாக முதிர்வதே சைவசமய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும். இத்தகைய ஒப்பற்ற குறிக்கோளை உடைய சமயம் மூன்று பெரும் பகுதிகளை அடக்கியுள்ளது. அவை, தத்துவம், கிரியை, அனுபவம் என்பன. பேரின்ப மயமான சிவ ஜோதியோடு ஒன்றுபட்டு, ஆன்மா பிறவிப் பிணியை நீக்குவதற்காகவே, இவ்வுலகில் பிறந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன, சிவனருட் செல்வர்களின் வாழ்க்கை அனுபவம். இவை மற்றும் தத்துவங்களையும், கிரியைகளையும் சிறப்பாகவும், இலகுவாகவும் பெற்றிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் அருளாவகையால் அருள்புரியவரும் இறைவனை அடைய நாம் அரும்பெரும் வேள்விகள் ஆற்ற வேண்டிய அவசியம் இல்லை. எம் விம்பத்தைக்காண நாம் பார்க்கும் கண்ணுடி எத்துணை துல்லியமாக இருப்பது அவசியமோ அது போன்று எம் உள்ளத்தில் நிர்மலனைக் காண்பதற்கு உள்ளத் தூய்மை இன்றியமையாதது. இக்கூற்றை மணிவாசர் திருவெம்பாவையில் ஓர் பாடலில் அழகிய சிறு வரியினுல் பின்வருமாறு விளக்குகின்றுர்.

"சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை"

என்றது சிந்தனைக்கு விருந்து. சித்தத்தில் அழகுடையவர் மனத்தின் கண் அன்புத் தூய்மையுடையோராவர். அன்னுர் அப்பரம் பொருளைப் பாடாமல் இருக்கமாட்டார்கள். இதன் மூலம் சித்தத்தில் அழகுடையவர்களிடம் சிவ வழிபாடு பரிணமிக்கும் என்பது வெள்ளிடமலை.

யாகங்களையும், கிரியைகளையும் செய்வதனுலோ அன்றேல் ஞான நூல்களைக் கற்பதனுலோ, தத்துவங்களைப் பேசுவதனுலோ ஆன்மாக்கள் பிறவிப்பயனை அடையா. இதைத் தெய்வப் புலவர் பின்வருமாறு விளக்குகின்றுர்.

"மனத்துக் கண் மாசிலனுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

"நன்னெறி நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்றே பெரிது நீ முன்னைய வினையே"

என்பது நக்கீரர் கூற்று. சமய வாழ்வின் முக்கிய அம்சம் இறைவனின் திருப்பாதங்களை அடைய உள்ளத்தூய்மை பெறுதலே என்பதை வலியுறுத்துகிறது.

தம் குற்றமற்ற இதயத்தில் சிவாலயம் அமைத்து அவ்வுள்ளக் கோவிலில் இறைவனைக் குடியேற்றி அன்பு வழிபாடு செய்து உய்ந்த பூசலார் நாயனுரினதும், தன்மேல்

உயிரை, வைத்து அன்புள்ளத்தோடு பூசிக்கும் ஆன்மாக்களுக்கு மென்மேலும் துன்பந்தந்து வேடிக்கை பார்த்துச்சோதிக்கும் முறைமைக்குச் சான்ருக பாண்டிநாட்டு வந்திமூதாட்டியினது கதையையும், தாண்டகவேந்தர், திண்ணன், சிறுத் தொண்டர் ஆகியோரது வரலாறுகளும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தன் வாணிபத்துக்குப் பங்கம் வந்துற்றதே என்றும் தயங்காது, கூலியாளாக எழுந்த இறைவனுக்கு வயிரார உண்பித்து பாக்கியம் பெற்றவள் வந்தி. தாயுமிலி, தந்தையுமிலி, தான் தனியனுகிய இறைவன் தாயன்பைப் பருக வந்த குழந்தையைப் போன்று நடித்து அணைகட்டாதுவிளையாடித் திரிந்தபோதிலும் அவ்வம்மை சீற்றம் கொள்ளாது செம்மனச் செல்வியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் எரியுறு நீர் போல ஏகம் தங்கும் வியாபகனும் இறைவனை அடைய, எத்தனையோ வழிகளை நம் சமய நாயன்மார் வரலாறு மூலமாகக் கற்பிக்கின்றது. நெஞ்சையும் என்பையும், ஊனையும் உருக்கும் இனிய திருமுறைகளைப் படித்து இறை பாசத்தை வளர்க்கும் வாய்ப்பு சைவர்களாகிய எமக்கு மட்டுமே உண்டு. இவற்றை நம்மில் எத்தனை பேர் கடைப்பிடிக்கின்ருேம்?

ஆகவே பேதமற்ற அன்பே இறைவனின் திருவுள்ளம். அவனை அடைய வேண்டுமாயின் நம்உள்ளத்தில்பேதமற்றஅன்பையும்,கிரியையும் வளர்த்து மனத்தூய்மை அடைய வேண்டும். அதுவே சைவ சமய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

★ ★ ★

மாணவர் பகுதி

# நால்வர் காட்டிய அன்பு வழி

“**அன்பே சிவம்**” என்று போதிக்கிறது சைவ சித்தாந்தம். ஆனுல் அப் போதனையை சாதனை செய்தவர்கள் மிகச் சிலர். சைவ சித்தாந்தத்தின் அடிப்படையிலே அன்புவழியிலே வாழ்ந்து காட்டிச் சென்ற“சிவநேயச்செல்வர்களுள்” “நால்வரை” முதல்வராக கருதுகிருேம்.

ஞானசம்பந்தர் இறைவனை உண்ண உண்ணத் தெவிட்டாத உயிரென்றும், முலையினின்று உணர்வென்னும் பாலை வண்ணமுடன் தனக்கூட்டும் தாயாகவும், தந்தையாகவும் காண்கிருர்.

அன்புருவான எசமானுகிய இறைவனுக்கு இன்புடன் தொண்டு செய்யும் தொண்டனுகை தம்மைக் கண்டு அதில் மெய்மறக்கிருர் அப்பர்.

தோளோடு தோள் நின்று தனக்கு வேண்டியதைச் செய்யும் நண்பனுய் இறைவனைக் காண்கிருர் சுந்தரர்.

தன்னுேடு கைகோர்த்து நிற்கும் காதலனுக இறைவனைக் காண்கிருர் மாணிக்கவாசகர்.

இந்த நால்வர் நெறியிலும் அன்பு பரந்திருப்பதைக்காண்கிருேம். “உள்ளத்தில் ஒளியுண்டானுல் வாக்கில் ஒளியுண்டாகும்.” அதுபோல உள்ளத்தில் அன்பு உண்டானுல் வாக்கிலும், வெளியிலும் அன்புண்டாகும். அகமும், புறமும் அன்புண்டானுல் அகமும், புறமும் அன்புருவான சிவனைக் காணலாம். இறைவனைக் காண ஏதுவான அன்பை பெறுவது எங்ஙனம்?

இறைவன் இன்பகோட்டைக்குள்ளே இருக்கிருன். அத்தகைய கோட்டையை திறக்க

அருள் என்னும் சாவி வேண்டும். அருளை அன்பால் அன்றி வேறு எவற்ருலும் பெறல் அரிது. அவ்வன்பை ஜீவகாருண்யம் என்ப தால் பெறலாம். ஜீவகாருண்யம் நால்வர் வழியிலும் தொனிக்கக் காண்கிருேம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் திருமரு கல் என்னும் தலத்தில் இருக்கும்போது ஒரு பெண் தன் முறைமாமனேடு வீட்டிற்கு தெரி யாமல் அவனேடு வந்தபோது, அரவம் தீண்டி இறந்து விட்டான். முறைமாமன் என்பதைக் கண்டு இறைவனிடம் திருமருகலில் முறை யிட்டாள். இதைக் கேட்ட ஞானசம்பந்தர் பெண்பால் வந்து அவளது துயர சரிதத்தைக் கேட்டதும் அவரது உள்ளம் ஜீவகாருண்யத் தால் துடித்தது. அன்பு வெள்ளம் பெருக் கெடுத்தது. அங்கு தெள்ளுதமிழ் இசை பிறந்தது. ''சடையாய்எனுமால்'' என்ற தேவாரப் பதிகம் பாடி முடிந்ததும் முறைமா மன் எழுந்தான். அவர்கள் இருவர்க்கும் சம் பந்தர் மணம் முடித்து வைத்தார். இங்கே ஞானசம்பந்தரின் ஜீவகாருண்யஉள்ளம்தான் இறைவனின் உள்ளத்தைக் கரைத்து அவனை உயிர் பெற்று எழும்பச் செய்தது.

''பட்டினி'', என்பது உடற்பிணியன்று; உயிர்ப்பிணி. ஆகவே ''உண்டி கொடுத் தோர் உயிர் கொடுத்தோர்'' என்கிருர் சீத் தலைச்சாத்தனுர். பசித்திருக்கும் ஒருவனுக்கு ''ஆன்மாவிற்கு ஏதப்பா பசி?'' என்று உப தேசம் செய்தால் அவர்கள் காதில் அது ஏருது. காரணம் அவர்களுக்கு தேவையா னது உணவு.

''திருவீழி மிழலை'' என்ற நகரமே பஞ்சத் தால் வாடியது. அப்போது அப்பரும் சம்பந் தரும் அங்கு வந்தனர். மக்களைக் கண்டனர்; உள்ளம் குமுறியது. ஜீவகாருண்யம் அவர் களது உள்ளத்தை உறுத்தியது. இறைவனை வேண்டினர்; இறைவன் அவர்களுக்கு படிக் காசு கொடுத்தார். படிக்காசு பெற்றுப் பட் டினி என்னும் தீயை உணவு என்னும் நீரால் அணைத்தனர். இங்கு நாம் காணும் இருவருமே அன்புள்ளம் படைத்தவர்கள்; ஜீவகாருண் யம் நிறைந்தவர்கள்.

திருப்புக்குளியூரில் ஒரு வீட்டில் அழுகைக் குரல். மறு வீட்டில் மங்கள ஓசை. காரணம் ஒரு வீட்டில் அந்த வீட்டினரின் மகனை முதலை உண்டுவிட்டது. மற்ற வீட்டினரின் மக னுக்கு பூணூல் உபநயம் நடைபெறுகிறது. இருவரும் ஒரே வயது உடையவர்கள். அப் போது அங்கே சுந்தரர் வருகிருர். அந்த காட்சியைக் கண்டதும் அவர் உள்ளம் விம்மி யது. ஜீவகாருண்ய உணர்ச்சி வேகத்தில் சுந்தரர் நாவிலிருந்து சுந்தரத் தமிழில் ''எத் தான் மறக்கேன்'' என்ற பதிகம் வெளிப்பட அன்புக்கடியவனுன இறைவன் முதலை வாயி னின்றும் பிள்ளையை வெளிவரச் செய்கிருர். இங்கேயும் சுந்தரர் உள்ளத்தில் அன்பின் பெருக்கையும், ஜீவகாருண்ய உணர்ச்சியை யும் காண்கிருேம்.

சகோதரத்துவத்தைப் பெரிதும் கண்டவர் சுந்தரர். தில்லைவாழ் அந்தணர் தொடக்கம் ஆதிசைவர், அரசர், வைசியர், வேளாளர், குயவர், சலவைத் தொழிலாளர். வேடர், இடையர், மாமாத்திரர், மீனவர், ஹரிஜனர், பாணர், ஈழவர், சாலியர் வரை குலம் கோத் திரம் பாராது அனைவரையும் ஒருகுல மேதை களாக கருதி தேமதுரத் தமிழால் ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அனைவருக்கும் தம்மை அடிமையாக் கிக்கொண்டார். சகோதரத்துவம் அன்பின் அடிப்படையில் பிறந்தது. ஆகவே சுந்தரர் சாதி, நிற வேற்றுமைகட்கு அப்பாற்பட்டு ஒற்றுமை காண முனைந்ததற்கு அவரது அன் புள்ளமும், ஜீவகாருண்ய உள்ளமுமே கார ணம்.

''பகைவனுக்கும் அன்புசெய்'' என்கிறது காந்தீயம். ஆனுல் இதே வாசகத்திற்கு அன்று எடுத்துக்காட்டாய் விளங்கியவர் மாணிக்க வாசகர்.

''பௌத்த மதத்தவர் எதிரிகள்'' என்று சைவர்கள் கொண்டகாலம் அது. அப்போது இலங்கையில் உள்ள பௌத்தர்கள் சைவ சமயத்தினரோடு வாதிட்டு வெல்ல இந்தியா வந்தனர். இந்தியாவில் மாணிக்கவாசக ரோடு வாதிட்டனர். அப்போது மாணிக்க வாசகர் இலங்கையர் கோனின் ஊமை மகளை

பேசும் தரத்திற்குக் கொணர்ந்து அவளைக் கொண்டு பௌத்தர்கள் கேள்விக்கு விடைய ளிக்கச் செய்தார். மாணிக்கவாசகரின், அருள்திறத்தையும், அன்புத்திறத்தையும் கண்டான் இலங்கையர்கோன். அவனும் சைவசமயிஆனுன். ஆமாம் மாணிக்கவாச கரின் அன்புள்ளமும், ஜீவகாருண்ய உள்ள முமே ஊமையைப் பேசவைத்து அறியாமை பற்றி நிற்போருக்கு மெய்ம்மை புகட்டி நின்றது.

சாதி, மத, நிற, வேற்றுமைகட்கு அப்பாற் பட்ட வழி நால்வர் கண்ட வழி. அனைவரும் சமம் என்பதைக்காட்ட எழுந்த வழியே நால்வர்கண்ட வழி; அதுவே தெய்வீக வழி; அன்புவழி.

ஆ. சிவராம்
9-ம் வகுப்பு

★ ★ ★

# சம்பந்தன் அளித்த சிவநெறி

தோடுடைய செவியன் என்னும் திருப் பாடலை உச்சரித்து தமக்கு ஞானப்பால் ஊட்டிய அம்மை அப்பரைச் சுட்டிக்காட்டிய ஞானக்குழந்தை இறைவனை நாடித் திருத் தலங்கள் தோறும் சென்று வணங்குகின்ருர்.

அந்நாளில் பாண்டி நாட்டிலே கூன் பாண்டியனது ஆட்சி நடைபெறுகிறது. சமணசமயம் பாண்டி நாடு முழுவதும் சாக் கடை நிறைந்த பெரு வெள்ளமாகப் பரவு கின்றது. இது கண்ட பாண்டியன் மனைவி மங்கயற்கரசியார் மனம் பொறுத்திலள். உடனே தங்கள் மந்திரியாராகிய சிவபெருந் தகை குலச்சிறையாரை அழைத்தார். மன் னனும் மக்களும் சமணத்தில் வீழ்ந்து மயங்கு கின்றனர் எனக்கூறி மனம் பதைத்தாள்' ''தாயே பயப்பட வேண்டாம். சீர்காழி தந்த சிவஞானக் குழந்தை திருமறைக்காட் டில் நிற்கின்ருர். அன்னுரை இங்கு அழைப் போம். பாண்டி நாட்டில் ஆலவாய்க் கடவு ளின் திருவருள் இன்னதென விளக்குவிப் போம். சமணத்தில் மயங்குவோர் அனைவர்க் கும் சிவஞானம் இன்னது, சிவநெறி இன்னது எனத் தெளிவிப்பான் அந்த ஞானக்குழந்தை ஞான சம்பந்தன், என்று தேற்றினுர் குலச் சிறையார். அழைப்பு விரைவில் சென்றது. நாவுக்கரசரின் ஆசியுடன் வேயுறு தோழி பங்கனின் திருவருள் பொலிவுடன் திருவால வாய் வீதி வந்து சேர்ந்தார் ஞானக் குழந்தை ஞானசம்பந்தர். வளவர்கோன் பாவை மங்க யற்கரசியாரும் குலச்சிறையாரும் ஞானக் குழந்தையை வரவேற்றனர். எல்லோரும் அங்கயற் கண்ணி பாகனை வணங்கித் திரும டம் சென்றனர்.

பிள்ளையார் வருகையை அறிந்த சமணர் கள் மனம் கலங்கினர். செய்வது இன்ன தென்று தெரியாது திகைத்தனர். மன்னனி டம் சென்றனர். திருமடத்தையும் ஞானக் குழந்தையையும் இரவோடு இரவாக தீக் கிரையாக்குவோம் எனத் தீர்மானித்தனர். மதிகெட்ட மன்னனும் இசைந்தனன். அன் றிரவு தீ வைக்கப்பட்டது. சிவனடியார் களும், ஞானசம்பந்தரும் இத் தீயசெயலைக் கண்டு மனம்பதைத்தனர். ஞானசம்பந்தர் ஆலவாய்க் கடவுளை நோக்கி இத்தீ பையவே சென்று பாண்டியற்காகவே என்று இரைந் தார். உடனே அவ்வெம்மை பாண்டியனி டம் சென்று வெப்புநோயாக வாட்டியது. பாண்டியன் பதைத்தனன், துடித்தனன். நோய் தீர்ப்பதற்குச் சமணர்கள் அழைக்கப் பட்டனர். சமணரின் மயிற்பீலி சிகிச் சையோ மந்திரங்களோ, வெப்பு நோயை தீர்த்தில. பாண்டியன் சமணரை வெகுண் டனன். மாளிகையில் நின்றும் அகன்றனர். மங்கயற்கரசியார் அழைப்பிற்கிணங்கிய

ஞானசம்பந்தர், பாண்டியன் அரண்மனை வந்து பாண்டியன் மேனியில் திருவைந்து எழுத்தை ஓதிய திருநீற்றை ''மந்திரமாவது நீறு'' என்று இட்டனர். வெப்பு நோய் அகன்றது. மன்னனும் குழந்தையை வணங்கி அடியேன் உய்தனன் என்றனன்.

இது கண்டு திகைத்த சமணர்கள் தாமும் தம் சமணமும் இத்துடன் அழியப்போகின்றதே என்று வெகுண்டு குழந்தையை அனல் வாதம், புனல் வாதம், என்பவற்றிற்கு அழைத்தனர். சம்பந்தன் திருவருளிய ''போக மாந்தா'' என்னும் திருப்பதிகத் திருவேடு எரியும் நெருப்பில் பச்சையாக விளங்கியது. சமணரது ஏடு சாம்பலாயது.

அடுத்த நிகழ்ச்சியாக புனல் வாதம் ஆரம்பமாகியது. இதில் தான் ஞானசம்பந்தன் உலகினிற்கு சைவநெறி இன்னது என்பதை எடுத்துக்காட்ட ''வாழ்க அந்தணர்'' என்ற திருப்பாசுரத்தை எழுதி வைகையில் இட்டனர். திருஏடு எதிரேறியது. சமணரும் ஏதோ எழுதி இட்டனர். அது வைகை வெள்ளத்துடன் உருண்டு கடல் சேர்ந்தது. பாண்டியனும் பாண்டிநாடும் சைவம் ஆகினர்.

இக்கட்டுரையில் இதுவரை ஞானசம்பந்தர் சிவநெறி புகுத்த மேற்கொண்ட திருவருள் திறனை விளக்கினேம். இனி சிவநெறி என்ருல் என்ன என்பதை எவ்வாறு ஞானசம்பந்தர் கூறுகின்ருர் என்பதைச் சிறுக ஆராய்வோம்.

முதலில் நல்ல தண்ணளியுடைய அறவோராய்விளங்கும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் வாழ்க என்ற கருத்துடன் வாழ்க அந்தணர் என்கின்ருர். இத்தகைய அறவாழ்வு வாழ்ந்து சிவப்பேற்றைஅடைந்த தேவர்கள் வாழ்க என்கின்ருர். இத்துடன் அவர் நிற்கவில்லை. உலகிலுள்ள ஜிவான்மா அனைத்திலும் பரமன் பரந்திருத்தலைக் காண்கின்ருர். இதை ''வாழ்க ஆன் இனம்'' என்று குறிப்பிடுகின்ருர். நீர் இன்றிஅமையாது உலகு எனக்கண்ட ஞானசம்பந்தர் ''வீழ்க தண்புனல்'' என்று விளம்புகின்ருர். மன்னன் உடைத்தே மலர்தலை உலகம் எனக்கண்ட ஞானக்குழந்தை ''வேந்தனும் ஓங்குக'' எனக்கூறி உலகில் நல்லாட்சி வேண்டும் என ஆசீர்வதிக்கிருர். சிவநெறித் தெளிவு இத்துடன் நிற்கவில்லை உலகில் தீய அம்சங்கள் எந்தக் காலத்திலோ எந்த இடத்திலோ எத்துணையேனும் நிலவக்கூடாது என்பதை விளக்க ''ஆழ்க தீயது எல்லாம்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி, இறைவன் திருநாமம் எங்கும் பரவுக, என்று ஆசீர்வதிக்கிருர். உலகில் ஜீவான்மா அனைத்தும் துயரொளிந்து வையத்தில் வளமான வாழ்க்கை வாழவேண்டும் என்று இறைவனை வணங்குகின்ருர்.

(ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே சூழ்க
வையக முந்துயர் தீர்க்கவே)

வாழ்க அந்தணர் என்னும் திருவாக்கால் சிவநெறி விளக்க வந்த ஞானசம்பந்தரது கருத்து அனைத்தையும் இக்கட்டுரையில் நாம் விளக்குதல் முடியாது. ஆதலின் ஞானசம்பந்தனின் வாழ்க அந்தணர் என்னும் திருப்பாடலை முழுதும் எழுதி இக்கட்டுரையை முடிப்போம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

செல்வி. தயாளரஞ்சனி தம்பித்துரை.
8-ம் வகுப்பு

# வள்ளுவன் வகுத்த வழி

உலகில் பல குடிமக்கள் வாழுகின்றனர்; இக் குடிமக்களுள் முன்தோன்றிய மூத்த குடியினர் தமிழ் மக்கள் என்றால் அது மிகையாகாது. அதே போன்று உலகில் தோன்றிய மொழி களுள் முந்தித் தோன்றியதும், முதன்மை பெற்றதும் தமிழ் மொழியே. தற்போது பண்பாடும், நாகரீகமும் வெகுவிரைவாக முன்னேறிக் கொண்டுபோகின்றது; கடவுட் கொள்கையும், வழிபாடும், தோன்றி வளர்ந் ததும், புத்துயிர் பெற்றதும் நம் நாட்டிலே என்றால் அது சாலப்பொருத்தமே. கடவு ளின் அன்பை நேரில் கண்டவர்கள் நம் நாயன் மார். இந்த உண்மை நமக்கு பல அறிஞர் கள், ஞானிகள் பல வழிவகைகளை வகுத்துத் தந்துள்ளார்கள். அவர்களுள் வள்ளுவர் நமக் களித்த திருக்குறள் என்ற செம்மையான நூல் எமக்கு சிறந்த வழிவகைகளைத் தந்துள் ளது.

பல செம்மை சான்ற நூல்கள் உலகில் திகழ்கின்றன. அந் நூல்களில் எல்லாம் முதன்மையானதும் உலகிற்கு நெறி காட்டி புத்துயிர் ஊட்டிய சிறந்த நூல்களுள் திருக் குறள் ஓர் பெருநூலாகப் போற்றப்படுகின் றது. ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்று மயங்கும் மேல் நாட்டாரில் பலரை தம்பால் இழுத்து தமிழ் வளர்த்து வாழ வைத்த பெருமை கொண்ட நூல் என் றால் அஃது திருக்குறள்தான். இந் நூலை நமக் களித்த பெருந்தகை வள்ளுவரேயாகும். இத னால் பாரதியார்

> ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என வள்ளுவரைப் பெருமைபடுத்துகிறார்.

உலகம் வாழவேண்டிய முறைப்படி வாழ் வாங்கு வாழ இப் பெருந்தகை காட்டிய நெறி மக்கள் சிந்தனைக்கு எட்டியது. ''கல்வி கரையில கற்பவர் நாட்சில'' என்ற முது மொழிக்கிணங்க புற்றீசல் போல் இந் நாளில் நூல்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இக் கட்டத்தில் மக்கள் எதைப்படிப்பது எப்படிப் படிப்பது என்று திக்குமுக்காடுகின்றனர். இதற்கு வள்ளுவர் அப்போதே ஓர் இலகு வான வழியைத் தம் பெருநூலாம் திருக்குற ளில் கூறியுள்ளார். ''கற்க கசடறக் கற்க'' என்று கூறுவதன் மூலம் படிக்க வேண்டிய தைப் படியுங்கள் என்று கூறிய வள்ளுவர் அத்துடன் நிற்கவில்லை. கற்ற கல்வி மக்க ளுக்கு பயன் தந்து இருக்கின்றதா? என்ப தற்கு ஓர் சிறந்த நெறி காட்டுகின்றார். எவர் கற்றபடி ஒழுகுகின்றாரோ அவர்கட்கே கற்ற கல்வி பயன் தந்திருக்கின்றது என்பதை ''நிற்க அதற்குத் தக'' என்று தெரிவிக்கின் றார். இப்படி தகுந்த நெறியை மேற்கொண்டு கற்ற கல்விக்கு ஒரு பயன் இருக்க வேண்டா மா? கற்றதன் பயனையும், கற்றவன் தன்மை யையும் மிக இலகுவாக வர்ணிக்கின்றார். தற் கால உலகில் கல்வி பயின்று பட்டம் பெற்று விட்டோம் என்றும் தகுந்த பதவி கிடைக்கப் பெற்றுவிட்டோம் என்றும் நம்மவரில் சிலர் வீறுப்புடன் திகழ்கின்றனர் என்பது கண்கூடு. இக் கொள்கையை கடைபிடிக்கும் மூடர் கட்கு உண்மையான கல்வியின் பயன் பட்ட மும் பதவியுமன்று, ஆதியும் அந்தமும் இல் லாத ஒப்பற்ற இறைவனின் நினைவும் அவனைப் போற்றும் பண்பு வளர்ச்சியுமேயன்றி வேறு இல்லை என்று திட்டவட்டமாக சாற்றுகிறார்.

> ''கற்றதனாலாய பயனென் கொல்-வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்''

என்னும் குறள் மூடத்தன்மை பொருந்திய அறிவிலார்க்கு சிவநெறியும், அருள்நெறியும் காட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கற்க வேண்டுவனவற்றை நமக்கு கசடறக் கற்பிப்பவர் தந்தை. இப்பேர்ப்பட்ட தந் தைக்கு மகன் ஏதாவது ஓர் சிறந்த கைமாறு செய்ய வேண்டாமா? ''உப்பிட்டவரை உள் ளளவும் நினை'' என்பதும் ஓர் சிறந்த எடுத் துக்காட்டாகும். ஆகவே இப்பூவுலகில்

தகுந்த வாழ்க்கையைத் தந்த தந்தைக்கு மகன் செய்யும் உதவியை வள்ளுவர் வெள்ளி டைமலே போல் மக்கள் அறிய விளக்குகிறார்.

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி - இவன்
தந்தை என் னோற்றான் கொல் எனும் சொல்''

என்ற இரு இனிமையான அடிகளினால் புலப் படுத்துகின்றார். தந்தைக்கு நன்றிக் கடன் இது எனக் காட்டிய வள்ளுவர் தாயை மறக்க வில்லை. தாய்க்கு நன்றிக் கடன் யாது என்று சிந்திக்குங்கால் தெளிவுபடுத்துகிறது வள்ளு வன் குறள்.

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் - தன் மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்''

என்ற இரு அரிய அடிகளினால் தாய்க் குலத் தை மகிழ்விக்கிறார்.

இப்பேர்ப்பட்ட பயன் தரும் கல்வியையும் அதனால் கிடைத்த பெருமதிப்பும் இருந்தால் வாழ்க்கை சிறப்பெய்தாது இதனால்,

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து
அறன் ஆகுல நீரபிற

என்ற சிறந்த அடிகளினால் எழுத்திற் கெல்லாம் சிறந்த நெறி காட்டும் நூல் திருக்குறள். இதை உலகிற்குத் தந்த பெருந் தகையை நாம் என்றென்றும் போற்றா மல் இருக்க முடியாது. பண்டிதர்க்கும், பாமரர்க்கும் விளங்கக்கூடிய முறையில் பல அறநெறிகளை நாம் மனமாரப் போற்றுவ தோடு நிற்பதா? அவருக்கு ஓர் சிறந்த கைம்மாறு செய்ய வேண்டாமா? அவர் காட் டிய நெறியை நாம் கைக்கொண்டு ஒழுகுவதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

வள்ளுவர் காட்டிய வழியை அனைவருக்கும் தெரிந்த இவ்விரு சிறந்த குறளின் மூலம் உல கிற்கு எடுத்துக்காட்ட முயன்றேன்.

**ந. சிவராசா**
7ம் வகுப்பு.

# ஆளுடை பிள்ளை

காடுடைய சுடலைப் பொடி பூசியதோடு டைய செவியினையுடைய முதல்வனாகிய முக் கண்ணன் புகழ்பாட ஒரு பிள்ளை திருத்தோணி புரம் என்னும் திருக்கோவிலில் உள்ள திருக் குளக்கரையில் இருந்து அழுதது. அழுத காட்சியே அனைத்துயிரையும் கொள்ளை கொள்ளும் அழகோவியமாக அமைந்து நின் றது.

''கண் மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களாற்
பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம்
புடை துடிப்ப
எண்ணில்மறை ஒலி பெருக எவ்வுயிருங்
குதுகலிப்பப்
புண்ணியக் கன்றனையவர் தாம் பொருமி
அழுதருளினான்''

என அழுத பிள்ளையின் காட்சியை மிகவும் அழகாக சேக்கிழார் கூறியுள்ளார். இவ்வாறு அழுதபோது உடம்பெங்கும் கண்ணீர்த் துளி கள் வீழ்த்தின. கண்கள் சுழன்று பண்டைய உணர்ச்சி காரணமாக திருத்தோணிபுரக் கோயிலின் கோபுரத்தை நோக்கின. திரு வாய் திருவருளால் '' அம்மே அப்பா '' என அழைத்த வண்ணமாக அழுதது. அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது ஆன்றோர் வாக்கு, அருமையான வாக்கு, அனுபவ ரீதி யான வாக்கு. அழுவதனால் பல அரிய விட யங்களை அடையலாம். இந்த வாக்கின்படி

கட்டாயமாக அழுத பிள்ளை பால் குடிக்க வேண்டும் என்ற நியதியால் தானே யாம் அறியோம், பிள்ளை அழுதவுடன் இறைவ னும் இமயவல்லியை நோக்கி, ''உன்னுடைய முலைப்பாலைப் பொன் வள்ளத்திலே கறந்து இவனுக்கு ஊட்டு'' எனத் திருவாய் மலர்ந்த ருளினர். அழுத பிள்ளையும் பால் குடித்தது; அழுகையை மறந்தது; ஆனல் பால் தந்த வரை மறக்க வில்லை. திருவாயில் பால் வடிந்த கோலத்துடன் குளக்கரையில் பிள்ளை இருந் தது. நீராடிக் கரை வந்த பிள்ளையின் தந்தை யார், ''நீ யார் தந்த பாலை உண் டாய்?'' எனக் கோபித்து, ''எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவர் யார்?'' என வினுவ மூன்று வயதினையுடைய பிள்ளை ஆனந்தக் கண்ணீர் பெருகஒரு காலைச் சிறிது தூக்கி தமது சிறு கையினைத் தலைக்கு மேலாக சுட்டுவிரலால் வானத் தில் விடையின்மேல் உமாதேவியாரோடு விளங்கிய பெருமானை சுட்டிக்காட்டிய தோடு அணிந்த செவியன் விடை ஏறி வந்திருந் தான், தலையில் தூய வெண்மதி, அதை ஆபர ணமாக முடியிலே சூடி இருக்கின்முன், உட லெல்லாம் திருநீறு பூசி இருக்கின்முன் என தம் உள்ளம் கவர்ந்த கள்வனுகிய இறைவனை மறவாது இருந்த பிள்ளை சிவபெருமானு டைய திருச்செவியில் ஏறும் பொருட்டு முத லிலே அத்திருச்செவியை சிறப்பித்து,

''தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்
கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனைநாட் பணிந்து ஏத்த
அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவ
னன்றே''

என பேச அறியாத பிள்ளை தித்திக்கும் தீஞ் சுவைப் பாடல் பாடியது.

பால் அருந்திப் பாடல் பாடி அருள் பெற்ற குழந்தை அவனியில் தவழும் ஏனைய குழந் தைகள் போலல்லாது யாவருக்கும் தாய் தந்தையாராகிய அம்மை அப்பர் ஊட்டிய ஞானப்பாலைக் குடித்ததால் சிவஞானசம்பந் தராயது, ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியால் ஆளப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையாயிற்று.

செல்வன். **இ. இராஜேந்திரன்**
6-ம் வகுப்பு.

★ ★ ★

# மார்க்கண்டேயர்

**வ**ட இந்தியாவிலே கடகம் என்னும் ஊரிலே மிருகண்டு என்னும் பெயருடைய பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் கற் பிற்கு அணிகலமான மருத்துவதி என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அவர்கள் நெறி தவருது பலவகை நோன் புகள் காத்தும் இல்லறம் நடாத்தி வந் தனர். அவர்களுக்கு நெடுங்காலமாகியும் புத்திரப் பேறு கிடைக்காததினுல் மனம் மிக வருந்தினர். பிள்ளைப்பேற்றின் பொருட்டுக் கடுந்தவம் ஆற்ற புண்ணிய தலமான காசியை அடைந்தனர். அங்கு அவர், கோயில் கொண்ட சிவபிரானை அனலில் இட்ட மெழுகு போல மனம் கசிந்துருகி கடுந்தவம் புரிந்தார்.

முனிவரது தவத்தினுல் மகிழ்ந்த சிவ பெருமான் அவர் முன் தோன்றி, நீ வேண்

டும் வரம் யாது? எனக் கேட்டார். அப்போது அவர் ''சுவாமி! அடியேனுக்கு ஒரு புத்திரன் தந்தருளல் வேண்டும்'' என்று இரந்து கேட்டார். அப்பொழுது சிவபெருமான், ''முனிவரே! பூரண ஆயுளும் துர்க்குணமும் உள்ள புத்திரன் வேண்டுமா? அல்லது நற்குணமும் நம்மிடத்திலே அன்பும், பதினுறு வயதுடைய புத்திரன் வேண்டுமா?'' என கேட்டார். சிவபெருமான் திருவருளினுலே அழகு மிகுந்த ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ''மார்க்கண்டேயர்'' என பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

மார்க்கண்டேயரும் வேதம் முதலிய கலைகளைப் பயின்று நல்லொழுக்கமுடையவராய் வளர்ந்து பதினுறு ஆண்டுப் பிராயத்தை அடைந்தார். மார்க்கண்டேயர் பிறந்த நாட்தொடக்கம் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்த பெற்ருேர்கள் அவரின் ஆயுள் முடியப்போகிறதென்று கவலையடைந்தனர். மார்க்கண்டேயர் பெற்ருேர்களை வணங்கி, ''நீங்கள் எதற்கும் கவலையுருதீர்கள். சிவபெருமான் சர்வ வல்லமையுடையவர். அவர் திருவருளாலே என் மரணத்தை வென்று வருவேன்'' என்று கூறினர். பின்பு அவர் மணிக்கன்னிகை என்னும் திருக்கோயிலை அடைந்து சிவலிங்கப் பெருமானை மெய்யன்பினுல் பூசித்து சிவபூசை ஆற்றி கடுந்தவம் ஆற்றினர். இச் சிவபூசையை சிவன் ஏற்று இலிங்கத்தில் நின்று மார்க்கண்டேயர் முன்பு தோன்றி, ''நீ யமனுக்கு அஞ்சவேண்டாம்'' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினர். அவரின் உயிரைக் கவர வேண்டிய நேரம் வந்ததும் யமதூதர்கள் வந்தனர். மார்க்கண்டேயர் கடுந்தவம் புரிந்தமையால் அவரிடம் பாசக்கயிறு நெருங்கவில்லை. இயமன் மார்க்கண்டேயர் முன் தோன்றி, ''மார்க்கண்டேயரே! உமது ஆயுள் முடிந்தது. நீர் என்னுடைய உலகுக்கு வரவேண்டும்'' என்ருன். அப்பொழுது மார்க்கண்டேயர் இயமனைப் பார்த்து, சிவனடியார்கள் இறந்தால் சிவலோகத்துக்குச் செல்வார்களேயன்றி உன்னுடைய உலகத்துக்கு வரமாட்டார்கள். நான் சிவனடியான் ஆதலால் யமலோகத்துக்கு வரமாட்டேன்'' என்று கூறி சிவபிரானைத் துதித்த வண்ணம் இருந்தார். இயமன் பெருங் கோபத்துடன் தன் கையிலிருந்த பாசக் கயிற்றை அவர்மீது வீச மார்க்கண்டேயர் தன்னை மறந்து சிவலிங்கத்தை இறுகத் தழுவியபடியே ''அடைக்கலம்'' என்று அலறினர். ''கடவுளை நம்பினேர் கைவிடப்படார்!'' சிவபிரான் தமது அடியவனை மார்க்கண்டேயருக்காக இலிங்கத்திலே தோன்றி இயமனைக் காலினுல் உதைத்தார். இயமன் அறிவிழந்து நிலத்தில் வீழ்ந்தான். சிவபெருமான் மார்க்கண்டேயரை நோக்கி, ''உனது தவ வலிமையினுலே உனது உடம்பு சாவா நிலையை அடைந்தது. அதனுல் நீ என்றும் பதினுறு வயதுடையவனுக வாழ்வாயாக'' என திருவாய் மலர்ந்தருளினுர். மார்க்கண்டேயர் இறைவனது பெருங் கருணையை வியந்து வணங்கி பெற்ருேரிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவர்களை மகிழ்வித்தார். பின் பல சிவதலங்களை வணங்கிச் சிவபேறு பெற்ருர்.

''மார்க்கண்டற்காக மறலிபட்ட பாட்டை உன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண்
பராபரமே''

— தாயுமானவர்

செல்வன் ந. சிவபாலன்
5-ம் வகுப்பு

# கண்ணப்ப நாயனர்

இவர் பொத்தப்பி நாட்டிலே உருப்பூர் என்ற ஊரிலே முருகப் பெருமானின் அருளினல் அவதரித்தார். இவரது தந்தை நாகன் வேடுவகுலத் தலைவன். இவர் வேடுவ தலைவரின் மகனல்லவா? தந்தையின் தொழிலையே தனயனும் மேற்கொண்டார். கண்ணப்பருக்கு திருக்காளத்தி மலையிலுள்ள காளத்தியப்பரை தரிசிக்கும் பெறுபேறு கிடைக்கப்பெற்றது.

இதன் பின் இவருக்கு இறைவன் பால் ஒப்பற்ற பாசம் குடிகொண்டது. இறைவனைப் பிரியமனமின்றி தவித்தார். தினமும் வேட்டையாடி காளத்தியப்பருக்கு இறைச்சி படைத்து பூசை செய்தலை மேற்கொண்டார். அத்துடன் மட்டுமன்றி கண்விழித்து காவலும் காத்துவந்தார்.

சிவகேசரியார் என்னும் அந்தணரும் காளத்தியப்பருக்கு இடைவிடாது பூசை செய்யும் பழக்கத்தைக் கொண்டவர் இவருக்கு கண்ணப்பரின் பக்தி பரவசத்தை காட்டுவதற்கு இறைவன் திருவுள்ளம் கொண்டார்.

ஒரு நாள் சிவலிங்கத்தின் பின் சிவகேசரியார் மறைந்து இருந்தார். வழமைபோல் கண்ணப்பர் இறைவனுக்கு அமுதூட்ட வந்தார். அப்போது இறைவனின் கண்ணிலிருந்து இரத்தம் ஆருகப் பெருகுவதைக் கண்டு நெஞ்சு பொறுக்காத கண்ணப்பர் இறைவன் மேல் கொண்ட தளரா அன்பால் தன் ஒரு கண்ணைத் தோண்டி இறைவனின் இரத்தம் பெருகும் கண்ணில் அப்பினர். பின் இறைவனின் மறு கண்ணிலும் இரத்தம் வடிந்தது. உடனே கண்ணப்பர் தன் மற்றக் கண்ணையும் தோண்டி இறைவனுக்கு அளிக்க முற்படுகையில் கருணைக் கடலான இறைவன் ''நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப என்று திருவாய் மலர்ந்து கண்ணப்பரைத் தடுத்தாற் கொண்டார். தன் கண்ணைத் தோண்டி இறைவனுக்கு அளித்த ஒப்புயர் வற்ற பெருமை கண்ணப்பரையே சாரும்.

இக்கதையினின்றும் எவர் இறைவன்மீது அளவற்ற அன்பு செலுத்துகின்ருரோ அவர்கட்கு இறைவன் திருவருள் உண்டு என்பதற்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

செல்வன். க. இலங்கேஸ்வரன்
4-ம் வகுப்பு.

★ ★ ★

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

## நால்வர் சமயப் பாடசாலை

## மாணவ இல்லங்கள்



# சம்பந்தர் இல்லம்

இல்லச் சின்னம் : "பொற்றாளம்"

இல்ல ஆசிரியர்கள் : திரு. தி. நவநீதன்
திரு. பெ. பூமிநாதன்

இல்லத் தலைவன் : செல்வன். ந. ஜெயராஜா

இல்லத் தலைவி : செல்வி. இ. குமாரிசந்திரா



# அப்பர் இல்லம்

இல்லச் சின்னம் : "உழவாரம்"

இல்ல ஆசிரியர்கள் : திரு. ச. கனகசபாபதி
திரு. தி. செல்லத்துரை

இல்லத் தலைவன் : செல்வன். ஆ. சிவராம்

இல்லத் தலைவி : செல்வி த. தயாளரஞ்சனி



# சுந்தரர் இல்லம்

இல்லச் சின்னம் : "செங்கோல்"

இல்ல ஆசிரியர்கள் : திரு. ச. மு. விவேகானந்தன்
திரு. சி. இராமலிங்கம்

இல்லத் தலைவன் : செல்வன். மு. கந்தவனம்

இல்லத் தலைவி : செல்வி. க. இராஜேஸ்வரி



# மாணிக்கவாசகர் இல்லம்

இல்லச் சின்னம் : "ஏடு"

இல்ல ஆசிரியர்கள் : திரு. ச. ஆனந்ததியாகர்
திரு. சி. விமலநாதன்

இல்லத் தலைவன் : செல்வன். ச. பாலகுமார்

இல்லத் தலைவி : செல்வி. இ. விலாசினி

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நால்வர் சமயப் பாடசாலை

எமது சங்க இலட்சியங்களில் முதலாவதாக கருதப்படும் "நால்வர் சமயப் பாடசாலை", கடந்த பதினறு ஆண்டுகளாக சிறப்புற நடைபெற்று வருகின்றது. இப் பாடசாலை எமது சங்கத்தின் ஆதரவில் போயா தினங்கள் தோறும் காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இப் பாடசாலையில் பாலர் கீழ்ப் பிரிவு தொடக்கம் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை வகுப்பு வரை இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் சமயக் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்கள் யாபேரும் வருடந்தோறும் கொழும்பு, விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்டு வரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள் அத்துடன் சிரேஸ்ட வகுப்பில் சித்தியடைவதற்குரிய முக்கியமான பாடங்களில் ஒன்றாகிய சமய பாடத்தில் ஆரம்ப காலத்திலிருந்து பயிற்சி பெறுவதுடன் ஒழுக்க சீலர்களாகவும், உயரிய பண்புள்ளவர்களாகவும் திகழ வழி வகுத்துள்ளோம்.

## ஆசிரியர் குழு


| | |
|---|---|
| திரு. ச. அரியரத்தினம், | திரு. வ. சி. செல்லையா |
| ,, வ. செல்வரத்தினம், | ,, க. பாலசுப்பிரமணியம் |
| ,, வி. அம்பலவாணபிள்ளை, | ,, வே. பெரியசாமி |
| ,, வ. இ. இராமநாதன், | ,, சு. லிங்கேஸ்வரன் |
| ,, சி. விமலநாதன், | ,, தி. நவநீதன் |
| ,, ச. ஆனந்ததியாகர் | ,, தி. செல்வத்துரை |
| ,, ச. கனகசபாபதி | ,, பெ. பூமிநாதன் |
| ,, ச. மு. விவேகானந்தன் | ,, சி. இராமலிங்கம் |

மேற் கூறப்பட்ட அன்பர்கள் யாபேரும் தங்கள் காலத்தையும், சிரமத்தையும், பொருட்படுத்தாமல் எவ்வித வேதனமும் இன்றி ஆசிரியப்பணி புரிந்து வருகின்றார்கள். இவர்கள் யாபேருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். அத்துடன் இப்பாடசாலை செலவு களுக்கெல்லாம் உபயம் அளித்து வரும் சைவப் பெருமக்கள் யாபேருக்கும் எமது நன்றிகள். அத்துடன் எமக்கு வருடந்தோறும் நிதி உதவி அளித்து வரும் இந்து சமய ஆலோசனை சபையினருக்கும் குறிப்பாக மேற்படி சபையின் கௌரவ செயலாளர் திரு. நவரத்தினம் அவர்கட்கும், இலங்கை அரசாங்கத்தினருக்கும், வாரந்தோறும் தவறாமல் பிள்ளைகளை பாட சாலைக்கு அனுப்பிவைக்கும் பெற்றோர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

வருங்காலத்தில் இப்பாடசாலை மிகவும் சிறப்புடன் வளர சைவப் பெருமக்கள் யாபே ருடைய ஒத்துழைப்பையும் நல்லாசிகளையும் பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

ச. அரியரத்தினம்,
(கௌரவ தலைமை ஆசிரியர்)

வ. செல்வரத்தினம்
(கௌரவ பாடசாலைச் செயலாளர்)



காந்தி நூற்றுண்டு விழாவை யிட்டு ஈழத்துக்கு வருகை தந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்-எமது சங்க அழைப்பை ஏற்று-கொம்பனித்தெரு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் ''பெரிய புராணத்தில் சர்வோதயம்'' என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பெருக்காற்றுகின்றுர்.




எமது சங்கத்தின் ஆதரவில் கொண்டாடப்பட்ட மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை நிகழ்ச்சியில்-கொழும்பு மாவட்ட வித்தியாதிபதி திரு. தி. மாணிக்க வாசகர் அவர்கள் தலைமை தாங்கி சொற்பெருக்காற்றுகின்றுர்.



எமது சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற நாவலர் தினப் பேச்சுப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாவது இடம் பெற்ற கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. லோகா சிவசிங்கம் அவர் கட்கு திருமதி. பாலம் லஷ்மணன் அவர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கின்றுர்கள்.



எமது சங்க நால்வர் சமய பாடசாலே மாணவ மன்றத்தினுல் நடாத்தப்பட்ட கலேமகள் விழாவில் ''பாரதி கண்ட தேவியர் மூவர்'' எனும் உரைச்சித்திரத்தில் ஒரு காட்சி.

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "நால்வர் நூலகம்"

எமது சங்கத்தின் ஆதரவில் இயங்கிவரும் இந் நூலகம் கடந்த மூன்று ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றி வருகின்றது. கொம்பனித்தெருவிலே வாழுகின்ற தமிழ் மக்களாகிய எங்களுக்கென தனித்தொரு பொது நூலகம் இல்லாத குறையை எமது நூலகம் ஒரு சிறிதாவது நிவிர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது. நோன்மதி தினங்கள் தோறும் கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில், சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் நால்வர் சமய பாடசாலை மாணவ - மாணவிகள் இந் நூலகத்தால் பெரிதும் பயன் பெறக் கூடியதாக இருக்கிறது. இந் நூலகத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட சமய இலக்கிய நூல்கள் இருக்கின்றன. பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடியதாக இந் நூலகத்தை பயன்படுத்த முடியாமைக்கு நாம் வருந்துகின்றோம்.

கொம்பனித்தெரு நகரில் பல நூற்றுக்கணக்கான சைவத் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பொழுதும் — எமக்கென எமது கலாச்சார — பண்புகளை சமய — இலக்கிய நூல்களை வாசித்து அறிந்து கொள்ளக் கூடிய ஒரு பொது நூலகம் இற்றைவரை இல்லாதது மிகவும் மனம் வருந்தத்தக்கதாகும்.

எதிர்வரும் ஆண்டுகளிலாவது இக் குறையை நிவிர்த்தி செய்ய கொம்பனித்தெரு வாழ் சைவத் தமிழ் மக்கள் அனைவரும் முன்வருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தி. நவநீதன்
(கௌரவ நூலக மேற்பார்வையாளர்)

ச. ஆனந்ததியாகர்
(கௌரவ நூலகப் பொறுப்பாளர்)

## வாழ்த்துகின்றோம்!!

எமது சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும் - தொண்டரணித் தளபதியுமான **கந்தையா பாலசுப்பிரமணியம்** அவர்களுக்கும், **அம்பிகைமலர் நல்லதம்பி** அவர்களுக்கும், 28-11-69ல் திருமணம் சிறப்பாக நடந்தேறியதையிட்டு மனம் மகிழ்கின்றோம்.

திரு. க. பாலசுப்பிரமணியம் தம்பதிகட்கு, சகல வளங்களையும் நல்கி அருள எல்லாம் வல்ல முருகப் பெருமானை பணிகின்றோம்.

அவர்களின் தொண்டு இன்றுபோல் என்றும் எமக்கு நின்றுதவ வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றோம் !!

செயற் குழுவினர் - தொண்டரணியினர் - அங்கத்தவர்கள் - ஆதரவாளர்கள்

**கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்**

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நால்வர் சமய பாடசாலை

## சைவ சமய பாடப் பரீட்சை பெறுபேறுகள்

## 1969

—+—

| | | | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வி. | இ. கௌரி |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | இ. முரளீதரன் |
| | மூன்றும் பரிசு : | செல்வன். | இ. சாந்தசிவம் |
| 2-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வி. | ம. ஜெயந்தி |
| | இரண்டாம் பரிசு : | செல்வி. | சி. புவனேஸ்வரி |
| | மூன்றும் பரிசு : | செல்வி. | க. இந்திராணி |
| 3-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வன். | க. பாலசுப்பிரமணியம் |
| | இரண்டாம் பரிசு : | செல்வி. | ந. பாலசிவனேஸ்வரி |
| | மூன்றும் பரிசு : | செல்வன். | சு. பாலேந்திரன் |
| 4-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வன். | க. இலங்கேஸ்வரன் |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | இ. இரட்ணராஜ் |
| | மூன்றும் பரிசு : | செல்வி. | ச. மல்லிகா |
| 5-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வி. | சோ. பாக்கியவதி |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | ந. சிவபாலன் |
| | மூன்றும் பரிசு : | செல்வி. | சா். கிருஷ்ணகுமாரி |
| 6-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வன். | இ. இராஜேந்திரன் |
| | இரண்டாம் பரிசு : | செல்வி. | மு. சுதர்மாதேவி |
| | மூன்றும் பரிசு : | செல்வன். | வே. வேலாயுதம் |
| 7-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வன். | ந. சிவராசா |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | செ. சண்முகநாதன் |
| | மூன்றும் பரிசு : | செல்வி. | சி. ஜோதீஸ்வரி |
| 8-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வி. | த. தயாளரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | ச. பாலகுமார் |
| | மூன்றும் பரிசு : | செல்வி. | க. இராஜேஸ்வரி |
| 9-ம் வகுப்பு : | முதலாம் பரிசு : | செல்வன். | ஆ. சிவராம் |
| | இரண்டாம் பரிசு : | செல்வன். | மு. கந்தவனம் |
| | மூன்றும் பரிசு : | செல்வன். | ந. ஜெயராசா |

# கொழும்பு விவேகானந்த சபை

## அகில இலங்கை சைவ சமயபாடப் போட்டி

### பரீட்சை பெறுபேறுகள் - 1968

**2-ம் வகுப்பு - பாலர் பிரிவு i**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| பாலசிவனேஸ்வரி நடராசா | சித்தி | முனியாண்டி சந்தனம் | சித்தி |
| சாந்தினி சுப்பிரமணியம் | சித்தி | இராமசாமி குபேந்திரன் | சித்தி |

**3-ம் வகுப்பு - பாலர் பிரிவு ii**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| சண்முகம் வசந்தகுமார் | * விசேட சித்தி | சுப்பிரமணியம் பாலேந்திரன் | சித்தி |
| | | இராஜலிங்கம் இரகுநாதன் | சித்தி |
| இராசரட்ணம் இரட்ணராஜ் | சித்தி | அருணாசலம் சிவேந்திரன் | சித்தி |
| செல்வராசா தெய்வேந்திரன் | சித்தி | | |

**4-ம் வகுப்பு - ஆரம்ப பிரிவு i**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| பாக்கியவதி சோமசுந்தரம் | சித்தி | சித்திரகலா சாமிக்கண்ணு | சித்தி |
| அற்புதரஞ்சனி தம்பித்துரை | சித்தி | சரோஜாதேவி இராசலிங்கம் | சித்தி |
| இலங்கேஸ்வரி சிதம்பரப்பிள்ளை | * விசேட சித்தி | ராம. சுப. சேதுராமன் செட்டியார் சிவசுப்பிரமணியம் | சித்தி |
| கிருஷ்ணகுமாரி சாம்பசிவம் | சித்தி | நடராசா சிவபாலன் | சித்தி |
| தூயமணி தங்கராசா | சித்தி | மரியதாஸ் சுந்தரராஜ் | சித்தி |

**5-ம் வகுப்பு - ஆரம்ப பிரிவு ii**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| பரமேஸ்வரி இராமசாமி | சித்தி | பெருமாள் கணேசராஜா | சித்தி |
| புஸ்பராணி நடராசா | சித்தி | இராஜரட்ணம் இராஜேந்திரம் | சித்தி |
| சண்முகம் நந்தகுமார் | சித்தி | வேலு வேலாயுதம் | சித்தி |
| தம்பித்துரை தயாளச்சந்திரன் | சித்தி | | |

**6-ம் வகுப்பு - கீழ்ப் பிரிவு i**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| இராஜேஸ்வரி ஸ்ரீரங்கம் | * விசேட சித்தி | குலதேவி குமரகுரு | சித்தி |
| | | முத்துலட்சுமி இராமசாமி | சித்தி |
| மஞ்சுளா மந்திரம் | * விசேட சித்தி | இராஜேந்திரராஜ் ஆனந்தராஜ் | சித்தி |
| | | நடராசா சிவராசா | * விசேட சித்தி |

**7-ம் வகுப்பு - கீழ்ப் பிரிவு ii**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| இராஜேஸ்வரி கந்தையா | சித்தி | கந்தையா பாலேந்திரன் | சித்தி |
| தயாளரஞ்சனி தம்பித்துரை | சித்தி | | |

**8-ம் வகுப்பு - மத்திய பிரிவு**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| சண்முகம் சாந்தகுமார் | * விசேட சித்தி | ஆறுமுகம் சிவராம் | * விசேட சித்தி |
| முத்தையா கந்தவனம் | சித்தி | நடராசா ஜெயராசா | சித்தி |
| சிவசாமி செல்வநாதன் | சித்தி | | |

**9-ம் வகுப்பு - மேற் பிரிவு i**

| பெயர் | பெறுபேறு | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|
| இந்திராணி கண்ணலிங்கம் | சித்தி | சதாசிவம் ஆனந்ததியாகர் | சித்தி |
| புவனேஸ்வரி கந்தையா | சித்தி | திருக்காமணி செல்லத்துரை | சித்தி |
| லோகேஸ்வரி இராஜேந்திரராஜ் | சித்தி | ரமணி இராஜகோபால் | சித்தி |
| பரமேஸ்வரி இராஜேந்திரராஜ் | சித்தி | | |

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நால்வர் தினப் பேச்சுப் போட்டி

## 1969

## பரிசு பெற்றவர்கள்

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு (தங்கப் பதக்கம்) | : | செல்வி. பத்மா சேஷன்<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |
| இரண்டாம் பரிசு | : | செல்வி. லோகாம்பாள் சுப்பிரமணியம்<br>கொ/சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-6. |
| மூன்றும் பரிசு | : | செல்வி. லொறேற்ரு உத்தரியநாதன்.<br>கொ/பரி. பிறிஜெட்ஸ் கொன்வென்ட், கொழும்பு-7. |

### மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு (தங்கப் பதக்கம்) | : | செல்வி. லோகா சிவசிங்கம்<br>கொ/சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-6. |
| இரண்டாம் பரிசு | : | செல்வன். சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |
| மூன்றும் பரிசு | : | செல்வி. சங்கரவடிவம்மா நயினர்<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |

### கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு (தங்கப் பதக்கம்) | : | செல்வன். கணநாதன் நாகேஸ்வரன்<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |
| இரண்டாம் பரிசு | : | செல்வன். கணநாதன் ராஜேஸ்வரன்<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |
| மூன்றும் பரிசு | : | செல்வன். ஆறுமுகம் கணேஷப்பெருமாள்<br>கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு-12. |

பரிசு பெற்ற மாணவ—மாணவிகள் யாபேருக்கும் எமது உள்ளங்கனிந்த பாராட்டுகள்.

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்
# நாவலர் தினப் பேச்சுப் போட்டி
## 1 9 6 9

### பரிசுகள் அன்பளித்த அன்பர்கள்

### தங்கப் பதக்க பரிசு அன்பளித்தவர்கள்

★

**மேற் பிரிவு — முதலாம் பரிசு**

பவானி ஜூவல்லர்ஸ்
*92, தேவாலய வீதி, கொம்பனித்தெரு.*

**மத்திய பிரிவு — முதலாம் பரிசு**

திரு. ராம. சுப. சேதுராமன் செட்டியார் அவர்கள்
*135, நீதிபதி அக்பர் மாவத்தை, கொம்பனித்தெரு.*

**கீழ்ப் பிரிவு — முதலாம் பரிசு**

இந்திராணி ஜூவலெரி
*151, தேவாலய வீதி, கொம்பனித்தெரு.*

### சிறப்புப் பரிசுகள் அன்பளித்தவர்கள்

★

**திரு. வை. பெரியசாமி அவர்கள்**
உரிமையாளர்
ஆனந்தா ஸ்ரோஸ்
*105, பேங்ஷால் வீதி, கொழும்பு-11.*

**திரு. த. இராசரத்தினம் அவர்கள்**
உரிமையாளர்
ஒப்பாதா அன் கோ.,
*13-15, சென். ஜோன்ஸ் ரோட், கொழும்பு-11.*

**திரு. நா. இரத்தினசபாபதி அவர்கள்**
அதிபர்
மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்,
கொழும்பு-11.

**திரு. P. K. கிருஷ்ணன் அவர்கள்**
*141, கியூ வீதி, கொழும்பு-2.*

**திரு. மு. வெற்றிவேல் அவர்கள்**
*9, ஸ்ருவட் வீதி, கொழும்பு-2.*

**க. நாகமுத்து அன். சன்ஸ்**
*111, 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.*

**திரு. K. P. இராஜரத்தினம் அவர்கள்**
*80, ஹை வீதி, கொழும்பு-6.*

**அமிற்றி பிரிண்டர்ஸ்**
*71, நீதிபதி அக்பர் மாவத்தை, கொழும்பு-2.*

**திரு. ச. சாம்பசிவம்**
*90/2, வெக்சோல் வீதி, கொழும்பு-2.*

*பரிசுகள் தந்துதவிய பெருமக்கள் யாபேருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள்.*

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

## "நால்வர் சமய பாடசாலை"

# மாணவர் மன்றம்

### நிர்வாக சபை உறுப்பினர் 1969

| | | |
|---|---|---|
| மன்றப் பொறுப்பாசிரியர் | : | திரு. ச. ஆனந்ததியாகர் |
| தலைவர் | : | செல்வன். சுப்பையா அரசரட்ணம் |
| உப தலைவர் | : | செல்வி. தயாளரஞ்சனி தம்பித்துரை |
| செயலாளர் | : | செல்வன். ஆறுமுகம் சிவராம் |
| பொருளாளர் | : | செல்வன். சிவசாமி செல்வநாதன் |
| துணைப் பொருளாளர் | : | செல்வி. குமாரிசந்திராஇராஜரட்னம் |
| இதழாசிரியர் | : | செல்வன். முத்தையா கந்தவனம் |
| துணை இதழாசிரியர் | : | செல்வி. இராஜேஸ்வரி கந்தையா |

### செயற் குழு

செல்வன். சதாசிவம் பாலகுமார்
செல்வன். இராஜரட்னம் இராஜேந்திரன்
செல்வன். கந்தையா சத்தியநாதன்
செல்வி. பத்மாசினி செல்வரத்தினம்
செல்வி. மாலதி சுப்பிரமணியம்

எமது நால்வர் சமய பாடசாலை மாணவர் மன்றம் இவ்வாண்டு, கடந்த காலங்களை விட அங்கத்தவர் ஒத்துழைப்பாலும், ஆசிரியர்களின் ஆதரவாலும் மிகவும் சிறந்த முறையில் பதின்மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளது. மன்றக் கூட்டத்தில் 'சைவ சித்தாந்த பொது அறிவுப் போட்டி' எனும் அரிய நிகழ்ச்சி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. போட்டியில் அதிக புள்ளி பெறுபவருக்கு பரிசும் வழங்கப்படுகின்றது. பரிசுக்கான உபயமளித்த எமது பாடசாலை ஆசிரியர்களுக்கு எமது உளங் கனிந்த நன்றி உரித்தாகுக. மேலும் பயன் தரும் விடயங்கள் மன்றக் கூட்டத்தில் சேர்க்கப்படும். மன்றப் பொறுப்பாசிரியர் திரு. ச. ஆனந்ததியாகர் அவர்கட்கும், ஊக்கம் தந்துதவிய சகலருக்கும் எமது மன்றம் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமையுடையது.

வணக்கம்

செல்வன். சு. அரசரட்ணம்
*(மாணவர் மன்றத் தலைவர்)*

செல்வன் ஆ. சிவராம்
*(மாணவர் மன்றச் செயலாளர்)*

உ

குகமயம்

கொழும்பு

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "தொண்டரணி"

தொடர்பு { எங்கள் தொ. அ. 1
தங்கள்..... .........

131, கியூ வீதி,
கொழும்பு 2.

31-12-1969.

தோற்றம் :
21 - 7 - 69

காவலர்கள் :

ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்த ராஜா
B.Sc. Hons. Lond., Ph.D. Cantab.

கு. குருசாமி
B.A. Hons. (Lond)

ம. சி. சிதம்பரப்பிள்ளை

சி. திருநாவுக்கரசு
சைவ இளவல்

சற்சொரூபவதி நாதன்
B. Sc.

★

தளபதி :
க. பாலசுப்பிரமணியம்

தானைத் தலைவர் :
சு. லிங்கேஸ்வரன்

அணிச் செயலாளர் :
வ. இ. இராமநாதன்

அணிப் பொருளாளர் :
இந்திராணி கண்ணலிங்கம்

★

பேரன்புமிக்க சைவப் பெருமக்களே !

சைவ இளைஞர்கள் மத்தியில் இளம்பிராயத்திலே இருந்து மாசு மறுவற்ற தெய்வீகப்பற்று, சகோதரத்துவம் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு முதலியனவற்றை வளர்க்கும் பொருட்டு இவ் வியக்கம் ' தொண்டரணி '' என்ற நாமத்துடன் 21-7-69 திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் எமது சங்க பொதுச் செயலாளர் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 21-7-69 திங்கட்கிழமை எமது சங்க வரலாற்றில் மட்டுமல்லாது — உலக வரலாற்றிலேயே என்றும் மறக்க முடியாத ஓர் பொன்னுளாகும்.

இவ்வணிக்குரிய விதிமுறைகள் அமைக்கப்பெற்று 23-7-69 புதன்கிழமை மாலை நடைபெற்ற சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசைத் தினத்தன்று மங்களகரமும் — சுப முகூர்த்தமும் அமைந்த 7.32 மணிக்கு கேணல். இரா. சபாநாயகம் அவர்களது ஆசியுரையுடனும் அறிவுரையுடனும் பொதுமக்கள் முன்னிலையில் தொண்டர்களுக்குரிய அடையாளச் சின்னம் அணிவிக்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

தாரக மந்திரம் : ''ஒழுக்கம் உயர்வு தரும்'', ''பணி செய்; பலனை எதிர்பாராதே !,'' ''எம் கடன் பணி செய்து கிடப்பதே'', ''போற்றுபவர் போற்றட்டும் - தூற்றுபவர் தூற்றட்டும்'' கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு'', ஆகியனவை எமது தாரக மந்திரங்கள்.

கடமை ★ கண்ணியம் ★ கட்டுப்பாடு

முக்கிய நோக்கங்களில் சில :

(அ) சமய விதிமுறைகளுக்கு அமைந்து ஒழுகுதல்.

(ஆ) சங்கத்தினுல் கொண்டாடப்படும் குருபூசைகள் — விழாக்கள் — மகாநாடுகள், சங்கம் மேற்கொள்ளும் சமய சரித்திர சுற்றுலாக்கள் ஆகிய வைபவங்களின்போது அமைதியையும் ஒழுங்கையும் அன்பு வழியில் நிலைநாட்டல்.

(இ) சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் நோன்மதி தினப் பாடசாலையில் பிள்ளைகளுக்குச் சமயக் கல்வி பயிற்றுவித்தல்.

(ஈ) கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் சமய விழாக்களிலும், மற்றும் சமயஸ்தாபனங்களில் நடைபெறும் விழாக்களிலும், எமது அணியின் சேவை கோரப்பட்டால் பங்கு கொள்ளுதல்.

(உ) சைவ முன்னேற்றச் சங்கத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் குடும்பங்களில் நடைபெறும் நன்மை-தீமைகளில் பங்கு கொண்டு ஆவன செய்தல்

(ஊ) சிரமதான முகாங்களை ஏற்பாடு செய்தல்.

(எ) சிரமதான இயக்கங்களில் ஈடுபடல்.

(ஏ) சேமிப்பு இயக்கங்களை ஆரம்பித்தல்.

(ஐ) "முதலுதவி" - "சுகாதாரக் கல்வி" பயிற்றுவித்தல்.

(ஒ) "இல்ல பஜனை" செய்தல்.

அடையாளச்சின்னம் :

பொதுமக்கள் அணித் தொண்டர்களை இலகுவில் அறியக்கூடியதாக அணியின் பெயரும்-இலச்சினையும் - இலக்கமும் பொறிக்கப்பட்ட விசேஷ அடையாளச் சின்னம் சைவ முன்னேற்றச் சங்கத்தினுல் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது மட்டுமே அடையாளச் சின்னத்தை அணிய அனுமதிக்கப்படுவர். பொது மக்கள் காணக்கூடியதாக அடையாளச் சின்னத்தையும் — இலக்கத்தையும் தொண்டர்கள் தங்கள் மேலங்கியின் இடதுபுறத்தில் அணியும்படி வேண்டப்பட்டுள்ளனர். அணித் தொண்டர்களின் திறமை - சேவை - அனுபவம் பயிற்சிகளுக்கு ஏற்ப தனித்தனி அடையாளச் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அணித் தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அணிவதற்கேற்ற விசேஷ அணியுடையும் வழங்குவதற்கு எண்ணியுள்ளோம்.

பயிற்சி வகுப்புகள் :

மாதந்தோறும் தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடாத்தி வருகின்றோம். சமயப் பெரியார்களையும் - மற்றும் கல்விமான்களையும் அழைப்பித்து தொண்டர்களுக்குரிய கடமைகள்

பற்றியும் - கடமை புரியும் காலங்களில் தொண்டர்கள் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் அமைந்து, தம் மத்தியில் சகோதர மனப்பான்மையுடன் சேவையாற்ற வேண்டிய அவசியத்தைப் பற்றியும்- தொண்டர்கள் எந்தக் கட்டத்திலும் பொறுமையை இழக்கவோ - உணர்ச்சி வசப்படவோ - ஆத்திரப்படவோ - வன்சொற்களைப் பிரயோகிக்கவோ தங்களை ஆளாக்கக்கூடாது என்ற அமுத வாக்குகளும் போதிக்கப்படுவதுடன் - எதிர்காலத்தில், தொண்டர்களுக்கு முதலுதவி - சுகாதாரக் கல்வி வகுப்புகளும் நடாத்துவதற்கு ஏற்ற திட்டமிட்டுள்ளோம்.

## ஆற்றிய தொண்டுகள் :

இவ்வணி ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாத காலங்கள் மட்டுமே. இருந்தபோதும் - எம்மால் இயன்ற - பலருக்கும் பயனளிக்கத்தக்க பலவகையில் தொண்டாற்றி வருகின்றோம்.

## சிரமதானம் :

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அன்பு அழைப்பை ஏற்று இரத்மலானையிலுள்ள காந்தி நூற்றாண்டு விழாவுக்கு அமைக்கப் பெற்ற ஆச்சிரமம் அமைப்பதற்கும் - அவ் எல்லையைத் துப்புரவு செய்வதற்கும், எமது தொண்டர்கள் முன்னின்று உழைத்தார்கள். அத்துடன் கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் சுற்றுப்புறத்தை சீர் செய்தும் - துப்புரவாக்கியும் - கோவிலின் வடபுற பின் வேலி பேணுவாரற்று - கவனியாது சீரழிந்து கிடந்தபோது எமது தொண்டர்கள் சிரமதான மூலம் அப்பின்புற வேலியைச் சீர்செய்தும் உள்ளார்கள். இச் சிரமதான காலங்களில் தொண்டரணிக் காவலர்களில் ஒருவரான கலாநிதி. ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள் தவறாது கலந்து கொண்டு தொண்டாற்றியும் - எமக்கு ஊக்கமளித்தும் வந்துள்ளார். அவரது சேவை, எமது தொண்டர்களுக்கு முன்மாதிரியாக - வழிகாட்டியாக அமைந்துள்ளது.

வருங்காலங்களில் பல சிரமதான இயக்கங்களை நாட்டிலுள்ள பல்வேறு சமூக சேவையாளர்களுடன் சென்று நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.

## சமூக சேவை :

எமது சங்க அங்கத்தவர்கள் ஆதரவாளர்களின் குடும்பங்களில் நடைபெறும் மங்களகர வைபவங்களில் கலந்து ஆவன செய்து உதவி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது எமது அங்கத்தவர் ஆதரவாளர்களின் குடும்பங்களில் நடைபெறும் மரணச் சடங்குகளில் எமது தொண்டர்கள் பங்கு கொண்டு சைவ சமய ஆசாரப்படி மரணச் சடங்குகள் நிறைவேற தேவார திருவாசக முதலான பாடல்களைப்பாடி உதவுவதுடன், சிவபதமடைந்தவர்களினது குடும்பத்தார்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் - ஆறுதலையும் தெரிவித்துவருகின்றோம்.

இதுவரை, சைவப்பெருமக்களுக்கு, எமது அணியின் அமைப்பைப்பற்றி எடுத்துச்சொன்னேன். ஈற்றில் எமது தொண்டுள்ளம்படைத்த தொண்டர்களுக்கு ஒரு சில வார்த்தைகூறி விடைபெற விழைகின்றேன்.

தொண்டா !

நாம் செல்லும் நெறி நால்வர் நெறி ! நாம் செல்லும் வழி நேர்வழி ! நாம் கடைப்பிடிக்கும் இலட்சியம் புனிதமானது ! எம்மை வழி நடத்த இணையற்ற இறையருள் உண்டு. அனுபவ மிக்க காவலர்கள் உண்டு. ஆற்றல் மிக்க தளபதி — தானைத்தலைவர் உண்டு. இத்தனைக்கும் மேலான சைவப்பெருமக்களின் பேராதரவுண்டு.

நாம் செல்லும் இலட்சியப் பாதையில் சூழ்ச்சிக்காரர்களும், சுயநலவாதிகளும் குறுக்கிடத்தான் செய்வார்கள். இத்தனைக்கும் அஞ்சாது சத்தியமே இலட்சியமாகக் கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றுவோம்.

எமது 'இலைமறை காய்' போன்ற இதய சுத்தியான சேவையை - தொண்டை நாடறியும் நாள் வெகு தூரத்திலில்லை. கட்டுண்போம் ! பொறுத்திருப்போம் ! கடமையைச் செய்வோம் ! காலம் கனியும்; காலம் கனியும் போது கனிபறித்திடுவோம் !

வணக்கம்.

உங்கள் சேவையில் தொண்டன்

**வ. இ. இராமநாதன்**


தொண்டரணிச் செயலாளர்.

## பெருமையடைகின்றோம் ! !

எமது சங்கத்தின் அங்கத்தவரும், முன்னாள் துணைச் செயலாளரும் - நால்வர் சமய பாடசாலை ஆசிரியருமான, திரு. ப. தில்லைநடராசா அவர்கள், கொழும்பு வைத்தியக் கல்லூரியிலிருந்து டாக்டராகத் தேறியமை கேட்டு நாம் பெருமை அடைகின்றோம். இறை பணியால் ஊக்கமுள்ள இளைஞர் பலரை உருவாக்கிய எமது சங்கம் **Dr.** ப. தில்லைநடராசா அவர்களையும் ஊருக்கு உழைக்கும் ஏழை பங்காளனாக உருவாக்கியதையிட்டு பெருமையடைகின்றது. அவரது சேவை அன்பு வழியில் — நால்வர் நெறியில் நாட்டுக்கு அமைய நாம் போற்றுகின்றோம் !

**கொழும்பு, கொம்பனித்தெரு - சைவ முன்னேற்றச் சங்கம்.**

# "தொண்டரணி"



கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க "தொண்டரணி" உறுப்பினர்கள்.

### கொழும்பு, கொம்பனித்தெரு

# சைவ முன்னேற்றச்சங்க சமயப் பிரச்சார சபை

## வருடாந்த அறிக்கை

ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயாவின் நூற்றாண்டு ஆரம்பதின விழாவாகிய அறுபத் தொன்பதாம் ஆண்டு எங்கள் பிரச்சாரசபைக்கும் ஓர் சுப தினமாகும். இறைவன் நாமத்தைப் ''பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே'' என்றதற்கிணங்க, எங்கள் சபை அரன் நாமத்தை பஜனை மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும், சைவ வாழ் மக்கள் மத்தியில் பலன் கருதா வகையில் ஆற்றியுள்ளது.

தாயனைய சைவ சமயத்தின் பல்திறப்பட்ட நற்கருத்துக்கள் உள பிரச்சார சபைக் குழுவினர், பிரதானமாக,

| | |
|---|---|
| சைவ இளவல். திரு. சி. திருநாவுக்கரசு | திரு. வே. சுப்பிரமணியம் |
| திரு. கா. சிவகுருநாதன் | திரு. சு. லிங்கேஸ்வரன் |
| திரு. வே. பெரியசாமி | திரு. சோ. க. வேலாயுதர் |
| திரு. மு. சிவராசன் | திரு. இ. பத்மநாதன் |

செல்வி. சீதாதேவி கணபதிப்பிள்ளை

ஆகியோர், இலங்கையில் விசேடமாக, ஸ்ரீ வரதாஜபெருமாள் கோவில் ஹவலக் வீதி வெள்ளவத்தை, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் — நீர் கொழும்பு; ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் — பீரிதாவளை-மாத்தளை, மாகோ மத்திய மகா வித்தியாலயம் பரிசளிப்பு விழா, விசேட வைபவங்களில் கலந்துள்ளார்கள். பிரச்சாரசபைக் குழுவின் தலைவர் என்ற முறையில் அடியேனும் பங்கு பற்றி உரையாற்ற எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருள் கிடைத்துள்ளது.

கேட்டாரை மயக்க வைக்கும் கீதத்தினல் மெய்மறக்கச் செய்தும் இறை பக்தியை இசையுடன் கலந்தும் சைவ மக்கட்கு எங்கள் சபை நல்கி வருகின்றது. பஜனையின் உண்மை யான பொருளை எழுத்தினல் விளக்குவதிலும் எங்கள் பஜனையில் கலந்து கொள்வதினல் இறைவனை எவ்வாறு எளிதில் உணரலாம் என்பது தெரிய வரும்.

எங்கள் பிரச்சாரசபையில் சேர்ந்து பலன் கருதாது கடமை செய்ய சைவ அன்பர் களுடைய ஆதரவை அன்புடன் வேண்டுகின்றோம்.

நால்வர் நெறி நின்று உழைக்கும் சிறுர்களும் கொழும்பு வாழ் சைவ மக்களும் தரும் பேராதரவு பெருக வேண்டும்! அன்பு வளரவும், அரனடி போற்றவும் இன்புற நாம் எடுத்த இந் நற்கருமத்தை துன்பம் வரினும் துயரம் களைந்து என்றும் போற்றி! போற்றி என வாழ்த்தி ஈசனடி நிற்போம்!

திருச்சிற்றம்பலம்

சோ. க. வேலாயுதர்
சமயப் பிரச்சாரசபைச் செயலாளர்

ம. சி. சிதம்பரப்பிள்ளை
சமயப் பிரச்சாரசபைத் தலைவர்.

உ

கொழும்பு - கொம்பனித்தெரு

# சைவ முன்னேற்றச் சங்கம்

## பதினாறுவது ஆண்டு அறிக்கை

## 1968 - 1969

சிவநெறியையும் – செந்தமிழையும் பேணி வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம், கடந்த பதினைந்து ஆண்டுகளாக தன்னாலான நற்பணிகளை நாட்டுக்குச் செய்து, நல்லோரின் நல்லாதரவால், பதினாறு வயதுப் பருவக் குமரனாக இன்று திகழ்கின்றான் !

இவ்விதம் பல்லாற்றாலும் சிறப்புற்று சேவையாற்றுவதற்கு, ஆர்வமும் - அயராத உழைப்பும் நல்கிய அன்புப் பெருமக்கள் அனைவர்க்கும், சிரம் தாழ்த்தி - கரம் கூப்பி எமது என்றும் மறவா நன்றியை முதற்கண் கூறுகின்றோம். வருங்காலத்திலும் எமது சங்கம் மென்மேலும் சிறப்புற்று சிவநெறிக்கும்-செந்தமிழுக்கும் நற்பணியாற்ற தங்கள் நல்லாதரவை நல்குமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**சங்கத்தின் பணிகள் :**

இச் சங்கம் எந்த நன் நோக்கத்தை இலட்சியமாய்க் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோ- அந் நோக்கத்தைப் பேணி வளர்க்கும் முயற்சியில் பல மைல் கற்களைத் தாண்டி முன்னேறி வருகின்றோம். கடந்த 15 ஆண்டுகளிலும் இச் சங்கத்தின் தொண்டு படிப்படியாக வளர்ந்து, இன்று நாம் ஒரு வருடாந்தப் பத்திரிகையான '' நால்வர் நெறி '' யை பிரசுரிக்கவும், பொதுக் கூட்டங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள், குருபூசைகள் முதலியன நடாத்தவும், சிரமதான இயக்கப் பணிபுரியவும், சிறுவர்கட்கு சமயக் கல்வி ஊட்டச் சமயப் பாடசாலை நடாத்தவும் கூடியதாக இருக்கின்றது. இன்னும் தாய்நாட்டிலிருந்து வரும் சமயப் பெரியார்களை வரவழைத்து சிறப்புச் சொற்பெருக்காற்றுவித்தும், இந்திய தூதரகத்தாரிடமிருந்து எமது சமய சரித்திரங்களை எடுத்துரைக்கும் படங்களை எடுப்பித்து இலவசமாக பொதுமக்களுக்கு காண்பித்தும் மற்றும் சகோதரசங்கங்களால் கொண்டாடப்பட்டு வரும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து ஆவன உதவி செய்தும், இல்ல பஜனையை இல்லங்கள் தோறும் நடாத்தியும், இளைஞர்களை ஒன்றுபடுத்தி நற்பணியாற்ற '' தொண்டரணி '' ஒன்றை ஆரம்பித்தும்- மற்றும் பல வகையிலும் சிறப்புற்று எம்மாலான பல தொண்டுகளைச் செய்து வருகின்றோம்.

குறிப்பிடத்தக்க இச் சேவைகளும் இன்னும் பலவும் எமது சங்கத்தின் பணிகளாக விளங்கினும், இப் பணிகள் போதுமானவை யென நாம் திருப்தியுற்று விடவில்லை.

**சங்கப் பணிமனை :**

இதுவரைகாலும் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலே எமது பணிமனையாக விளங்கி வருகின்றது. இருந்த போதிலும்-எதிர்காலத்தில் எமது சங்கத்தின் சேவை மென்மேலும் விருத்தியடைய வேண்

நாதனுய் உலகமெல்லாம் நம்பிரான் எனவும் நின்ற
பாதனும் பரமயோகி பலபல திறத்தினுலும்
பேதனுய்த் தோன்றினுனைப் பெருவேளூர் பேணினுனே
ஓதநா வுடையனுகி உரைக்குமா றுரைக்கின்றேனே

— திருநாவுக்கரசர்


ஜவுளி வியாபாரிகளுக்கு

# ஓர் வரப்பிரசாதம்

## கைத்தறி சாரிகள் - பெட்ஷீட்ஸ், பிஜாமா, ஷேர்ட்டிங்ஸ், டவல்கள், சாரங்கள்

ஆகியன, பல தினுசுகளில் பல்வேறு டிசைன்களைக்கொண்ட

சிறந்த தயாரிப்புகளாகும்.

இன்றே உங்கள் **ஜவுளிகளைத்** தெரிவு செய்ய
விரைந்து வாருங்கள்.

கிடைக்குமிடம் :—

# விலாசினி அன் கோ.,

உள்ளூர் புடவை உற்பத்தியாளர்களும், ஏக விநியோகஸ்தர்களும்.

**146, கெய்ஸர் வீதி, கொழும்பு-11.**

தொலைபேசி : 24719 - 27196

திருவடி யேசிவ மாவது; தேரில்
திருவடி யேசிவ லோகம்; சிந்திக்கில்
திருவடி யேசெர் கதியது; செப்பில்
திருவடி யேதஞ்சம்; உள்தெளி வார்க்கே

— திருமூலர்

வியாபாரிகளே! பாவனையாளர்களே!! பாவித்துப் பயன் பெற்றுவிட்டீர்களா?
கொள்முதல் செய்து தகுந்த லாபம் பெற்றீர்களா?

**முத்தூஸ் போட்டோ சாரங்கள்**

*பாட்டாளி முதல் பணக்காரர்வரை பாவிக்கும் பாங்கான*

**சாரங்கள்**

உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்

**க. நாகமுத்து அன் சன்ஸ்**

(அனுமதி பெற்ற அடகு நகைக்காரரும், தரகரும்)

**111, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு–11.**

கிளைகள் : வவுனியா, ருவான்வெல.

**அன்பர்களே !** **அபிமானிகளே ! !**

சோம்பலை நீக்கி சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருவது **M. S.** பட்டணம் பொடி. மேலும் எங்களால் தயார் செய்யப்படும் காரம், மணம், குணம், நிறம் இவையாவும் ஒருங்கே அமையப்பெற்ற மூக்குப் பொடி வகைகளும், தொட்டால் கைமணக்கும், சுவைத்தால் வாய் இனிக்கும் வாசனைப் புகையிலைகளும், அறுசுவையும், நறு மணமும் ஒருங்கே அமையப் பெற்ற பீடாகுளிகை, றேஸ் கொப்பரு, வாசனைப்பாக்கு, சீவல் பாக்கு வகைகளும், மூளைக்கு வளர்ச்சியையும், கண்ணுக்கு குளிர்ச்சியையும் நறுமணத்தையும் தன்னகத்தே அடக்கியதுமான சீயாக்காய்ப் பவுடர்களும் தயாரித்து மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்து வருகின்றோம்.

*தயாரிக்குமிடம்:—*

**சந்திரா இண்டஸ்ட்ரீஸ்**
118/22, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13.

*விற்பனை செய்யுமிடம்:—*

**தனலெட்சுமி & சரஸ்வதி பொடி ஸ்ரோர்ஸ்**
ஆதமலி கட்டடம்,
2, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.

"யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனை வந்துறு மாறே".

— மாணிக்கவாசகர்

CHEAPEST HOUSE FOR QUALITY

TEXTILES

IN

Latest Designs and also for MANIPURI SAREES

# RATNAM'S

IMPORTERS, WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

**146, 2nd CROSS STREET, COLOMBO-11**

---

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்".

— வள்ளுவர்

With Best Compliments From

**S.S.V. PERAMANAYAGAM PILLAI**

IMPORTER & EXPORTER

General Merchant, Commission Agent & Estate Supplier, Dealer in Oilman Goods, Hardware and Curry Stuffs.

**No. 161, 5th Cross Street, Colombo-11.**

Bankers:
**CHARTERED BANK**

ESTD: 1890 PHONE: **24577**

---

"அறத்தான் வருவதே இன்பம்;
மற்றெல்லாம் புறத்த புகழும் இல"

— வள்ளுவர்

WITH THE BEST COMPLIMENTS

OF

# Neelambika's

456, DEANS ROAD,
COLOMBO-10.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனுக உண்பலிக் குழல்வானே
காடுநின் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

— சுந்தரர்


With the Best Compliments
of

**LANKA SYNTHETIC INDUSTRIES LIMITED**

**TEKSYN**

**LADY CATHERINE'S DRIVE**
**RATMALANA**


உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே !

— அருணகிரிநாதர்


With the Best Compliments
from

**JOY JEWELLERS**

**JEWELLERS - GOLD & DIAMOND MERCHANTS**

82, Sea Street — Colombo 11.

டியிருப்பதாலும், எமது சங்கத்திற்கு ஒரு தனிமையான-நிரந்தரமான பணிமனை இருப் பது அவசியம்.

எமது சங்கத்தின் பணிமனைக்கென நிரந்தர மான ஒரு கட்டடம் ஒன்று கொம்பனித்தெரு விலே கிடைக்கக்கூடியதான வழிவகைகளை மேற்கொண்டு வருகின்றோம். இம் முயற்சி யில் சைவப் பெருமக்களின் பூரண ஆதரவு எமக்கு கிடைக்கும் என்பது திண்ணம். எமக் கென ஒரு கட்டடம் கிடைக்கப்பெற்றதும் சங்கம் சக்தி வாய்ந்த ஒரு நிறுவனமாக வளர்ச்சியுற வாய்ப்பேற்படும்.

**கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலும் கொம்பனித்தெரு சைவ முன்னேற் றச் சங்கமும்**

கொம்பனித் தெருவில் வாழக்கூடிய சைவச் சிறுர்கள் சமயக் கல்வி பயில் வதற்கு ஏற்ற ஓர் சைவப் பாடசாலை இல் லாது, பிறமத சூழலில் சிக்கி சீரழிந்த காலத் தில் சில சைவப் பெரியார்களின் முயற்சியால் நந்தன வருடம் பங்குனித் திங்கள் 16ந் நாள் (29-3-53) ஞாயிற்றுக் கிழமை கொம்பனித் தெரு குமரன் குடி கொண்டிருக்கும் தெய்வச் சந்நிதியில் இச் சைவ முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

எந்த புனித லட்சியத்தை நோக்காகக் கொண்டு இச் சங்கத்தை ஆரம்பித்தார்களோ அதில் எள்ளளவும் பிசகாமல் நாம் இன்று வரை செயல் ஆற்றி வருகின்றோம். முருகன் சந்நிதியில் முருகன் அருள் பெற்று சங்கம் வளர்ந்தது. சங்கத்தால் கோவில் வளர்ச்சி யடைந்தது — சங்கத்தால் நல்லவரைக் காண வும் — பேணவும் வாய்ப்பு கிடைத்து நாம் உயர்வு பெற்றோம்; உள்ளம் நிறைவு பெற் றோம்.

எமது சங்கத்தைப் பொறுத்தவரையில் எமது சமய போதனைகளை — சாதனையில் செயல்படுத்த ஒரு ஆலயம் மிகவும் அவசியம் என்பதை நன்குணருகின்றோம். அதிலும் குறிப்பாக கொம்பனித்தெருவிலே வாழக் கூடிய சைவப் பெருமக்கள் தங்கள் குல தெய் வத்தை - தமிழ் தெய்வத்தை வாயாரப்பாடி- மனமார நினைத்துருகி வழிபடக்கூடிய ஒரே ஒரு கோவில்தான், ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில். எமக்கென்று கண்ணே போன்று கிடைத்த ஒன்றே ஒன்ருன கோவிலை-பழமை யும் புதுமையும் நிறைந்த குமரன் குடி கொண்டிருக்கும் கோவிலை - உருக்குலைய விடாது-பேணிப் பாதுகாத்து - நிர்வகித்து வருங்கால எமது சந்ததிகள் வாழையடி வாழையாக வாழ்த்தி வணங்க வாய்ப்பு அழிக்க வேண்டு மென்பதுதான் சைவ முன் னேற்றச் சங்கத்தின் ஒரே ஒரு ஆசையும்-ஆவ லும். இதை உணர்ந்துதான் இக் கோவிலின் சுற்றுப்பிரகார திருப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டதும்-மற்றய சபைகளிருந்தும் எமது சங் கம் சுமார் ஏழாயிரம் ரூபா செலவில் ''சமய குரவர்களுக்கு'' தனிக் கோவில் கட்ட முன் வந்தது. இதை யாரும் மறுக்கவோ-மறைக் கவோ முற்பட்டால் மனச்சாட்சி இடம் தராது.

சைவ முன்னேற்றச் சங்கத்தைப் பொறுத் தவரை ஆலயப் பொறுப்பையேற்று ஆட்சி செய்ய வேண்டுமென்ற ஆசையோ — ஆவலோ கிடையாது. எவர் கைபடக் குத் தினுலும் — அரிசி ஆகவேண்டுமென்பது தான் எமது குறிக்கோள். குமரன் குடிகொண்டிருக் கும் கோவிலில் ஓர் சிறந்த அறக் காவலர் சபை ஏற்பட வேண்டும் — கோவிலுக் கென அமைந்தவிதிமுறைகள் உருவாக்கவேண்டும். கோவில் பணம் கோவிலின் பெயரிலுள்ள வங்கிக் கணக்கில் இருக்க வேண்டும்—ஆண்டு தோறும் வரவு செலவுகள் பொது மக்களுக்கு காண்பிக்கப்படவேண்டும் — சமயத்திற்கு புறம்பான நிகழ்ச்சிகளை கோவிலில் இடம் பெறுமல் செய்ய வேண்டும், தேவையற்ற ஆடம்பர செலவுகளைத் தவிர்க்க வேண்டும், தொட்ட இடத்திலும் விட்ட இடத்திலும் இருக்கும் திருப்பணிகள் முடிவுற வேண்டும்— கட்டிய காலந்தொட்டு இற்றைவரை நடை பெருத கும்பாபிஷேகம் நடைபெற வேண் டும் — முருகன் துணை நம்மவர்க்கு கிடைக்க வேண்டும் — இதுதான் சைவ முன்னேற்றச் சங்கத்தின் அந்தரங்க ஆவல்.

இப் புனிதமான இலட்சியக் கனவு நிறை வேற வேண்டுமென்பதற்காகத்தான் ''சைவ முன்னேற்றச் சங்கம் எத்தனையோ சோத னைக்கு ஆளாக வேண்டி நேரிட்டது.

# எமது உளங்கனிந்த நன்றிக்கு உரியோர்!

அ. அன்பெனும் அழைப்பை ஏற்று வருகை தந்து எமது விழாக்களில் தலைமை தாங்கியும், அறிவுரை வழங்கியும் சிறப்பித்த பெருமக்கள்.

ஆ. ஆதரவும் அன்பும் காட்டி எமது கருமங்கள் முட்டின்றி முடிவுற உதவிய அன்புப் பெருமக்கள்.

இ. இன்முகத்துடன் குருபூசைகளையும்—விழாக்களையும் சிறப்புடன் கொண்டாடிய உபயகாரர்கள்.

ஈ. ஈழத்துச் செய்தி இதழ்கள்.

உ. உற்சாகத்துடன் விளம்பரங்கள் சேகரித்துத்தந்து உதவிய அன்பர்கள்.

ஊ. ஊக்கமும் உழைப்பும் நல்கி எமது சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்கள்.

எ. எழிலுடன் "நால்வர் நெறி" இலங்கிட விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்கள்.

ஏ. ஏற்றமுடன் "நால்வர் நெறி" மலர் மலர்ந்திட ஆசிகள், அறவுரைகள், அறிவுரைகள், கவிதைகள், கட்டுரைகள், வழங்கிய அறிஞர்கள்.

ஐ. ஐயம் திரிபற அறிவு புகட்டும் "நால்வர் சமயபாடசாலை" ஆசிரியர்கள்.

ஒ. ஒப்பற்ற மலராக "நால்வர் நெறியை" அச்சுவாகன மேற்றித் தந்துதவிய அமிற்றி அச்சக உரிமையாளர் திரு. எஸ். கே. அருள்பிரகாசம் அவர்கள்.

ஓ. ஓரணியராய் நின்று எம்பணிகளைச் செவ்விதாக்கிய தொண்டர்கள்.

ஔ. ஔவை காட்டிய வழியில் ஒழுகிய — ஒழுக்க சீலர்களாகத் திகழும் எமது பாடசாலை மாணவர்கள்.

வணக்கம்

க. பாலசுப்பிரமணியம்
(கௌரவ பொதுச்செயலாளர்)
31—12—69

சங்கப் பணிமனை,
131, கியூ வீதி,
கொழும்பு-2.

உ



ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

— அருணகிரிநாதர்


Space Donated

by

A Well Wisher

அழுத குழந்தை தன்னை அணைக்கும் கைகளைப் புரிந்து கொண்டது. உலகம் தெரியாது. பேசவும் தெரியாது. பிறர் தூக்கியதனுல் ஓலமிட்டது. தாய் தூக்கியதனுல் அமைதி கொண்டது. நினைவு பிறப்பதற்கு முன்னுலேயே உறவு பிறந்து விட்டது. அறிவு தெளிவதற்கு முன்னுலேயே உறவுதெரிந்து விட்டது. பாம்பு கடிக்கும்; தேள் கொட்டும் என்று தெரியாமல் தொடுகிறது. உலகத்தை அறியாமல் தவழ்கிறது ஆனுல் —

தாயின் கரங்களுக்கும் பிறருடைய கரங்களுக்கும் பேதம் மட்டும் தெரிகிறது. சிந்திக்கத் தெரியாத கோழி தன் குஞ்சுகளைப் புரிந்து கொள்கிறது. பகுத்தறிவு இல்லாத குரங்குகள் தங்கள் குட்டிகளை மார்பில் சுமந்து செல்கின்றன. அறிவிலே மனிதர்கள் உயர்ந்து விட்டார்கள். உறவிலே மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் எல்லோருமே ஒன்ருக இருக்கிருர்கள். தொடர்பில்லாத ஓர் உணர்ச்சி.

"அதோ அந்த வீட்டில் யாரோ இறந்து போனுர்" என்று சொன்னேன். கேட்டவன் "ஐயோ, பாவம்!" என்று சொல்லி விட்டுத் தன் வழியே போனுன்.

"இறந்தவன் உன் மகன்தானும்" என்றேன். ஐயோ, அம்மா! என்று அலறினுன்; முட்டிக் கொண்டான்; மோதிக் கொண்டான்; நடை பெற்றது ஒரே சாவுதான்.

யாரோ என்ருல் கண்ணீர் வரவில்லை; உறவு என்ருல் ஓடோடி வருகிறது.

பிறந்த பிள்ளையால் பிறந்த உறவு; தாயை வளர்க்கிறது.

வந்த மனைவியோடு வந்த உறவு; கணவனை வளர்க்கிறது.

காதலால் விளையும் உறவு பருவங்கொண்ட பயிரைப்போல் அறுவடையாகிவிடுகிறது.

பணத்தால் வரும் உறவு பணம் போகும்போது தானும் போய்விடுகிறது.

செல்வாக்கினுல் வரும் உறவு செல்வம் தேயும்போது தானும் தேய்ந்து விடுகிறது.

பிறப்போடு வரும் உறவு வாழ்க்கையில் ஏற்படும் பிணக்குகளால் சிதைந்து விடுகிறது.

பாசத்திலும் ஆசையிலும் வரும் உறவுகள் ......... (பழுதுபடுகிறது).

ஆனுல் அவலத்திலும், ஓலத்திலும், துயரத்திலும் வரும் உறவு தியாகத்தோடு வருகிறது.

SPACE DONATED
BY
s. k. arudpragasam

121, Malay Street,
Colombo 2.

Printed at Amity Printers, 71 Justice Akbar Mawatha Colombo 2.

செங்கே ழடுத்த சிவனடிவேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிருதோளும் பதுமலர்
கொங்கேய் தரளஞ் சொரியுஞ் செங்கோடை குமரனென
எங்கே நினைப்பினு மங்கேமுன் வந்தெதிர்நிற்பனே.

## உங்கள் வீட்டுப் பாவனைக்கு நீங்கள்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE-DOLLAR
DOLLAR BRAND

# டொலர்

இலச்சினை பொறித்த

அலுமினியம், எவர்சில்வர், பித்தளை
பாத்திரங்களைத் தெரிவுசெய்தால்

## நீடித்த உழைப்பிற்கும் உறுதிக்கும்

உத்தரவாதமுள்ளவற்றை
வாங்குகிறீர்களென்று பொருள்

ஈடு இணையற்ற எம்நாட்டுத் தொழிலுக்கு துணை செய்து
அதை வளம்படுத்த முன்வாரீர்!!

## டொலர் கார்ப்பொரேஷன்
**14, டாம் வீதி, கொழும்பு-12.**

தொலைபேசி :
31910

தொழில் நிலையம் :
மாவிட்டபுரம்

Printers
Publishers
Stationers

specialists in typesettings

telephone 20192

amity printers

71, JUSTICE AKBAR MAWATHA, COLOMBO 2.